Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2011

# இருக்கிறம்

வார இதழ்

ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 31 | 31 ஒக்டோபர் 2011 | விலை: ரூபா 30.00



## பாதுகாப்பில் வெடித்த துப்பாக்கிகள்



## குரும்பசிட்டி: கலைந்து போகும் மீள்குடியேற்றக் கனவுகள்

சமூக அவலங்களை துணிச்சலுடன் வெளிக்கொணரும் ஒரேயொரு தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறம் வார இதழ்

**தொடர்புகளுக்கு...**

ஆசிரியர் பீடம்:
தொ.பேசி : 011 3150836
தொ.நகல் : 011 2585190
கட்டுரை/ஆக்கங்கள்:
weeklyirukkiram@gmail.com
செய்திகள்/படங்கள்:
newsirukkiram@gmail.com
விமர்சனங்கள்/ஆலோசனைகள்:
irukiram@gmail.com
விளம்பரப்பிரிவு:
011 5322730
விநியோகப்பிரிவு:
011 5322781
இணையத்தளம்:
www.irukkiram.tk
தபால் முகவரி:
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு–07.

# இப்படிச் சொல்லுகினம் பாருங்கோ!



'எதிர்க்கட்சிகளின் பலம் மக்களின் பலமாக கருதப்பட வேண்டும். எதிர்க்கட்சிகள் பலவீன மடைவதனால் மக்கள் பாதிக்கப்படக் கூடும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சில கருத்து முரண்பாடுகள் நிலவி வருவதனை மறுப்பதற்கில்லை. எனினும், ஆளும் கட்சிக்குள் அதனை விட பாரிய குழப்ப நிலைமைகள் காணப்படுகின்றன. இதன் விளைவே துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள். சில அமைச்சர்கள் அரசாங்கத்திற்குள் எவ்வித மறுப்பினையும் தெரிவிக்காத போதிலும், வெளியில் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர்'

★ கரு ஜயசூரிய எம்.பி.
★ 23 ஒக்டோபர் 2011
(ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்)



'துமிந்த எனது வயதுப் பிரிவைச் சேர்ந்தவர் அல்லர். எனவே அவரை நண்பராக ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதியுடன் ஏன் கடமையாற்றமுடியாது? நான் எவரையும் பாதுகாக்க முயற்சிக்கவும் இல்லை எவருக்கும் பயந்து செயற்படவுமில்லை. துமிந்த சில்வாவை விடவும் பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரவை நீண்ட காலமாகத் தெரியும்'

★ கோத்தபாய ராஜபக்ஷ
★ 24 ஒக்டோபர் 2011
(ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்...)



'ஆயுத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தற்போதைய அரசியல் முறைமையில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த முறைமை விரைவில் இல்லாதொழிக்கப்படும். மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொள்ளாதவர்களினால் நீண்ட காலத்திற்கு அரசியல் நடத்த முடியாது. இளைய அரசியல்வாதி என்ற ரீதியில் வன்முறை அரசியலை வெறுக்கின்றேன்'


★ நாமல் ராஜபக்ஷ எம்.பி.
★ 23 ஒக்டோபர் 2011
(நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது...)



'கடந்த காலங்களில் ஜனாதிபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் எம்மையும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர் பதவிக்கு நியமனம் செய்திருந்தார். தற்போது அதனைப் புறந்தள்ளி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை ஜனாதிபதி நியமித்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி அல்லர். அவர் ஜனாதிபதியினால் நேரடியாக நியமிக்கப்பட்ட ஒருவர். ஆனால், நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள். இதில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட நிலை உறுப்பினர் ஒருவரே இணைத் தலைவராக இருக்கவேண்டும்'

★ மாவை சேனாதிராசா எம்.பி.
★ 23 ஒக்டோபர் 2011
(யாழ்-கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கலந்துரையாடலில்...)

## இருப்பு



" மீட்சி எப்போது...? "



'தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட போதிலும், வேறு விதமான பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. நாடு ஜனநாயக நெறிமுறைகளை விட்டு விலகிச் சென்றிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் எதிர்காலத்தில் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கும். துப்பாக்கி, குண்டு, கத்தி, வாள் போன்ற பொருட்களை தற்போது நாட்டை ஆட்சிசெய்து வருகின்றன. இவ்வாறான அரசியல் நிலைமைக்கு அரசியல்வாதிகளே பொறுப்பு சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

★ சஜித் பிரேமதாச எம்.பி.
★ 22 ஒக்டோபர் 2011
(பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில்...)



'ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாட்டுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட சமாதானத்தை சீர்குலைக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது. சம்பந்தன் சிரேஷ்ட அரசியல்வாதி என்பதால் மிகவும் சிறந்த திட்டத்தை முன்வைப்பார் என எதிர்பார்த்தேன். எனினும் அவரது யோசனைத் திட்டம் என்னை கலக்கமடையச் செய்தது. முத்தையா முரளிதரன் பந்தை வீசி எறிவதாக அவுஸ்திரேலியாவில் குற்றம்சுமத்திய போது எந்தவொரு தமிழ்த் தலைவரும் அவருக்காக குரல் கொடுக்கவில்லை. நாமே குரல் கொடுத்தோம்'

★ திலங்க சுமதிபால எம்.பி.
★ 24 ஒக்டோபர் 2011
(த.தே.கூ.இன் கோரிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது...)



'கூட்டமைப்பின் அமெரிக்க விஜயத்தினால் அந்நாட்டிலுள்ள உழைக்கும் வர்க்கத்தினர் மத்தியிலும், உலக உழைக்கும் வர்க்கத்தினர் மத்தியிலும் தமிழர் பிரச்சினைகளை கொண்டு செல்லமுடியும். ஆனால் மேற்குலகம்மீது எமக்கு நம்பிக்கை கிடையாது. தமிழர்களை ஒழிப்பதற்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகும். எனவேதான் பராக் ஒபாமா பட்டும் படாமலும் அறிக்கைகளை விடுகிறாரே தவிர கடுமையாக தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டுமென வலியுறுத்துவதில்லை. தமிழ் மக்கள்மீது உண்மையான அக்கறை இருந்தால் எப்போதோ அமெரிக்காவினால் பெற்றுக் கொடுத்திருக்க முடியும்'

★ கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன
★ 24 ஒக்டோபர் 2011
(ஊடகம் ஒன்றுக்கு தெரிவிக்கையில்...)



'13ஆவது அரசியல் சீர்திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அரசாங்கம், பாரிய மக்கள் எதிர்ப்பிற்கு முகம்கொடுக்க வேண்டிவரும். மக்களினால் மேற்கொள்ளப்படும் இப்படியான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முகம் கொடுப்பதற்கு தேசிய திட்டம் ஒன்று அவசியம்'

★ குணதாச அமரசேகர
★ 22 ஒக்டோபர் 2011
(ஊடகவியலாளர் சந்திப்பில்...)



'ஊடகப்பணிக்காக இலங்கையில் இதுவரை கொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாக இருக்கின்றனர். இதன் மூலம் தமிழர்களின் தகவலறியும் சுதந்திரம், கருத்துக்களைக் கொண்டிருக்கும், கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் மறுக்கப்பட்டிருக்கின்றமையும், அவற்றைக் கொண்டிருக்கும் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலும் சரித்திரத்தில் மிகமோசமானதாகும். இதுவரையில் 60 தமிழ் ஊடகப்பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் கொல்லப்படக் காரணம், உண்மைகள் வெளிவரக் கூடாது என்பதற்காகவே. ஆனால், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டாலும், உண்மை வெளிக்கொணரப் படுவதை யாராலும் தடுக்கமுடியாது.

★ ஊடகவியலாளர் சீதா ரஞ்சனி
★ 21 ஒக்டோபர் 2011
(நிமலராஜனின் 11ஆவது ஆண்டு நிகழ்வில் உரையாற்றும்போது...)



பாலியல்ரீதியாகப் பாதிக்கப்படுகின்ற பெண்களிடம் பொலிஸார் தொலைபேசி இலக்கத்தைக் கேட்டும், வீட்டுக்கு வருவதாகவும் துன்புறுத்தி வருகின்றனர்.

★ யாழ். அரசு அதிபர் இமெல்டா சுகுமார்
★ 24 ஒக்டோபர் 2011
(யாழ்.மாவட்ட செயலகத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒரு கையை இழந்தும் நம்பிக்கை இழக்காமல் வாழும் தொழிலாளி

வன்னிப் பெருநிலத்தில் தமக்கென ஒரு சுயதொழிலை உருவாக்கி வாழ்ந்து கொண்டிருந்த பலரது வாழ்வு இன்று சிதைந்து சின்னா பின்னமாய்க்கிடக்கிறது. யுத்தம் இன்று நின்றுபோயிருந்தாலும் அது விட்டுச் சென்ற பாதிப்புக்கள் ஒட்டுமொத்த மக்களுடைய வாழ்க்கையில் மாறாத வடுக்களை ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறது. பலரது அவயவங்கள் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளன. இன்று அவர்கள் அவயவங்களை இழந்து, தொழில் இழந்து கஷ்டப்பட்டு தங்கள் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலருகில் கச்சான் கடை வைத்திருக்கும் 34 வயதான வசந்தகுமாரை கடந்தவாரம் சந்தித்தோம். நடந்துமுடிந்த யுத்தத்தில் தனது இடது கையை முழுமையாக இழந்துவிட்ட வசந்தனின் தாய் இறந்து ஏழு நாட்கள் என்பதால் தனது பெட்டிக்கடையை நேரத்தோடு மூடிவிட்டு வீடுசெல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். ஒரு கையின் துணையால் சைக்கிளின் ஹாண்டிலைப் பிடித்தபடி ஏறி அமர எத்தனித்துக் கொண்டிருந்தவரிடம் எமக்காக சில நிமிடங்களைக் கேட்டோம்.

**◄ சாகித்யா ►**

'முறிகண்டிதான் என்ட சொந்த இடம். கலியாணம் கட்டி ரெண்டு பிள்ளைகள் இருக்கு. ஒரு பிள்ளைக்கு நாலு வயசு. நேர்சரி போகுது. ஒரு பிள்ளை பிறந்து 4 மாசம். எனக்கு ஒரு தங்கை இருக்காள். அவள் கலியாணம் கட்டி பிள்ளைகள் இருக்கு. நானும் என்ட மனைவியும் மாறி மாறி கடையைப் பார்த்துக் கொள்ளுவம்' என்றவரிடம் இதற்குமுன் வாழ்ந்த நிலைமை, யுத்தத்தின் போது அனுபவித்தவை பற்றிக் கேட்டோம்.



'சண்டைக்கு முன் நான் கூலி வேலை செய்தன். அப்போ கூலி வேலைக்கு 500 ரூபா தருவாங்க. நான் ஒரு மேசன். தச்சு வேலையும் செய்வன். அப்போ நல்லா உழைச்சன். கடைசி சண்ட நடக்கேக்க வீட்டாக்களோடு முள்ளிவாய்க்கால வரேக்கதான் ஷெல் விழுந்தது. அதுல கை இல்லாமல் போயிட்டுது. காயப்பட்டு வவுனியா ஆஸ்பத்திரியில் வச்சிருந்தவங்க. கையை எடுக்கமாட்டம் என்டுதான் சொல்லியிருந்தாங்கள். பிறகு எடுத்திட்டாங்க. பிறகு வவுனியா வலயம் 6 முகாமுக்கு கொண்டு போய் வச்சிருந்தவங்க. அங்கயிருந்து கதிர்காமர் முகாமுக்கு ஏத்தினவங்கள். பிறகுதான் இங்க வந்தனாங்க. காயப்பட்ட உடனே நாங்க ஆமி கட்டுப்பாட்டு பகுதிக்குள்ள வந்திட்டம். அந்த நேரம் அரிசி எல்லாம் 3000, 4000க்கு வித்தது. சீனி எல்லாம் 5000, 6000 ரூபாவுக்கு ஒரு கிலோவ வித்தாங்க. ஒரு சாமானும் வாங்கிறதுக்கு வசதியில்ல. பஸ் வழிய அங்க இங்க இடம்பெயர்ந்து போவம். கஞ்சி காய்ச்சி கொடுப்பாங்க. அத வாங்கிட்டு வந்துதான் என்ட குடும்பத்த காப்பாத்தினன். முன்ன மாதிரி இப்ப ஒரு வேலையும் செய்ய ஏலாது. கை உளைவிறது. மேல பிளேட் வச்சி இருக்கு. நிமிர்த்த முடியாது' என முகத்தில் வலியின் ரேகைகள் படர வேதனையுடன் கூறினார்.

> **"அந்த நேரம் அரிசி எல்லாம் 3000, 4000க்கு வித்தது. சீனி எல்லாம் 5000, 6000 ரூபாவுக்கு ஒரு கிலோவ வித்தாங்க. ஒரு சாமானும் வாங்கிறதுக்கு வசதி இல்ல. பஸ் வழிய அங்க இங்க இடம்பெயர்ந்து போவம். கஞ்சி காய்ச்சி கொடுப்பாங்க. அத வாங்கிட்டு வந்துதான் என்ட குடும்பத்த காப்பாத்தினன்"**

*யுத்தத்தில் அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகள் வழங்கப்படுகின்றனவே... நீங்களும் அதற்கு முயற்சித்திருக்கலாமே?*


'நானும் எல்லோரிட்டயும் பதிஞ்சுதான் இருக்கிறன். கை இல்லாமல் போயும் எந்த நிறுவனமும் எனக்கு உதவி செய்யல்ல. மன்னாருக்கு ஒருக்கா வர சொல்லியிருந்தாங்க. அங்க போய் வாறதுக்கு என்னட்ட வசதியில்ல. அங்க 10 நாள் வச்சிருந்து தான் டெஸ்ட் எல்லாம் எடுத்து கை போடுவாங்களாம். நான் 10 நாள் அங்கு போயிருந்தால் என்ட குடும்பத்தை பார்க்கிறதுக்கு யாரும் இல்ல. நிறுவனமெல்லாம் உதவி செய்யும் என்டு சொல்லி எதுவும் செய்யல்ல. இங்க மீள்குடியேற்றும்போது 12 தகரம் தந்தவங்க. அதுமட்டும் தான். வேறு ஒன்டும் தரயில்ல. தண்ணி எடுக்கிறதென்டாலும் நிறையத் தூரம் போய்த்தான் கொண்டு வரனும். கிணறு இல்லை. கிணறு வெட்டுறதுக்கும் வசதியில்லை. எனக்கு கையிருந்தாலும் நான் கிணறு வெட்டுவேன்' என்று கூறி வருந்தினார்.

*கச்சான் வியாபாரம் எப்படிப் போகின்றது?*

'யாவாரம் பரவாயில்ல. நல்லாப் போகுது. ஆனால், முதல்தான் இல்ல. அதனால நான் ஒரு 10 கிலோ கடலை கடன்வாங்கி அத வித்திட்டு வாறன். ஒருநாளைக்கு ஆயிரம் ரூபாக்கிட்ட முதல் வேணும். வறுவல் கூலி என்று எல்லாமாக 2000 அப்படி வரும். கூலியக் கொடுத்துட்டு மிச்சத்தை எடுக்கிறன். எல்லாம் போக ஒரு நாளைக்கு 400, 500 ரூபா வருமானம் வரும். வேற சாமான்கள் அதாவது சோடா தண்ணிப் போத்தல் எல்லாம்




கடையில் போட்டால் வியாபாரம் கூட போகும். அப்படி போடுவதற்கு வசதியில்லை. கடைக்கு கூலி கொடுக்கனும். ஒரு நாளைக்கு 75 ரூபா படி வாடகை கட்டனும். சில ஆக்களுக்கு கடை அடிச்சுக் கொடுத்திருக்கிறாங்க. நான் வியாபாரம் செய்து மிச்சம் பிடித்த காசில்தான் இந்தக் கடைய போட்டிருக்கன். நிவாரணம் கொடுத்திட்டு வந்தாங்க. அதில் அரிசி பருப்பென்டு ஒரு 30 கிலோ கிட்ட மாசத்துக்கு தருவாங்க. இப்ப அதையும் நிப்பாட்டிட்டாங்க. இந்த வேலையோட சேர்த்து ஒரு கையால விறகு கொத்தியும் விக்கிறன்' என்றார்.



அவயவங்களை இழந்தாலும் தன்னம்பிக்கையை இன்னும் தளரவிடவில்லையென்பதை வன்னியில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு உறவுகளும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று எத்தனையோ வசதிகளிருந்தும் அவயவங்களெல்லாம் ஒழுங்காக இருந்தும்கூட பணத்திமிரும் பதவி மோகமும் பிடித்தவையும் எத்தனையோ பேரைப் பார்க்கின்றோம். கடவுள் எல்லாம் கொடுத்தும் சோம்பேறிகளாய் வாழும் பலபேரை சந்தித்திருக்கின்றோம். உண்மையில் அவர்கள் இங்கு வந்து இந்த மக்களைச் சந்தித்து இவர்களின் கதைகளைக் கேட்க வேண்டும். அவயவங்களை இழந்தும் மனம் தளராமல் தினம் தினம் வாழ்க்கையுடன் போராடி இன்னும் தம் சொந்த முயற்சியில் உழைத்து வாழும் இவர்கள் ஏனையோருக்கு நல்ல முன்னுதாரணம்.

வாசகர்களே...! உங்களது பிரதேசத்தில் 'இருக்கிறம்' சஞ்சிகையைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருந்தால் உடனே அழைத்து எமக்குத் தெரியப்படுத்துங்கள்.
ஆசிரியபீடம் 011 2[illegible]50886
விநியோகப்பிரிவு 011 5322761

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.10.2011
காத்திருப்பு 01 | இருக்கை 31

# சுதந்திரத்துக்கான தேவை

வணக்கம் என் உறவுகளே!

தாவிக் குதிக்கின்ற அலைகளிலே மூழ்கிப்போகின்ற ஒளிக்கீற்றுக்களாய் [illegible] கம். காலம் எம் தலையில் தினமும் துயரமாய் விடிகிறது. எதிர்காலம் பற்றிய எம் எண்ணங்கள் கருகி உதிர நிகழ் காலமும் நிதர்சனமற்றுக் கழிகிறது.

ஜனநாயகத்துக்கான அனைத்து வழிகளும் அடைக் கப்பட்டுள்ள இத்தேசத்தில் எதிர்பார்ப்புக்கள் இரவுகளின் இருளில் கரைகின்றன. அதிகாரமோகம் அனைவரையும் ஆட்டிப்படைக்கிறது. வடக்கில் தொடங்கிய பயங்கர வாதங்கள் இன்று தெற்கில் வியாபித்து நிற்கின்றன. சுதந்திரக்காற்று என்பது இன்று சுமையாக இருக்கிறது. போரால் பாதிக்கப்பட்ட எம் உறவுகளின் இயல்பு வாழ்க்கை பன்மடங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.


பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டு போகிறது. இதுவரைகாலமும் இந்தியாவை நம்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அமெரிக்காவை நம்பத்தொடங்கியிருக்கிறது. அமைதியான பூமியில் நிம் மதியான உறக்கத்துக்காய் காத்திருக்கும் எம் சனங்களின் நம்பிக்கையில் எங்கோ ஒருமூலையில் ஒளிக்கீற்றுக்கள் தெறிக்கத்தொடங்கியிருக்கின்றன. கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் அழுத்தங்களுடன் வாழும் எம் சனங் களின் எதிர்காலத்துக்கான ஒரு அடையாளத்தை பிறப் பித்திருக்கிறது. ஆனால் எதிர்பார்ப்புகள் இனிவருங்காலங் களில் எவ்வாறு அமையும் என்பது கேள்விக்குறியே.

எங்கள் கிராமங்கள் இன்று குடியிழந்து போய்க்கிடக் கின்றன. நெடிதுயர்ந்த பனைமரத்தோப்புகளிடையே ஒற்றையாய் அவலமாய் அழுகின்ற குறுகுறுப்பானின் குரல்போல எங்கள் கிராமம் நடுஇரவுப் பொழுதுகளிலும் நண்பகல் வேளைகளிலும் ஒப்பாரி வைத்து அழுகி றது. எம்மைப்போலவே மனதை மிதிக்கும் அரக்கச்சூழ லில் நசியுண்டுகிடக்கும் அதன் விம்மலும் தொண்டைக் குழியில் சிக்கி நெருக்குண்டு புதையுண்டு கிடக்கிறது. மீள்குடியேற்றத்துக்காய் விடுவிக்கப்பட்ட நிலங்கள் ஊமைகளாய் அழுகின்றன. நீரின்றி வளங்களின்றி கந்த கவாடை வீசும் காற்றுக்களைச் சுவாசித்தபடி மரத்துப் போன மனதுடன் வாழும் எம் உறவுகளின் கதைகளோ மனதைப்பிழிகின்றன.

மீண்டும் பல்கலைக்கழக வளாகங்களுக்குள் குருதி சிந்தத்தொடங்கியிருக்கிறது. மாணவர் போராட்டங்கள் வன்முறைகளால் நசுக்கப்படுகின்றன. மீண்டும் ஊர்க ளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பதிவு நடைமுறைகளும், சோதனை நடவடிக்கைகளும் முற்றுகைக்குள் மூழ்கி மூச்சுத்திணறி நிற்கும் எங்களின் வாழ்வுக்கான இருப்பை முட்கம்பி வேலிகளால் இறுக்கத் தொடங்கியிருக்கின்றன.

எமது வரலாற்றில் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த அடக்குமுறைப்போக்கு வாழ்வில் சலிப்புக்கும் விரக் திக்குமான எதிர்ப்புப் போராட்டங்களைத்தான் உரு வாக்கியிருக்கின்றன. மக்கள் வன்முறைக்கும் படு கொலைகளுக்கும் எதிராகப் போராடி இயல்பு வாழ்வை வென்றெடுக்க வேண்டிய நிலையில் இன்று இருக்கிறார் கள். அரசோ தொடர்ச்சியாக அதிகாரமோகத்தால் அனைத் தையும் அடக்க முயற்சிக்கிறது. இனியும் இதனைத் தொடரவிடாது புரிந்துணர்வுடன் கூடிய நல்லெண்ணத் துடன் தமிழ்மக்கள் அரசின் மீது நம்பிக்கை கொள்ளும் வகையிலான நடவடிக்கைகளை அரசு செய்யாற்ற முன்வரவேண்டும். சுதந்திரத்தின் தேவைக்காக உணர் வுகளால் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுடன் அடுத்த இதழில் சந்திக்கிறேன்...

அருண் - சஞ்சீத்
ஆசிரியர்



# அவர்கள் போனால் தேச விசுவாசம் இவர்கள் போனால் தேசத்துரோகமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு பேர் கொண்ட குழுவொன்று கடந்த செவ்வாய்க் கிழமை அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றது. அமெரிக் காவின் அழைப்பின் பேரில் இலங்கை அரசின் கடவுச்சீட் டுடன் இவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். இக்குழு பயண மாவதற்கு முன்னர் அரசாங்கத்தின் ஒரு பங்காளிக்கட்சி யின் தலைவரான மின்சக்தி அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய என்ற அமைப்பின் தலைவருமான சம்பிக்க ரண வக்க, கூட்டமைப்பினரின் அமெரிக்க பயணம் தேசத்து ரோகம் என்றும் இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டு மென்றும் கோரியிருக்கிறார்.

பண்டாரநாயக்கா கொண்டுவந்த சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்ற சட்டம் வெற்றிகரமாகவும் அமைதி யாகவும் செயற்படுத்த முடியாது என்பதை பண்டார நாயக்காவே உணர்ந்து கொண்டதால்தான் செல்வநாய கத்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப் பந்தத்தைச் செய்தார்.

இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கியதேசியக்கட்சி, ஜே.ஆர்.ஜெயவர்த்தனதலைமையில் பாத யாத்திரை போனதும் ஆளுங்கட்சியில் இப்போது சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் இருந்து கொடுத்த எதிர்ப்பு காரணமாக ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

அன்று பண்டாரநாயக்கா தொடங்கி வைத்த [illegible] இனவாதக் குமிழ் தொடர்ந்து சிறிமாவோ பண்டார நாயக்காவின் தலைமையில் பரவிப் பெருப்பித்து அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டவர்களை பயங்கரவாத மாக்கி அமெரிக்க ஜோர்ஜ் புஷ்ஷின் உலகப்பயங் கரவாதத்துடன் சேர்த்து பயங்கரவாத ஒழிப்பாகத் திரித்து இன்று பலவகையிலும் இன அழிப்பில் முனைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

போர் முடிந்ததும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படும் என்று உறுதியளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இப்பொழுது புலிப்பயங்கர வாதம் புலம்பெயர்ந்து செயற்படுகிறது என்று கூறுகிறார். மனிதாபிமானப்போரில் 'ஒரு பொது மகனும்' அரச படை களினால் கொல்லப்படவில்லை என ஜனாதிபதியும் ஆட்சி யாளர்களும் கூறிவருவதில் உண்மை இல்லை என்று காலம் கடந்து விழித்துக்கொண்ட ஐ.நா. தலைமைச் செய லரும் பல உலக நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்து போர்க்குற்ற விசாரணை வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. இதை எதிர்த்து ஜனாதிபதியும் அவரது முக்கிய அமைச்சர்களும் நாடு நாடாக அலைந்து திரிந்து போர்க்குற்றம் என்பது பொய்க்குற்றச்சாட்டு, புலம் பெயர்ந்த புலிகளால் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு என்று மறுத்து வருகின்றனர். சர்வதேச மாநாடுகளிலும் போர்க் குற்றச்சாட்டுக்களை மறுப்பதிலேயே நேரத்தையும் பணத் தையும் செலவழிக்கின்றனர்.

உள்நாட்டிலேயே இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண பண்டாரநாயக்கா எடுத்த முயற்சியை எதிர்த்த இனவாதிகள் பின்னர் பண்டார நாயக்காவையே முடித்தனர். அன்று அமைதித் தீர்வுக்கு எதிர்ப்பாக பேராசிரியர் எல்.ஆர். ஜெயசூரியா, கே.எம்.பி. இராஜரத்தினம் மற்றும் இரு முக்கிய புத்தபிக்குகள் போன்று காலத்துக்குக் காலம், சிறுபான்மையினம் உரிமையுடன் வாழக்கூடாது என்பதில் குறியாக செயல்படுபவர்கள் தோன்றிக்கொண்டுதானிருக்கிறார்கள். சம்பிக்கரணவக்க, தேசப்பற்று குணதாச அமரசேகர போன்றவர்கள் இருக்கும் வரை இங்கு அமைதித் தீர்வை எட்ட முடியாது. தம் இனத்தைக் காப்பாற்ற அமெரிக்காவுக்கு மட்டுமல்ல எங் கெல்லாம் சென்று குரல்கொடுத்து நீதியைப் பெற முடியுமோ அங்கெல்லாம் சென்றுதான் ஆகவேண்டும். உள்நாட்டில் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்ப்பு காணப்பட்டபின் ஏன் வெளிநாட்டை எதிர் பார்க்கப் போகிறார்கள்?

ஜனாதிபதியும் அமைச்சர்களும்தான் வெளிநாடுக ளுக்குச் சென்று நீதி, நியாயம் கேட்கலாம். பாதிக்கப் படுகின்ற மக்களின் பிரதிநிதிகள் வெளிநாடுகளிடம் நீதி நியாயம் கேட்கக் கூடாதா? அவர்கள் கேட்டால் தேச விசு வாசம். இவர்கள் கேட்டால் தேசத்துரோகம். இது என்ன தர்மமோ?

- எஸ்.எம்.ஜி.

இருக்கிறம்
[illegible] வார இதழ்

[illegible] வெளியிடப்படுகிறது
3, [illegible] அவென்யூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585590
மின்னஞ்சல் : irukkiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

ஆசிரியர் : [illegible]
நிர்வாக ஆசிரியர் : [illegible]
செய்தி ஆசிரியர்கள் : [illegible]
நிருபர் குழு : [illegible]
கணினி : [illegible]
புகைப்படம் : [illegible]
பக்க வடிவமைப்பு : [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸ்டர். க்றோ

# பழைய சத்தியாக்கிரகம் தானா போராட்டம் 'வோல்ட்ஸ் ஸ்ரீட்' புதுவழிகாட்டுகிறதே...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வவுனியாவில் அரசாங்கத்தின் காணிக்கொள்கைகள் தொடர்பாக ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை நிகழ்த்தியதாக செய்திகளில் அறிகிறோம். யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும்கூட, தமது தலைவர் தாக்குதலுக்குள்ளானதையடுத்து மக்கள் போராட்டத்திற்காக களத்தில் இறங்கப் போவதாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது. நாம் திரும்பவும் ஐம்பதுகளின் சத்தியாக்கிரகப் போராட்ட சகாப்தத்தினுள் நுழைந்திருப்பதாகத்தான் இச்செய்திகள் அறிவிக்கின்றன.



ஆயினும், அந்தப் போராட்டங்கள் தமிழ் மக்களுக்கு வெற்றிகளை ஈட்டித் தந்தனவா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். அவற்றின் தோல்விக்கு என்ன காரணம் என்பதை ஆராயாமல், கண்ணை மூடிக்கொண்டு இன்னுமொரு உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்குவது முட்டாள்தனமன்றி வேறில்லை. கடைசியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தினால் ஒரு பயனும் இல்லை என மக்களைத்தான் நாம் சலிக்க வைத்து விடுவோம். அமைதியான மக்கள் போராட்டத்தில் பயன்கள் மிகமிக உண்டு. ஆனால் அவை நடத்தும் முறையின் மூலோபாயங்கள்தாம் மிக முக்கியமானவையாகும். பழைய போராட்டங்கள் ஏன் தோல்வி அடைந்தன என்று வெறுமனே விமர்சனம் செய்வதை விட்டுவிட்டு, இவ்வகையான போராட்டங்கள் எப்படிச் செய்யப்படவேண்டும் என்பதைப் பார்ப்பதனூடாக, அவ்விமர்சனங்களை நோக்கலாம்.

ஒரு அமைதியான மக்கள் போராட்டத்தினை இலட்சியபூர்வமாக நடத்துவதை சமகாலத்தில் நிகழ்ந்த கெய்ரோவின் டகிரிர் சதுக்கப் போராட்டமும் இப்பொழுது நிகழும் 'வோல்ட் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமி' என்னும் விடுதலைச் சதுக்கப் போராட்டமும் கண்கூடாகப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றின் பொதுத் தன்மையை நோக்கினால் அதனை 3 வகையாகப் பிரிக்கலாம். பங்களிப்பு (Participation), பரவலான தன்மை (Outreach), யுக்திகளான நடவடிக்கைகள் (Strategic Actions) என்பனவே இவையாகும்.

பங்களிப்பு என்பது பரந்து பட்ட மக்களின் சேர்க்கையாகும். வோல்ட் ஸ்ட்ரீட் இயக்கத்தினை எடுத்துக் கொண்டால், வெள்ளையர், கறுப்பர், பெண்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், வாண்மைத்தொழில் புரிவோரின் பிரதிநிதிகள், செவ்விந்திய இனத்தின் பிரதிநிதிகள், மத்திய அமெரிக்க கறுப்பினப் பிரதிநிதிகள், ஸ்பானிய மொழி பேசும் மக்களின் பிரதிநிதிகள், ஆசிய இனத்தைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள், பழங்குடி மக்களின் பிரதிநிதிகள், வயோதிபர், ஊனமுற்றோர் போன்றவர்களின் சங்கப் பிரதிநிதிகள் என்று இவர்களெல்லோருமே இணைந்திருப்பதைப் பார்க்கலாம்.

எங்கள் ஊரின் இயக்கப் போராட்டங்களெல்லாம் எப்படியென்றால், சிலர் தலைமை தாங்குவார்கள், மக்களை அறைகூவி அழைப்பார்கள், ஆனால் மக்கள் ஒன்றுதிரண்டு சேர்ந்த பின்னர் அந்தப் போராட்டத்தினை வழிநடத்தவும் பேச்சுவார்த்தைகளுக்குப் போகவும் தாம் மட்டும் நிற்பார்கள். தமக்கு எண்ணிக்கையின் அடிப்படையிலான அரசியல் பலம் சேர்ப்பதற்கு மட்டும் மக்களைப் பாவித்து விட்டு, தலைமைத்துவத்தை செயற்படுத்துவதில் தாம் மட்டும் முன்னிற்கும் இவ்வகையான அரசியலை தரகு அரசியல் என்று அழைப்பார்கள்.

எமது தலைவர்கள் அன்றும் இன்றும் இதே தரகு அரசியலைத்தான் நடத்தி வந்திருக்கிறார்கள். மக்களைத் திரட்டுவது, பிறகு தாங்கள் மட்டும் இரகசிய பேச்சுவார்த்தைகள் நடத்துவது, போராட்டத்தைப் பற்றிய சகல முடிவுகளையும் எடுப்பது. மக்கள் உண்மையாகப் பங்கு






பற்றாத இந்த வகையிலான அரசியல் தனிநபர்களின் விருப்பு வெறுப்புகளுக்கும் அவர்களின் சொந்த வசதிகளுக்குமாகவும் திசை திருப்பப்படும். இதை வைத்துக்கொண்டு பின்னர் 1950களில் எங்கள் போராட்டங்களில் என்ன நடந்திருக்கும் என்று நீங்கள் யூகிக்கலாம்.

வோல்ட் ஸ்ட்ரீட் இயக்கத்தில் சகல மக்களின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு குழுவே அதன் போக்கினையும் மூலோபாயத்தினையும் தீர்மானிக்கும் குழுவாக இயங்குகின்றது. போராட்டத்தில் குதித்திருக்கின்ற சகல மக்களினதும் வித்தியாசமான நலன்கள் இப்போராட்டத்தின் நோக்கங்களிலும் நடைமுறைகளிலும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே இதன் அடி நாதமாகும்.

ஒவ்வொரு நாளும் காலையில் இக்குழு சந்தித்து அன்றைய பிரச்சினைகளையும் செய்யப்படவேண்டிய வேலைகளையும் ஆராயும். முடிவுகள் ஒத்தியங்கும் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படுகின்றனவேயன்றி, பெரும்பான்மை கருத்துக்கு அமையவல்ல. அந்த வேலைகளையும்கூட எல்லோரும் தத்தமது ஆற்றலுக்கேற்ப பிரித்தெடுத்துக் கொள்வார்கள். இதில் முக்கியமாக, அமைதியான போராட்டமாக இருக்கவேண்டும் என்பதில் மிக்க அக்கறையாக இக்குழு செயற்பட்டிருக்கிறது. பொலிஸார் என்ன தடியடிப் பிரயோகம் மேற்கொண்டாலும் எந்த சந்தர்ப்பத்திலும் வன்முறையைக் கையாளாமல் இருப்பதனை ஒவ்வொரு குழுப்பிரதிநிதியும் தனது பொறுப்பாக ஏற்றுக் கொள்வர்.

இப்படி மக்கள் பங்குபற்றியமையால் ஒரு மாதத்துக்குள்ளாகவே வோல்ட் ஸ்ட்ரீட் இயக்கத்துக்கு கிட்டத்தட்ட 300,000 டொலர் நிதியும் ஏராளமான உணவு மற்றும் கம்பளி உடைகளும் கிடைத்திருக்கின்றன. 'எங்கள் சார்பாகப் போராடும் எங்களினிய மக்களுக்கு' என்று எழுதி எழுதி அமெரிக்கா பூராவிலுமிருந்து பார்சல்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன.

மொபைல் கையடக்கத் தொலைபேசிகள்தான் இந்த பரவலாக்கும் தன்மையின் நாயகன் என்று கூறலாம். சகல செய்திகளும் SMS மூலமாக அனுப்பி குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு மக்களை எடுக்கின்றனர். தகவல் சொல்லியனுப்பவும் அபிப்பிராயம் கேட்கவும் பாரிய மக்கள் திரளை ஏதுமொரு தீர்மானம் எடுப்பதில் பங்கேற்க வைக்கவும் இந்தத் தொலைபேசிகள் உதவுகின்றன.

அடுத்தது பரவலாகும் தன்மை. போராட்டம் வோல்ட் ஸ்ட்ரீட்டில்தான் நடந்தாலும் அமெரிக்காவினதும் ஏனைய உலக நாடுகளினதும் தலைநகரங்களிலும் நடைபெறுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. எனவே உதாரணமாக லண்டன் பங்குச் சந்தைக் கட்டிடத்துக்கு முன்னால் 'லண்டனை ஆக்கிரமி' போராட்டமும் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் 'சிட்னியை ஆக்கிரமி' போராட்டமும் நடப்பதைப் பார்க்கலாம்.

இதே போலத்தான் அமெரிக்காவின் சகல மாநிலங்களிலும் உள்ள நகரங்களில் வோல் ஸ்ட்ரீட் போராட்டம் பரவியிருக்கின்றது. இங்கெல்லாம் வோல் ஸ்ட்ரீட் தலைவர்களல்ல தலைமை தாங்குகிறார்கள். மாறாக, அந்தந்த நகரங்களின், சமூகங்களின் பிரதிநிதிகள்தாம் இவற்றுக்குத் தலைமை தாங்குவார்கள். இப்படி விடுவார்களா எங்கள் உள்ளூர் தலைவர்கள்?

(23ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடும் நடப்பும்

## மெய்ப்பொருள் காண்பது அறிவு

லிபியான்ர அதிபராக இருந்த கேணல் கடாபியை கொண்டுட்டாங்கள். கடாபி சர்வாதிகாரி எண்டு கேள்விப்பட்டனான். அந்த நாட்டில படை எடுத்து அந்தாள கலை கலை எண்டு கலைச்சு கடைசியா அந்தாளின் சொந்த ஊரிலயே ஓடவிட்டுச் சுட்டுப்போட்டாங்கள் பாருங்கோ. கடைசியா அந்த மனுசனப்பிடிச்சு சுடேக்க அந்தாள் சுடவேண்டாம் எண்டு கெஞ்சுற வீடியோவ பாக்க கவலையா இருந்ததுங்கோ. கடாபி அந்த நாட்டுச் சனத்துக்கு என்னென்ன செய்தவரெண்டு அதுகளுக்குத்தானுங்கோ தெரியுமுங்கோ. ஒண்டு மட்டும் விளங்குதுங்கோ. 'சர்வாதிகாரப் போக்குகளுக்கு இந்த நூற்றாண்டில இடம் இல்ல' எண்டதுதானுங்கோ.

சர்வதிகாரப்போக்கு எண்டேக்கதான் ஞாபகத்துக்கு வருகுதுங்கோ. மன்னாரில பள்ளிக்கூடம் ஒண்டில வாத்தி ஒண்டு சர்வாதிகாரியா நடக்கிறாராம். அந்த வாத்தி வெளிமாவட்டம் ஒண்டில இருந்து வந்து தங்கிநிண்டு படிப்பிக்கிறாராம். ஏன் அடிக்கிறன் என்னத்துக்கு அடிக்கிறன் எண்டு இல்லாம பொடியள கலைச்சுக் கலச்சு அடிக்கிறது தானாமுங்கோ அந்தாளின்ர வேலையாம். சுவருக்குப் பின்னாலயும் கதவுக்குப் பின்னாலயும் ஒளிச்சு நிண்டுட்டு குறுக்க வாற பொடியளுக்கு சாத்து சாத்தெண்டு சாத்துமாமுங்கோ.

ஆரன் வாத்திமாரோ பிறிஞ்சுப்பலோ பிரச்சினப்பட்டா, அதை ஒளிச்சு நிண்டு வீடியோ எடுத்திடுமாமுங்கோ அந்த மனுசன். பிறகு தன்னோட ஏதும் பிரச்சினை எண்டா அந்த வீடியோவக் காட்டி பிளெக்மெயில் பண்ணுவாராம். பள்ளிக்கூட பொருட்கள எடுத்து ஒளிச்சுப் போட்டு வேற வாத்திமார மாட்டிவிடுவாராம்.

உந்தாளின்ர கதயள நான் போனகிழம மன்னாரில நடந்த வடமாகாண இலக்கியவிழாவுக்குப் போகேக்க கேள்விப்பட்டனானுங்கோ. ரெண்டு, மூண்டு பெடியளும் ரெண்டு வாத்திமாரும்வந்துஇருக்கிறமிலபோடுங்கோவைரவி அப்பு. உதப்பாத்திட்டு எண்டாலும் அந்தாளுக்கு எதிரா ஆரும் நடவடிக்கை எடுப்பீனமோ எண்டு பாப்பம் எண்டு சொன்னவையுங்கோ. என்னோட கதைச்ச வாத்தியார் வேற ஒண்டும் சொன்னவருங்கோ. உந்தாளக் கண்டா பொடியளுக்கு காச்சட்டயோட போகுமாமெண்டு. தான் உப்பிடி நடக்கிறத கண்டனான் எண்டும் வருத்தப்பட்ட வருங்கோ. படிப்பிக்கிற வாத்திமார் உப்பிடி நடக்கக்கூடாதுங்கோ. வாத்தியார் தொழில் புனிதமான தொழிலுங்கோ.

யாழ்ப்பாணத்தில அண்மைக்காலமா புதுப் புது திருட்டுக்கள் தொடங்கி இருக்குதுங்கோ. இந்துக் கோயில்களில சுவாமிசுத்துற வாக னங்கள் களவு போகுது. முந்தி ஆலய விக்கிரகங்கள த்தான் திருடிக்கொண்டு போறவங்களுங்கோ. இப்ப லாண்ட் மாஸ்ரர், டக்ரறில ஏத்துற அளவு சைசும் பாரமும் உள்ள கோயில் வாகனங்கள இரவில திருடிக்கொண்டு போறாங் களுங்கோ. எங்களப் பாதுகாக்கிற தம்பிமாற்ற கண்ணில மண்ணத் தூவிப்போட்டு இந்தத் திருட்டு நடக்குதுங்கோ. ஆமித்தம்பியவ எங்கள பாது காத்தா போதாதுங்கோ நாங்கள் கும்பிடுற கடவுள்களையும் பாதுகாக்கோணுமுங்கோ.

அப்ப நான் போட்டு வாறனுங்கோ..

- வண்டில்கார வைரவி அப்பு



# இன்ஜரா தோட்ட மக்களின் குடியிருப்புப் பிரச்சினை

எம். சந்திரசேகரன்

அபிவிருத்தி என்ற வார்த்தை இன்று பல அமைச்சர்களால் வாய்கிழிய பேசப்பட்டு வருகிறது. இந்த வார்த்தையின் செயல்வடிவம் சாதாரண மக்களை சென்றடைகிறதா என்பதுதான் சந்தேகம். எந்தவொருநாட்டிலும்அங்குவாழும்சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றமே படிப்படியாக அந்நாட்டின் முன்னேற்ற நிலைக்கு வழிவகுக்கும். இதுவே ஒரு நாட்டின் அபிவிருத்தியுமாகும். மலையக மக்களைப் பொறுத்தமட்டில் அபிவிருத்தி என்பது பலருக்கு எட்டாக்கனியாகவே உள்ளது.

அண்மைக்காலமாக தோட்ட மறுசீரமைப்புத் திட்டங்களினூடாக மலையகப்பகுதிகளில் குறிப்பிட்ட சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் பல தோட்டப்புற மக்கள் இன்னமும் வெள்ளையர் காலத்தில் அமைக்கப்பட்ட அதே பத்தடியுடைய இரண்டு அல்லது மூன்று அறைகளைக் கொண்ட வீடுகளிலேயே வசித்து வருகின்றனர். இவ்வாறானவர்கள் தனது வீட்டை விஸ்தரிப்பு செய்து கொள்ள வேண்டுமானால்கூட தோட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெறவேண்டிய சூழ்நிலை நிலவுவதால் இவர்கள் தொடர்ந்தும் இதே வீடுகளிலேயே வசிக்கின்றனர்.


குடிநீர் குழாய்

அவ்வாறான ஒரு பிரதேசம்தான் வட்டவளை இன்ஜரா தோட்டம். இங்கு தற்போது சுமார் 68 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன. இதில் சுமார் 85 பேர் வரை தேயிலைத் தோட்டத்திலேயே வேலைசெய்கின்றனர். இத்தோட்டத்தில் மொத்தமாக ஒன்பது லயன்தொகுதிகள் உள்ளன. மலையகப்பகுதிகளில் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் ஒன்றுகூட இத்தோட்டத்திற்கு வரவில்லை. அதனால் இத்தோட்ட மக்கள் தினமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இங்குள்ள ஒரு லயமானது மொத்தமாக 20 வீடுகளைக் கொண்ட இருபக்க வீட்டுத் தொகுதியினையுடையது. இவ்வீட்டுத் தொகுதியின் வாசல், முகப்பு போன்றன சேதமுற்று கல்லும் குழியுமாக காணப்படுவதால் மழைக்காலங்களில் நீர் தேங்கி நின்று நோய் பரவும் அபாயத்தினை ஏற்படுத்துகின்றது. இங்குள்ள மலசலகூடங்கள் எல்லாம் சேதமுற்று கதவின்றி சிறிய சீற்கள் மற்றும் உரப் பைகளைக் கொண்டு மூடப்பட்டுள்ளன. பலருக்கு அதுவும் இன்றி தேயிலைத் தோட்டங்களிலுள்ள மறைவிடங்களையும் ஓடைகளையும்தான் நாடுகின்றனர்.

இவர்கள் பயன்படுத்தும் நீர்த்தாங்கிகூட சேதமுற்று எல்லா இடங்களிலும் நீர் வழிந்தோடுகிறது. நீர் மட்டம் வரை குப்பைகளும் மிதக்கின்றன. இதைத்தான் அம்மக்கள் கொதிக்க வைத்து அருந்துகின்றனர். இவ் வீட்டுத் தொகுதிகளின் பிரதான சுவர் வெடித்துக் காணப்படுவதால் மழைக்காலங்களில் தண்ணீர் ஊறி வீட்டினுள் செல்கிறது. இன்னும் சிறிது காலங்களில் அந்தச் சுவர் இடிந்து விழுந்து உயிர்ச்சேதத்தினை ஏற்படுத்தும் நிலையிலுள்ளது. இதனால் மழைக் காலத்தில் அம்மக்கள் உயிரை கையில் பிடித்துக்கொண்டிருக்கின்றனர்.

தோட்ட மக்கள் என்ன செய்யமுடியும். அவர்களுக்கு தெரிந்த மேலிடம் என்றால் தோட்ட அதிகாரிகள்தான். அவர்களிடம் தம் நிலையை தெரிவித்து கடிதம் எழுதி அனுப்பியுள்ளனர். அப்பிரதேசங்களுக்கு தேர்தல் காலங்களில் வந்துசெல்லும் தமிழ்த் தலைமைகளிடம்கூட தம் நிலையை எடுத்துக் கூறியுள்ளனர். ஆனால் எவ்வித பலனும் கிடைக்காத நிலையில் வாழ்கின்றனர். இத்தோட்டம் கண்டி மாவட்டத்திற்குட்பட்டதாக இருந்தாலும் அம்மாவட்டத்தின் ஓரப்பகுதியிலும் நுவரெலியா மாவட்டத்திற்குட்பட்ட வட்டவளை நகரப்பகுதிக்கு அருகாமையிலும் மேற்படி இரு மாவட்டங்களையும் பிரிக்கும் எல்லைப் பகுதியிலுள்ள ஒரு மலைப்பகுதியைக் கொண்ட ஒரு புவியியல் சூழலில் அமைந்திருப்பதால் பலரின் பார்வைகள் இத்தோட்டத்தின் மீது பதிய வாய்ப்புக்கள் இல்லை. ஆனாலும் இம்மக்களை இதே நிலையில் விட்டால் காலப்போக்கில் இக்குடியிருப்புகள் இடிந்து விழுந்து பாரிய உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தும். எனவே அதற்கு முன் சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமும் அவசரமானதுமாகும்.


மலசலகூடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யானைகள் கணக்கெடுப்பில் நிலவும் பிரச்சினைகள்

| வருடம் | வனாந்தரங்களின் விகிதா சாரம் | யானைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1900 | 80 வீதம் | 10, 000 |
| 1950 | 40 வீதம் | 1, 900 |
| 2000 | 22 வீதம் | 3, 500 |

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கையில் 10 ஆயிரம் யானைகள் இருந்ததாகக் கணிப்பீடுகள் கூறுகின்றன. குளிர் காடுகளைக் கொண்ட மத்திய வலயக் காடுகளிலும் ஈரவலயக் காடுகளிலும் உயர் வலயத்தின் வனாந்தரங்களிலும் யானைகள் வாழ்ந்தன. எனினும் யானைகள் வாழும் பிரதேசங்கள் குறுகிய எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையின் பிரபலமான ஒரு சில சரணாலயங்களை மையமாகக் கொண்டே யானைகள் வாழ்வதைக் காண முடியும்.

எனினும் இந்தச் சரணாலயங்கள் குறைந்த மழைவீழ்ச்சியைக் கொண்ட வெப்ப வலயங்களிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 18 வீதத்திற்கும் குறைவாகவே வனவிலங்குகள் காணப்படுகின்றன. யானைகள் வாழக்கூடிய காடுகள் அழிந்து செல்வதனால் நீரையும் உணவுகளையும் தேடி யானைகள் பயணிக்கின்ற போது மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 250 யானைகள் வருடாந்தம் இறந்துள்ளன. இதன் விளைவாக யானைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என்பதனை தரவுகள் குறிப்பிடுகின்றன.

**◄ த. சிந்துஜா ►**

யானைகளின் எண்ணிக்கையில் முறையான கணக்கெடுப்பினை இதுவரை மேற்கொள்ளவில்லை. கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதிமுதல் 14 ஆம் திகதி வரை வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் யானைகள் கணக்கிடப்பட்டுள்ளன. 3500 உறுப்பினர்களின் உதவியுடன் நாடு முழுவதும் 1533 கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு 1500 அணைக்கட்டுப் பிரதேசங்களில் யானைகளைக் கணக்கிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இதன்போது ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகச் சுமார் 20 சுற்றாடல் அமைப்புக்கள் இக்கணக்கெடுப்பு பணியிலிருந்து விலகி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர் என்பதனை வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்கள அத்தியட்சகர் எச்.டி. ரத்னாயக்க தெரிவித்தார்.

'காட்டு யானைகளை எண்ணும்போது பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. பல தொண்டர் அமைப்புக்கள் இதிலிருந்து விலக முடிவெடுத்தன. இந்தத் தொண்டர் அமைப்புக்களை இணைத்துக் கொள்வதன் முக்கிய காரணம் நாங்கள் செய்வது ஒரு பொது விடயம். ஆனால் இறுதியில் அவர்கள் இப்பணியில் இருந்து விலகி விட்டார்கள். இந்தத் தொண்டர் அமைப்புக்களிலிருந்து 50 பேர்தான் கலந்துகொண்டார்கள். ஆனால் கணக்கெடுப்பிற்கு 3,600 உறுப்பினர்கள் எமக்குத் தேவைப்பட்டிருந்தனர். எனினும் மிகவும் சிறந்த முறையில் இந்தக் கணக்கீடு நடைபெற்றது. எதிர்காலத்தில் எமது வனவிலங்கைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையை எவ்வாறு முகாமைத்துவம் செய்ய வேண்டும் என்றும் மனிதருக்கும் யானைகளுக்கும் இடையில் இருக்கின்ற மோதல்களை எவ்வாறு சுமூகமான நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அதற்கு எவ்வாறு தீர்வுகள் தேடுவது என்பதையும் முன்வைக்க எதிர்பார்க்கின்றோம்' எனக் குறிப்பிட்டார்.



குணவர்தன ரத்னாயக

எலிபஸ் மக்ஸிமஸ் என்ற விஞ்ஞானப் பெயரில் அழைக்கப்படுகின்ற எமது நாட்டின் யானைகள் எமது தேசத்தின் சொத்தாகும். அவற்றை பாதுகாப்பது மனிதர்களின் கடமை. இந்த யானை பற்றிய கணக்கெடுப்பிலிருந்து சுற்றாடல்துறை சார்ந்தவர்கள் விலகியது பற்றி அவரிடம் கேட்டோம்.

## திண்டாடும் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம்

'யானை கணக்கீடு தொடர்பாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தனது கருத்தை முன்வைக்கும்போது சுற்றாடல் அமைப்புக்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். அவர்களின் ஒத்துழைப்பு கடந்த ஓகஸ்ட் 6 ஆம் திகதி வரை கிடைத்தது. எந்தெந்த பிரதேசங்களுக்குச் செல்லவேண்டும், எவ்வாறு தங்கள் வளங்கள் பயன்படுத்தப்படவேண்டும் என்று எல்லா விளக்கங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது வனவிலங்குக்குப் பொறுப்பான அமைச்சர் இந்தக் கணக்கீட்டின் முக்கிய நோக்கம் குறைந்த அளவில் 300 யானைகள் பிடிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதே என்று கூறினார். அதன் பின் சுற்றாடல் அமைப்புக்களின் கொள்கைகளில் பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டன. சுற்றாடல் அமைப்பின் பொறுப்பு சுற்றாடலைப் பாதுகாப்பதாகும். நாங்கள் வழங்குகின்ற பங்களிப்பின் இறுதியில் சுற்றாடல்களில் வாழுகின்ற விலங்குகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு நாம் சரியான நிலைப்பாட்டை ஏற்படுத்தவேண்டும். அதனால் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தக் கணக்கெடுப்புக்களில் இருந்து உடனடியாக விலக முடிவெடுத்தன' என்று விளக்கினார்.

வெளியிடப்பட்டுள்ள கணக்கெடுப்புக்களை விஞ்ஞானரீதியில் ஏற்றுக்கொள்ளலாமா?

'கணக்கீடு என்பது யானைகளை எண்ணுவதற்கு அப்பால் செல்கின்ற விடயம். எத்தனை பெண், ஆண் யானைகள் இருக்கின்றன என்று கணக்கெடுப்போம். இவ்வாறு கணக்கிடும்போது மற்றுமொரு விடயம்தான் 3 நாட்கள் இவ்வாறு கணக்கெடுத்தால் ஒரு யானையை ஒரு தடவைக்கு அதிகமாக கணக்கிடுவோமா என்பது. நாம் எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்றும் சிந்திக்க வேண்டும். இவற்றை மேற்கொள்ள தகுதியான பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கு தேவையான மனிதர்களைக் கொண்டு இவற்றை மேற்கொள்ளலாம். கணிதத்துறையில் திறமை வாய்ந்தவர்களும் கணக்கெடுப்பினை மேற்கொள்ளலாம். கணக்கீடு தொடர்பாக கணக்கெடுக்கும்போது பல குறைபாடுகளைக் காண்கின்றோம். பயிற்சி அற்ற உறுப்பினர்கள், சிவில் பாதுகாப்பாளர்கள், பாதுகாப்பு துறையில் உள்ளவர்கள், ஏனைய நிறுவனத்தின் உள்ளவர்களை பயன்படுத்தும் போது பாதிப்பு ஏற்படும். ஆகவே கணக்கீடு தொடர்பாக எமக்கு பொதுவான சந்தேகம் ஏற்படுகின்றது. உண்மையிலே எமக்குத் தெரியும் இறுதி யானைகள் வரை எண்ண முடியாது என்று' என்றவர் ஒரு அண்ணளவான கணிப்பீட்டைத்தான் குறிப்பிடலாம் என்று கூறினார்.

எமது நாட்டில் வருடாந்தம் 50க்கும் அதிகமான யானைகள் கொல்லப்படுகின்றன. பெரும்பாலும் இது யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஏற்படும் மோதல்களிலேயே ஏற்படுகின்றன. யானைகள் வாழும் பிரதேசங்களை மனிதன் அழித்து தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும்போது யானைகள் தமது ஆகாரத்தை தேடி மனிதர்கள் வாழும் பிரதேசத்தை நோக்கி படையெடுக்கின்றன. அப்பொழுது மிருகங்களினால் மனிதருக்கும் அழிவு ஏற்படலாம். அழிந்து செல்கின்ற சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு மிருகங்கள் வாழக்கூடிய சுற்றாடலை உருவாக்க வேண்டும். அதுமட்டுமன்றி எமது நாட்டின் மாபெரும் சொத்தான யானையைப் பாதுகாப்பதில் சுற்றாடல் துறைசார் ஊழியர்களும் பாரபட்சமின்றி செயற்படவேண்டும்.



### வனாந்தரங்களில் உள்ள யானைகள் கணிப்பீடு 2011

| | |
|---|---|
| யானைகளின் மொத்த எண்ணிக்கை | - 5,879 |
| தந்தம் உள்ள யானைகள் | - 122 |
| குட்டி யானைகள் | - 1,107 |

- மகாவலிப் பிரதேசத்திலேயே அதிகமான யானைகள் வாழ்கின்றன.
- இப்பகுதியில் மட்டும் 1751 யானைகள் வாழ்கின்றன.
- யானைகள் குறைவாக வாழும் பிரதேசம் மத்திய மாகாணம்.
- யானைகள் வாழ்வதில் கிழக்கு மாகாணம் 2ஆம் இடத்தில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு நடந்தது என்ன?

கடந்த சில நாட்களாக கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு புத்தி என்ன நடந்ததென கிழக்கு மாகாண மக்கள் பேசிக்கொள்கிறார்கள். பின்ன இருக்காதா என்ன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்கூறும் தமிழர் இலட்சியம் என்பது இப்பொழுது தமிழீழ இலட்சியம் தானா? அப்படியென்றால் அன்று எடுத்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி இலட்சியப் பாதையில், ஏன் இவர்கள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்யவில்லை என புலம்ப ஆரம்பித்துள்ளார்.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் வகுத்துக் கொண்ட இலட்சியம்தான் தமிழீழ இலட்சியம். இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைக்கும் இந்த தமிழீழ இலட்சியத்தை வகுத்துக் கொண்டே 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் உருவாக்கப்பட்டது. இதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியாகும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறும் இலட்சியம் என்பது இப்பொழுது தமிழீழ இலட்சியம்தானா? அப்படியென்றால் அன்று எடுத்த வட்டுக்கோட்டைத் தீர்மான இலட்சியப் பாதையில், ஏன் இவர்கள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்யவில்லை என மைக்கைப் பிடித்துக் கொண்டு ஆவேசப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் அவர் என்ன இலட்சியத்துக்காக அரசியல் செய்கின்றார் என்று அவருக்கே மற்றவர்கள் விளங்கப்படுத்த வேண்டிய நிலையில் இன்றிருப்பதாகவும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அதைத்தான் விட்டுத் தொலைக்கலாம் என்றால் கடந்த சில நாட்களுக்கு முன்னர் 'மிக பழுத்துப்போன ஆனந்தசங்கரி ஐயா, சம்பந்தன் ஐயா போன்றவர்கள் இணைந்திருப்பது எமது நாட்டுப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அல்ல எமது பகுதியிலே மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்தி இன்னும் சிக்கலான கட்டத்திற்குள் தள்ளவேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது' என புதிதாக ஒரு கதையை எடுத்துவிட்டிருக்கிறார். இருவரையும் வில்லன் கணக்குக்கு கற்பனை பண்ணிய முதலமைச்சரை நினைத்து சிரிக்காமல் என்ன செய்ய?

கிழக்கு மாகாணத்தில் மிக நீண்ட காலமாக சுதந்திரமான கருத்துச்சொல்ல முடியாத, சுதந்திரமாக வர்த்தகம், தொழில் செய்ய முடியாத நிலைக்குத் தாம் தள்ளப்பட்டிருந்ததாகவும் இப்போது அந்தப் பிரச்சினை நீங்கி மக்கள் நிம்மதியாக இருக்கும் போது தமது பகுதியிலே சில அரசியல்வாதிகளும் குறிப்பாக வடபகுதியை தளமாகக் கொண்டுள்ள தலைவர்கள் ஒன்றிணைந்து எமது மக்களை குழப்பும் முயற்சியில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது என்று சீ.பி.ஐ. நிலைக்கு அறிக்கையும் விட்டிருக்கிறார் முதல்வர்.

போராட்டக் குழுக்களால் அமிர்தலிங்கம் ஐயாவின் உயிர் பறிக்கப்பட்டதேயொழிய, அவர்கள் வகுத்தெடுத்த, எமது இளைஞர்கள் மத்தியில் திணித்த இலட்சியத்திற்காக எந்த தமிழ் அரசியல் தலைவரும் மரணிக்கவில்லை, உயிர்களைத் தியாகம் செய்யவில்லையென்ற உண்மை இருக்கின்றது. ஆனால் இவற்றையெல்லாம் செய்துவிட்டு, இவ்வளவு இழப்புக்கள், அழிவுகளுக்கும் எமது மக்களின் வாழ்க்கைத் தரக் குறைப்பிற்கும் மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கும் மிக அதிகமான விதவைகளின் உருவாக்கத்திற்கும் காரணமாகவிருந்த தமிழ்த் தலைவர்கள் இவ்வளவு காலம் கடந்தும் அவர்கள் எதிர்பார்த்த நம்பிக்கை உடைந்த பின்னரும் வந்து மக்களை ஏமாற்றுகின்றனர். மீண்டும் இலட்சியத்திற்காக வாக்களியுங்கள், ஆதரவைக் கூட்டித் தாருங்களென்றும் கேட்கின்றனர் என்று வேறு அரசியல் பாடம் நடத்தியிருக்கிறாராம் கிழக்கின் முதலமைச்சர்.

உண்மையிலேயே இவருக்கு என்ன நடந்தது என்று எண்ணி முடிப்பதற்கிடையில் 'இன்னும் எமது மக்கள் தெளிவில்லாமலிருக்கின்றனரா? அல்லது நான் தான் தெளிவில்லாமல் அரசியல் செய்கின்றேனா என உண்மையாகவே தான் குழம்பிப் போயிருப்பதை உறுதி செய்திருக்கிறார். என்னதான் பிசகு இருந்தாலும் பிரதேசவாதத்தை விதைக்கும் வகையில் புலம்பாமல் இருந்தால் சரிதான். எதற்கும் விநாயகப் பெருமானுக்கு ஒருக்கா அர்ச்சனை செய்தால் எல்லாக் குழப்பமும் தீருமென்று கிழக்கு மாகாண மக்கள் நம்புகிறார்கள். எல்லாம் தெய்வக் குற்றம்தானோ?

# பொய் சொன்னவர் யார்? குடிமக்கள் குழப்பம்!

அடிக்கடி தடாலடி அறிக்கைகளை விட்டு அசத்தும் கூட்டமைப்பின் அரியநேத்திரன் எம்பி கடந்தவாரமும் தடாலடியாக அறிவிப்பொன்றை வெளியிட்டு அசத்தியிருக்கிறார். வடக்கு, கிழக்கு மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் மட்டக்களப்பில் மாத்திரம் புதிதாக 85 மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளதாக அரியம் எம்.பி. கடந்தவாரம் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகள் ஆறாயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டம் மாபெரும் போராட்டமாக அமையக்கூடிய சாத்தியம் உள்ளது. அவர்களுக்கு வேலைவாய்ப்பு அவசியம். வேலைவாய்ப்பு தருவதாகக் கூறும் அரசாங்கம் மட்டக்களப்பில் புதிதாக 85 மதுபானசாலைகளைத் திறந்துள்ளது. இதுவா அபிவிருத்தி என்று அவர் கேட்கப்போக, சும்மா இருக்க முடியாத ஊடகங்கள் அவருடைய இக்கருத்தை முக்கியத்துவம் கொடுத்து தமது ஊடகங்களில் வெளியிட்டன.



இதனால் பொங்கியெழுந்த மட்டு, அம்பாறை மாவட்ட மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் யுத்தம் ஓய்ந்த பின்னர் எதுவித மதுபானசாலைகளும் திறக்கப் படவில்லையென மறுத்துக் கூறியிருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மதுவரித்திணைக்களத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் நடராசா சுசாதரன் தலைமையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இக்கருத்தை அவர் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் கருத்தானது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகவே எம்மால் நோக்கப்படுகின்றது. 2009ஆம் ஆண்டு கிழக்கு மீட்கப்பட்ட பின்னர் எதுவித மதுபானசாலை அனுமதிகளும் வழங்கப்படவில்லை. யுத்தத்தின் முன்னரான காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 55 மதுபானசாலைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் உல்லாசப் பயணத்தை நோக்கமாகக் கொண்டு விடுதியுடன் இணைந்த இரண்டு மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 57 மதுபானசாலைகளே செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் யுத்த சூழ்நிலைக்கு பின்னர் 85 மதுபானசாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள கருத்து முற்றுமுழுதான உண்மைக்கு புறம்பானதாகவுள்ளது என அடித்துக் கூறியிருக்கிறார் சுசாதரன்.

இதில் நகைச்சுவை என்னவென்றால் மாவிலாறில் தொடங்கிய யுத்தம் மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாணத்தில் 2007ஆம் ஆண்டே முடிவடைந்துவிட்டது. அதுவரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களெல்லாம் பின்னர் படையினரின் வசம் வீழ்ந்தன. முன்னர் புலிகள் இருந்த காலத்தில் அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மதுபானசாலைகளுக்கோ, மதுபான விற்பனைக்கோ இடமளிக்கப்படவில்லை. ஆங்காங்கே ஓரிரண்டு வீடுகளில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அவர்களது கண்காணிப்பின்கீழ் மதுபானம் விற்கப்பட்டு வந்தாலும் பெரியளவில் விற்பனை நிலையங்களுக்கு அனுமதியில்லை.

ஆனால், முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவு, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவு, வவுணதீவு பிரதேச செயலாளர்பிரிவு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இன்று முறையே 2 வீதம் மதுபானசாலைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு எட்டு மதுபான நிலையங்கள் இயங்கி வருகின்றன. குடி மன்னர்களும் மிகவும் சுதந்திரமாக குடியில் மூழ்கி வருவதை மாலைவேளைகளில் இப்பிரதேச வீதிகளில் காணலாம்.

கிழக்கில் யுத்தம் எப்போது முடிவடைந்தது என்று தெரியாத மதுவரித்திணைக்கள அத்தியட்சகருக்கு எங்கே இந்த மதுபானசாலைகளுக்கு அனுமதியளித்தது தெரியப் போகிறது. ஒன்றில் அத்தியட்சகர் சொன்னது பொய்யா? அல்லது அரியம் எம்.பி. சொன்ன கணக்கு பொய்யா என்று 'குடி' மக்கள் தலையைப் போட்டுப் பிய்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

# அர்த்தம் புரிகிறதா?

மாகாண சபைகளில் அரசதரப்பினருக்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்புகள் போன்ற அனைத்தும் அரசுடன் இணைந்து செயற்படும் கட்சியினருக்கே வழங்கப்படும் என பொருளாதார அபவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உறுதியாக தெரிவித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நீதி அமைச்சர் ரவுப் ஹக்கீம் தலைமையிலான காங்கிரஸ் உறுப்பினர்களுடன் நடந்த சந்திப்பின்போதே அமைச்சர் பசில் இப்படி தெரிவித்திருப்பதாக அந்த அறிக்கை தெரிவித்திருக்கிறது.


முன்னர் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளும் உதவிகளும் வாய்ப்புகளும் அடுத்த ஆண்டிலிருந்து மாகாணசபை உறுப்பினர்களின் சிபார்சுக்கு ஏற்ப வழங்கப்படவிருப்பதாகவும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசாங்கக் கட்சி மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அதேவிதமான வாய்ப்புகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் பசில் தெரிவித்திருக்கிறார். இத்தகவல் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் சென்ற குழுவினர், பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்துப் பேசிய போதே தெரிவிக்கப்பட்டதாக காங்கிரஸ் தெரிவித்திருக்கிறது.

ஆக எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கு எதுவும் கிடைக்காது. வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பெரும்பான்மையாக வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டதும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சும், கைத்தொழில்கள் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, தேர்தல் முடிவுகள் தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் வெற்றி பெற்றவர்களால் எதுவும் செய்ய முடியாது என்றும் கூறியதன் அர்த்தம் இப்பொழுது புரிகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் சுற்றி...

எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு)



# தமிழ் பேசும் தாயகத்தை காப்பாற்ற தமிழர் முஸ்லிம் ஐக்கியம் தேவை

வட பகுதியிலிருந்து முஸ்லிம் மக்களை எந்த அவகாசமும் கொடுக்காமல் பிறந்து வாழ்ந்து வளர்ந்த மண்ணிலிருந்து வெளியேற்றியது கொடுமை. இதை விடக் கொடுமை 1956 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரை மூன்று தடவைகள் உயிர் பறிக்கப் பட்டவர்கள் போக உடைமைகள் அனைத்தையும் இழந்து கப்பல்களில் அநாதைகளாக அகதிகளாக தங்கள் தாயகம் என்ற நிலையில் வடக்கே சென்ற தமிழர்கள். இஸ்லாமியத் தமிழர்களை வெளியேற்றியதாகும்.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'சிங்களம் மட்டும்' சட்ட மசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவந்ததை எதிர்த்து செல்வநாயகம் தலைமையில் கட்சியினர் சிலமணிநேரம் பட்டினி கிடக்கச் சென்றனர். இவர்கள் பாராளுமன்றத்தை உடைக்கச் செல்வதாகப் புரளி கிளப்பி ஆளுந்தரப்பிலிருந்த சிலரின் ஆசியுடன் குண்டர்கள், பட்டினி கிடக்கச் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இதன் எதிரொலியாக இங்கினியாகல, கல்லோயா, அம்பாறை ஆகிய குடியேற்றப் பகுதிகளில் குடியேறிய தமிழர்கள் தாக்குதலுக்குள்ளானார்கள். அங்கு குடியேறியிருந்த தமிழர்கள் உடைமைகள் யாவற்றையும் இழந்து உடுத்த உடையுடன் உயிரைக் காப்பாற்ற தங்கள் மண்ணுக்குத் தப்பிச் சென்றனர். இவர்கள் மீண்டும் அம்பாறை கல்லோயாப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.

பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த குண்டர்களினால் தாக்குதலுக்குள்ளாகி உயிர் காப்பதற்காக ஓடித் தப்பிய தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது கொடுமை.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக முறையில் பாராளுமன்றத்திலுள்ளேயும் காந்தி வழியில் சாத்வீக முறையின் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் போராடப் போவதாக 1956 ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரகடனப்படுத்தியிருக்கிறது.

1956 ஆம் ஆண்டு பொதுத்



தேர்தலில் கிழக்கிலிருந்து இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களாக போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப் பட்டிருந்தார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வடக்கு கிழக்கு முஸ்லிம் பிரதிநிதிகளும் கடுமையாக ஆட்சேபித்து எதிர்த்தும் வாக்களித்தனர்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண்பதற்கு 1957 ஆம் ஆண்டில் பிரதம மந்திரியாக இருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா தமிழர்தலைவர் செல்வநாயகத்துடன் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

இதற்கு எதிர்க்கட்சியிலிருந்து எதிர்ப்புக் கிளம்பியதுடன் ஆளும் கூட்டணி கட்சிக்குள்ளும் எதிர்ப்பு எழுந்தது. கண்டிக்கு பாதயாத்திரை, ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இதனால் ஒப்பந்தத்தை பிரதமர் பண்டாரநாயக்காவே கிழித்தெறிந்தார்.

1958 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சி வவுனியாவில் தனது மகாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டுக்கு வந்து தாக்குதல் நடத்த முடியாமல் போனதால் பொலன்னறுவை சென்று பதவியாவில் குடியேறிய சிங்களக் குண்டர்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து நன்கு திட்டமிட்டு தமிழர்களுக்கு எதிராக நாடு முழுவதும் இனக்கலகம் தொடங்கப் பட்டது. இதில் தமிழர்கள் பலர் உயிரிழந்ததுடன் பன்னிராயிரம் தமிழர்கள் சகலவற்றையும் இழந்து அகதிகளாகினர். இவர்களை அரசாங்கம் முதலில் கண்டு கொள்ளவேயில்லை. கொழும்புத் தமிழ்ப் பிரமுகர்கள் தஞ்சமளித்து பின்னர் அவர்களின் முயற்சியினாலேயே கப்பல்களில் தாயகமான வடக்கு கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதன் பின் சில குடும்பங்கள் கொழும்புக்குத் திரும்பவில்லை.

1958 ஆம் ஆண்டில் தொடங்கிய தமிழர்கள் மீதான இனவெறியும் கலகமும் பின்னர் 1977 ஆம் ஆண்டிலும் மிக உச்சமாக 1983 ஆம் ஆண்டிலும் திட்டமிட்டு நடத்தப்பட்டன. இதனால் தமிழர்கள் தாம் உழைத்துத் தேடிய சொத்துக்கள் அனைத்தையும் இழந்து பலர் உயிரையும் பலிகொடுத்து தங்கள் தாயகம் திரும்பவும் மற்றும் பலர் புலம்பெயர்ந்து செல்லவும் நேர்ந்தது. இவ்வளவு கொடுமைகளையும் அனுபவித்த தமிழர்கள் தம்முடன் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இஸ்லாமியத் தமிழர்களை குறுகிய நேர அவகாசத்தில் வெறுங்கையுடன் வெளியேற்றியது கொடுமையிலும் கொடுமையே!

1956 முதல் 1983 வரையான இனக்கலவரங்களின் விளைவாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டி வந்தது. இந்த இளைஞர்களை ஒன்று சேர்க்காமல் பிரித்து வைத்தே ஆதரவும் ஆயுதமும் பயிற்சியும் கொடுத்து வளர்த்து விட்டது இந்தியா. ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் பல இயக்கங்களாகப் பிரிந்து தங்களுக்குள் மோதிக் கொண்டனர். இதில் இந்திய உளவுப் பிரிவுக்கும் பங்குண்டு. சில இயக்கங்கள் இலங்கை அரசுக்கும் உதவியாகத் திரும்பின.

இளைஞர்கள் தொடங்கிய விடுதலைப் போராட்டம் உள்மோதல்களின் விளைவாக பயங்கரவாதமாகியது. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உலகப் பயங்கரவாத எதிர்ப்புத் தொடங்கியது இலங்கை ஆட்சியாளர்களுக்கும் வாய்ப்பானது. இந்தியாவின் போரை இலங்கை நடாத்தி வெற்றி கண்டது. வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்தனர். உள்நாட்டிலேயே முகாம்களில் தங்கி வாழவேண்டிய நிலை. இன்றும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத குடும்பங்கள் பல. வன்னியிலும் கிழக்கிலும் வாழ்ந்த பல குடும்பங்கள் இன்று அங்கு திரும்பிச் செல்லமுடியாத நிலையிலுள்ளனர். பல இடங்கள் படைகளின் முகாம்களாகி விட்டன. மீள்குடியேற்றம் இன்றும் முடியவில்லை. மீள்குடியேற்றப்பட்டதாக சொன்ன இடங்களிலும் இன்னும் மக்கள் தறப்பாள்களின் கீழேயும் தகரக் கொட்டகைகளின் கீழேயும்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில் வடக்கில் காணிகள் மீளப்பதியப்படவேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டு பதியப்படுகின்றன. புலிகள் கொடுத்த காணிகள் என்று சொல்லி முன்பு குடியிருந்தவர்களின் இடங்கள் எடுக்கப்படுகின்றன. இந்நிலையில் வன்னிப் பகுதியில் முன்பு சிங்களவர்கள் பல்லாயிரம் பேர் வாழ்ந்ததாக தெற்கில் குரல் எழுப்பப்படுகின்றது. புத்தர் சிலை வைக்கப்படுவதும் உரிமை கொண்டாடுவதற்கே.

முஸ்லிம்களை வடக்கிலிருந்து வெளியேற்றியவர்கள் இன்றில்லை. இப்பொழுது தமிழர்களும் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயக பிரதேசமாக இருக்கும் என்று சொல்லும் நிலை இருக்காது. முன்பு திட்டமிட்டு குடியேற்றமுடியாமலிருந்த வடபுலத்து நிலங்களில் இப்பொழுது ஆயுதப் படைகளின் பாதுகாப்புடன் திட்டமிட்ட குடியேற்றம் அபிவிருத்தி என்ற பெயரையும் சேர்த்து துரிதமாக நடைபெறுகிறது.

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி புனித நகர் என்ற பெயரில் முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப் பட்டன. இன்று வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களுடைய காணிகள்மட்டுமல்ல முஸ்லிம்களின் காணிகளுமே பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இப்பொழுது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஐக்கியமாகத் தமது காணிகளை பாதுகாக்கத் தவறினால் தமிழ்ப்பேசும் பிரதேசம் என ஒன்றிருக்காது. எந்த இனத்துக்கும் எங்கும் தனிப்பிரதேசம் இல்லை என்று பசில் ராஜபக்ஷ சொன்னது செயல்படுத்தப்படுகிறது. இலங்கை சிங்கள பௌத்த தேசம் தானே.!

### நக்கல் ஸையாண்டிப் போடியார்

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே தன் ஹொண்டாவை ஸ்டேண்ட் போட்டுவிட்டு உள்ளே நுழைந்தான் ஸாதிக். முன் வெரண்டாவில் குர்ஆன் ஓதிக்கொண்டிருந்த பரீனா குர்ஆனை மூடி புக் ஷெல்பில் வைத்துவிட்டு கணவனின் அருகில் வந்ததும்..

'குழந்தைங்க சாப்பிட்டாச்சா.' ஸாதிக் கேட்க

'ஆமாங்க அதெல்லாம் ஆச்சு டீயும் அதான் சொல்லியாச்சி. ஒரு நாளுமில்லாம இன்டைக்கி எங்க இப்படி லேட்'

'பணம் தேடி கொஞ்சம் அலைய வேண்டியதாயிற்று. புள்ளைங்க ரெண்டும் இங்க படிக்குது. நீ முதல்ல ஸ்டோவ் ல ஏதண்டு போட்டு கொண்டு வா' ஸாதிக் அறைக்குப் போய் உடைமாற்றி குளியலை முடித்துக் கொண்டு வந்தான். குழந்தைகள் இரண்டும் அவனுடன் கொஞ்சம் விளையாடிவிட்டு மடிமேல் தூங்கவும் எடுப்பில் கொண்டு போய் படுக்க வைத்தான் ஸாதிக்.

**'இந்தப் பொண்டாட்டிமாரே இப்படித்தான் எங்க குடும்பத்துக்கு செலவழிக்கிறோம்னாலே வயிறு எரிஞ்சுடுமே...'**

'பரீனா இந்த மாலை நல்லா இருக்கான்னு பாரு' சமையல் கட்டிலிருந்து வந்தவள் 'உங்க தங்கச்சிக்கா, அவ தந்ததவிட இது பாரமாவும் பார்வையாவும் இருக்கே. இப்ப நமக்கு இருக்கிற நெலமையில ஒரு மஞ்சாடி அதிகம்னாலும் கஷ்டம்தானே. இதுல ஒரு பவுன் அதிகமா இருக்குமா? எப்படிங்க'




# உறவு

'பாரத்தை கரெக்டா கண்டுபுடிச் சிட்டியே... ஆனா நீ ஏன் அப்படி நெனைக்கிறே... கஷ்டம்னு பேசும் நின்னப்ப என் தங்கச்சிதானே மாலையைத் தூக்கித் தந்தாள். நான் தானே அத திருப்பித் தர்றேன்னு சொல்லி நாளைய திகதியை கொடுத்துட்டு வந்தேன்'

'எனக்கு புரியுதுங்க நீங்க வெளிநாட்டுல சம்பாதிச்ச தெல்லாம் அவங்களுக்காகத்தானே செலவழிச்சீங்க. சீ செஞ்சு கல்யாணம் பண்ணிவெச்சு வீடும் கட்டிக்கொடுத் தீங்க. நம்ம வீடு கட்ட வாங்கின கடன் இது.. வீட்டு வேலையே இன்னும் முடியல... இப்ப நாம இருக்கிற நிலமைல இந்த மாலையை உங்க தங்கச்சி வாங்கிக் கொண்டால் அவ மனுஷியே இல்லை புரிஞ்சுக்குங்க..' பரீனா இயலாமையில் புலம்பவும் ஸாதிக்கின் குரல் உயர்ந்தது

◄ பாத்திமா நிஹாஸா ►

'இந்தப் பொண்டாட்டிமாரே இப்படித்தான் எங்க குடும் பத்துக்கு செலவழிக்குறோம்னாலே வயிறு எரிஞ்சுடுமே'

'உண்மைய சொன்னா எங்க கோபப்படுறீங்க அவ உங்களிடம் ஒன்றைப்போட்டு ஒன்பதைக் கறக்கப்பாக்குறா உங்க முன்னாடி நடிக்கிறா என்னை நம்புங்க'

பரீனா கூறி முடிக்கவில்லை. அவளது கன்னங்களை ஸாதிக்கின் கரம் பதம் பார்த்துவிட்டது.

'இனிமே அவளப்பத்தி ஒரு வார்த்தை சொன்னே நடக்குறதே வேற. நாளைக்கு நீ என்னுடன் என் தங்கச்சி வீட்டுக்குப் போக வர்றே... அவ என்ன சொல்றான்னும் நீ கேக்கத்தான் போறே'

ஸாதிக் விருட்டென்று அவ்விடத்தைவிட்டு நகர்ந்து அறைக்குள் சென்று விளக்கை அணைத்தான்.

பரீனா கண்ணீர் வடியும் கன்னத்துடனும் மனதில் பட்ட காயத்தையும் பொருட்படுத்தாது இறைவனைத் தொழுது கணவனின் வெள்ளை மனசை புரிந்து கொள்ளாத உள்ளங்களை சபித்தாள். மனித சுபாவங்களை புரிந்துகொள்ளும் பக்குவத்தை அளிக்கும் படி இறைவனிடம் மன்றாடினாள். தொழுத பாயில் அழுதழுதே உறங்கிப்போனாள்..

மறுநாள் பொழுதும் புலர்ந்தது. கணவனின் தங்கை வீட்டுக்கும் வந்தாயிற்று.

'இந்தாம்மா உன் நகை. சொன்ன திகதிக்குள் தந்திட்டேன் பாத்திமா' ஸாதிக் கூறியபடியே மாலையை தங்கையின் கையில் திணித்தான்.

'ஐயோ வேண்டாம் நாநா அவருக்கு தெரிஞ்சா திட் டுவாரு... நீங்க எனக்கு எவ்வளவோ செஞ்சிருக்கீங்க' விடாப்பிடியாக மறுத்தாள்.

ஸாதிக் விடவில்லை. எப்படியோ தங்கையிடம் ஒத்துக் கொள்ளவைத்தான்.. வெற்றிப் பெருமிதத்தில் மனைவி மீது கட்டெறிக்கும் அனல் பார்வைகளை வீசிக் கொண்டிருந்தான்.

'தங்கச்சி இன்னைக்கி இங்க விருந்து சாப்பிட்டு விட்டுத் தான் போறோம். நீங்க போய் சமைங்க, நான் ஆட்டுக்கறி எடுக்க டௌனுக்குப் போய் வர்றேன்'

ஸாதிக் கிளம்பவும் இருவரும் சமையல் கட்டுக்குள் நுழைந்தார்கள்.

'என்ன பரீனா மதினி மாலை நான் தந்த அளவு வெயிட்தானே' மெல்லப் பேச்சைக் கொடுத்தாள்

'என்ன மதினி அப்படி கேட்டுட்டீங்க... உங்க நாநாவ பத்தி உங்களுக்குத் தெரியாதா? ஒரு பவுன் கூடுதலாவே எடுத்திருக்கிறாரு'

> 'இனிமே அவளப்பத்தி ஒரு வார்த்தை சொன்னே நடக்குறதே வேற. நாளைக்கு நீ என்னுடன் என் தங்கச்சி வீட்டுக்குப் போக வர்ரே. அவ என்ன சொல்றான்னும் நீ கேக்கத்தான் போறே...'

'இல்ல வெயிட் கொஞ்சம் கம்மியா இருக்கிற மாதிரி இருக்கு... எதுக்கும் நான் நாளைக்கு நகைக்கடைக்குப் போய் வெயிட் பாத்துட்டு சொல்லி அனுப்புறேன்... வெயிட் கொஞ்சம் அங்கால இங்கால ஆக்கன்னா மாத்தித் தந்திடுங்க என்ன? இப்படி சின்னச்சின்ன விசயங்களை வீட்டுக்காரருக்கு தெரியப்படுத்தனு மென்றில்லை... நாநாவும் தெரிஞ்சுக்கொள்ள தேவையில்ல' பேச்சோடு பேச்சாய் கணவனின் தங்கை கூறுவதைக் கேட்கையில் பரீனா ஆச்சரியப்படவுமில்லை அதிசயப் படவுமில்லை.

ஆனால் ஆட்டுக்கறி எத்தனை கிலோ வேண்டுமென்று கேட்க திரும்பி வந்த ஸாதிக்கிற்குத்தான். மனசு வெடித் துச் சிதறியது. மௌனமாய் கேட்டுக்கொண்டிருக்கும் மனைவி பரீனாவை பரிதாபமாய் பார்த்துவிட்டு வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போனான் ஸாதிக்.

[யாவும் கற்பனை]

படம்: தனபாலன் (SVIAS)

**உங்களின் சட்டம் சம்பந்தமான பிரச்சினைகளை எமக்கு எழுதியனுப்புங்கள். அனுபவமிக்க சட்டத்தரணிகள் உங்களுக்குப் பதிலளிப்பார்கள்.**

சட்டம் கேள்வி-பதில், இருக்கிறம்
03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-07.

# புயலாகும் பெண்மை



பெண்ணே!!!
நீ பாலன் போற்றும்
பெண்மையானவள் தான்!

ஆனால்,
அடக்கியொடுக்கி
வாழ நினைக்கும்
ஆடவர் மத்தியில்
அடம் சான்ற
வன்மையானவள்!

பணிவும் பரிவும்
பாவையர்க்கு
அழகானவை தாம்!

ஆனால்,
அநியாயங்கள் செழித்தோங்கி
அநீதி
தலைவிரித்தாடும்போது
பணிந்து போகாமல்
துணிந்து நில்!

திண்மை நெஞ்சொடு
தொடர்ந்து செல்!

பூங்கொடியே...!
நீ மலருக்கு
உவமிக்கப்பட்ட
மங்கை தான்!

ஆனால்,
தீங்கிழைக்கவந்தால்
முள்ளாகத் தீண்டவும்
தயங்காதே!

மாதரசே!
நீ மந்தமாருதம் தான்!
பெண்மைக்கு ஊறு
வந்தால்
புயலாக மாறி விடு!!!

- வெலிகம ரிம்ஸா
முஹம்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்து போகும் மீள்குடியேற்றக் கனவுகள்




◄ கலியுகன் ►



குரும்பசிட்டி கிராமம் யாழ் நகரிலிருந்து கிழக்காக பலாலி வீதிக்கு மேற்கே பலாலிக்கு அண்மையில் அமைந்துள்ளது. இக் கிராமம் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் ஜே 243 கிராம சேவகர் பிரிவுக்குள் அடங்குகிறது.

பலாலிக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணத்தில் சொந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முதல் கிராமம் குரும்பசிட்டிதான். இங்கு வாழ்ந்த மக்கள் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அக்கிராமத்தில் இருந்து வெளியேறினார்கள். பின்னர் அவ்வப்போது தங்கள் பிரதேசத்திற்கு சென்றுவந்த பொழுதும் 1990 ஆம் ஆண்டுக்குப்பின் அவர்களின் நிலங்களுக்கு செல்ல முடியாமலேயே போய்விட்டது.

வீதியின் ஓரத்தில் குரும்பசிட்டி செல்லும் வழி என பொறிக்கப்பட்டிருந்த பலகை எமக்கு வழிகாட்ட குரும்ப சிட்டி கிராமத்துக்குள் நுழைந்தோம். யுத்த வடுக்களின் அடையாளச் சின்னங்களாய் வீதி ஓரமெங்கும் இடிந்தும் நொறுங்கியும் போன வீடுகள். எந்த வீடுகளிலும் மக்கள் இல்லை. மீள் குடியேற்றத்திற்காய் அனுமதியளிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்களின் நடமாட்டத்தைக் காணமுடிய வில்லை. சிக்கலான பிரதேசமொன்றிற்குள் நுழைந்து விட்டோமோ என்று சிறிது தயங்கினோம். குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தடியில் ஒருவர் நிற்பதை அவதானித்த போது தயக்கம் மறைந்தது.

அவர் வாய் பேசமுடியாத ஒருவர். மீண்டும் அந்தப் பிரதேசத்திற்கு வந்து குடியிருக்கும் ஆவலில் தினமும் அங்கு வந்து வீட்டைத் திருத்துவதாக அறிந்து கொண்டோம். அவரது பெயர் மகேந்திரன். தற்போது உரும்பிராயில் வசித்துவரும் அவருக்கு மூன்று பிள்ளைகள். மனைவியும் வாய்பேச மாட்டார். என்று பின்னர் அறிந்து கொண்டோம். தான் விரைவில் அங்கு வந்து குடியேறப்போவதாகவும் அவர் தனது சைகை மொழியில் கூறி ஆனந்தப்பட்டுக்கொண்டார். சற்றுத் தொலைவில் ஒரு வீடு இருப்பதாக அவர் காட்ட நாம் அங்கு சென்றோம். ஒரு அம்மா எங்களை வரவேற்றார். தனது பெயர் தங்கமலர் எனக் கூறிய அவர், தாங்கள் இரண்டு குடும்பங்கள் மட்டும்தான் அங்கு வசித்து வருவதாகக் கூறி எங்களை ஆச்சரியத்துக்குள் ஆழ்த்தினார்.

'இஞ்சால சித்திரை மாதம் விட்டுட்டாங்கள். நாங்கள் இடம் பெயர்ந்து ஏழாலையில இருந்தனாங்கள் எங் கண்ட இடத்தில இருக்க விட்டுட்டாங்கள் எண்ட உடன நாங்கள் இருந்த வீட்டுக்காறர் எங்கள எழுப்பிப் போட்டீனம். ஆனா எங்கண்ட இடத்த இன்னும் விடேல்ல. எங்கண்ட வீடு ஆமீன்ர 'பண்ட்'க்குள்ளதான் கிடக்குது. இது சொந்தக்காரர்ர வீடு. என்ன செய்யிறது இருக்க வந்திட்டம். நாங்கள் தான் முதல்ல வந்தனாங்கள். வேற ஆக்கள் வராததால இரவில தங்குறேல்ல.

'கரண்ட் இல்ல. குடிதண்ணி இல்ல. கிணறெல்லாம் தூர்ந்துபோச்சு. கடைகள் இல்லை. பாடசாலை இல்ல, கொஸ்பிற்றல் இல்ல. வீடுகள் கூட உடைஞ்சுதான் கிடக்கு. திருத்தித் தாறமாதிரி இல்ல. அப்ப என்னெண்டு சனம் இஞ்ச இருக்கவரும்' என்கிறார் கவலையோடு.

அங்கு குடியிருக்கும் மற்றைய குடும்பத்தின் வீட்டுக்குச் சென்றோம். அவர்களின் வீடும் பண்ட்டுக்குள்தான் இருக்கிறது. அவர்கள் தங்கியிருப்பதும் உறவினர் ஒருவரின் வீட்டில்தான். எந்தவிதமான அடிப்படை வசதிகளும் பூர்த்தியாக்கப்படாத நிலையில் தாங்கள் வீடு கூட இல்லாத நிலையில் அங்கு குடியிருக்க வந்தது பற்றிக் கூறும் இராசரத்தினம் சுபாசினி என்ற பெண்மணி உங்கள் இடத்திற்கு விட்டுவிட்டார்கள், நீங்கள் எழும்புங்கள் என முன்னர் தாம் வசித்த வீட்டுக்காரர் கரைச்சல் படுத்தியதால்தான் தாம் அங்கு குடியிருக்க வந்ததாகக் கூறுகின்றார்.

'என்ர கணவர் கூலி வேலை செய்கிறார். அதனால ஓரளவு பரவாயில்ல. கிட்டடியில எங்கயும் போய் வேலை செய்திட்டு வருவார். யாழ்ப்பாணத்தில வேலை செய்யிற ஆக்கள் இஞ்ச இருக்க வந்தா என்ன செய்யிறது. இன்னும் போக்குவரத்துக்கூட இல்ல. ஒரு கடைக்கு போறதெண்டா ரெண்டு மூண்டு கிலோமீற்றர் போகவேண்டும். எந்தவித பாதுகாப்பும் இல்லாத பிரதேசமாத் தான் இருக்கிறது. என்ன செய்கிறது. எங்களுக்கும் வேறு வழியில்லை. எங்கள் சொந்த ஊர் என்ற வீராப்பில் வந்துவிட்டோம். இன்னும் சொந்த வீட்டிற்கு செல்ல முடியவில்லை' என்றார்.

மீள் குடியேற்றங்கள் பற்றிய வலிவடக்கு மக்களின் கனவுகள் மெல்ல மெல்ல கலைந்து போகத் தொடங்கியிருக்கின்றன என்று தான் கூறவேண்டும். பலாலி யை அண்டிய மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை போன்ற பல கிராமங்களில் மக்களின் மீள் குடியமர்வு பற்றிய எந்த முன் முனைப்பு பற்றிய தகவல்களும் இல்லை. மீள் குடியேறலாம் என அறிவிக்கப்பட்ட கிராமங்களிலும் மக்கள் குடியேறுவதற்கான சாதாரண அடிப்படைவசதிகள் கூடச் செய்து கொடுக்கப்படவில்லை. நீங்கள் மீள் குடியேற்றுமாறு நச்சரித்தீர்கள், நாங்கள் குடியேற அனுமதித்திருக்கிறோம். வசதி வாய்ப்பைப்பற்றிக் கேட்காதீர்கள். இருப்பதும் விடுவதும் உங்கள் முடிவு என்பது போலத்தான் இருக்கிறது நிலைமை.

வலிவடக்கு மீள் குடியேற்ற நிலைமைகள் தொடர்பாக குரும்பசிட்டி கிராம சங்கத் தலைவர். ஆ.சி. நடராஜாவிடம் கேட்டபோது, 'குரும்பசிட்டியின் சில பகுதிகள் முன்னர் மீள் குடியமர் விற்காக அனுமதிக்கப்பட்டிருந்தன. பொன் பரமானந்தா வித்தியாலயமும் அதனை அண்டிய பகுதியுமாக 100 மீற்றர் பிரதேசம் வேண்டும் எனக் கேட்டு வந்தோம். தற்போது 200 மீற்றர் வரையான பிரதேசம் தந்துள்ளார்கள். இன்னும் குரும்பசிட்டிக்கான பிரதேசங்கள் சில, உயர்பாதுகாப்பு எல்லைக்குள் இருக்கின்றன. என்ன இருந்தும் அடிப்படை வசதிகள்கூட இல்லாத ஒரு இடத்தில் எப்படி மீள் குடியேறுவது. மீள்குடியேற்றம் நிகழும்போது அந்த மக்களின் அடிப்படை பொருளாதார மேம்பாடும் பூர்த்தி செய்யப்படவேண்டும். இன்று குரும்பசிட்டியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் பலருக்கு தற்போது காணிகளே இல்லை' என்றார்.

> *ஈழகேசரி பொன்னையா பிரபல எழுத்தாளர். கனகசெந்தி நாதன் கலைஞர்கள் திருநாவுக்கரசு, கே.கே.வி.செல்லையா, ரேலங்கி, கவிஞர் கந்தவனம், எனப் பகழ் பூத்த பரம்பரைகள் வாழ்ந்ததும் புலவர்கள், புரவலர்கள் வாழ்ந்ததும் குரும்பசிட்டி சன்மார்க்க சபை அமைத்து பெரும் பனியாற்றியதும். கலைவிழாக்களும் இலக்கிய மாநாடுகளும் நடத்தும் இந்திய அறிஞர்கள் மகான்கள் கால் பதித்து மக்களின் விருந்தோம்பலில் திளைத்துமான குரும்பசிட்டி மண்ணின் இன்றைய நிலை கண்ணீர் சிந்த வைக்கும்.*


1986 இல் குரும்பசிட்டி இடப்பெயர்வு தொடங்கி 25 வருடங்கள் ஆகிவிட்டன. குடும்பங்கள் பெருகியுள்ளன. முன்பு தோட்டங்களில் தங்கி வேலைசெய்த குடும்பங்களுக்கு காணிகள் இல்லை. இவர்களும் குரும்பசிட்டி மக்கள்தானே. மிக முக்கியமாக மின்சாரம் வேண்டும். கடந்த பெப்ரவரியில் தருவதாகத்தான் கூறினார்களாம். நான்கு மாத்தில் அடுத்த பெப்ரவரியும்வரப்போகிறது. பாடசாலை, மருத்துவமனை வசதி, போக்குவரத்து ஒன்றுமே இல்லை. தற்போதுதான் பொன்.பரமானந்தா வித்தியாலய பிரதேசம் கையளிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலை இயங்க இன்னும் ஒருசில வாரங்களாவது ஆகும்.




குரும்பசிட்டி மக்கள் பெரும்பாலும் விவசாயிகள். மீள்குடியேறினால் நிவாரண உதவி இல்லை. காணியற்ற மக்களுக்கு காணி வசதிகள் இல்லை, வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் இல்லை. இங்கு விவசாய நிலங்கள் பூரணமாக கையளிக்கப்படவில்லை, கையளிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்குஎந்தவித உதவியும் இல்லை. 25 குடும்பங்களுக்கு அரைப் பரப்பு வீதம் காணி கொடுத் துள்ளார்கள். அவர்கள் அங்கு சென்று குடியேறாவிட்டால் தற்போது அவர்கள் வேலைசெய்யும் குடில்களைப் பிடுங்கப் போவதாக கூறுகிறார்கள். அவர்களில் பெரும் பாலானவர்கள் கூலி வேலை செய்பவர்கள். எந்த வசதியும் செய்யாது அவர்களைக் குடியேற்றினால் தொழிலுக்கு எங்கே போவார்கள். ஆகவே இம்மக்களுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்து மீள்குடியேற்ற வேண்டியது உரிய அதிகாரிகளின் கைகளிலேயே உள்ளது ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பாதாள உலகக்
# பாதுகாப்பில் வெடி

கொலன்னாவை ஆசனத்தில் விருப்பு வாக்குப்போராட்டம் ஒன்று சூடு பிடிக்கலாம் என குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் ஏற்கனவே அனுமானித்திருந்தனர். ஆளும் கட்சியைச் சேர்ந்த இருவேறுபட்ட அரசியல்வாதிகளுக்கு மத்தியில் கொலன்னாவை தேர்தல் தொகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் தக்கவைத்துக்கொள்வதற்கான போராட்டம் அங்கு இடம்பெற்று வந்தமையே இதற்குக் காரணமாகும்.

கொலன்னாவை ஆசனத்திற்கான ஆளும்கட்சி பிரதான அமைப்பாளராக செயற்பட்டு வந்தவர் பாராளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்த துமிந்தசில்வா. இவரை எதிர்த்து முரண்பட்டு வந்தவர்தான் அதே கட்சியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கொலன்னாவைத் தேர்தல் தொகுதி அமைப்பாளருமாகச் செயற்பட்டு வந்த ஜனாதிபதியின் ஆலோசகரும் தொழிற்சங்க செயலாளர் நாயகமுமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர.



ஒரு காலத்தில் கொலன்னாவை தேர்தல் தொகுதியின் அமைப்பாளராக பதவி வகித்து வந்த இவர் துமிந்த சில்வாவின் வருகையோடு பதவி துறக்க வேண்டி ஏற்பட்டது.

## புலன்விசாரணை

துமிந்த சில்வாவின் அரசியல் அதிகாரம் கொலன்னாவை தொகுதியில் செல்வாக்குப் பெற்றுவர ஆரம்பித்ததும் இதற்கு முன்னர் பாரத லக்ஷ்மனுக்கு ஆதரவு தெரிவித்து வந்த பாதாள கோஷ்டியினர் துமிந்த சில்வாவை நோக்கி சுற்றிவர ஆரம்பித்தனர்.

**◄ ஹெட்டி ரம்ஸி ►**

இவ்வாறு நாளுக்கு நாள் ஆயுதபலத்தோடு ஆரம்பித்த கொலன்னாவை தேர்தல் போராட்டம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. கொடிகாவத்தை, முல்லேரியா பிரதேச சபையின் தலைவராக இருந்த பிரசன்ன சோலங்க ஆராச்சி எனும் இளம் அமைச்சர், மக்கள் மத்தியில் தனது அதிகாரத்தை மெல்ல மெல்ல கட்டியெழுப்பிக் கொண்டிருந்தவராவார்.

இவர் ஆளும் கட்சி பிரதான அமைப்பாளரான துமிந்த சில்வாவிடம் வாக்குவாதப்பட்டு பாரத லக்ஷ்மன் மற்றும் சுதந்திரக் கட்சி பழைய அங்கத்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்து தனது அரசியல் பயணத்தைத் தொடங்கியிருந்தார். இதனால் துமிந்த தரப்பினருக்கும் பாரத லக்ஷ்மன் தரப்பினருக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் முற்றி வந்ததோடு அதன் விளைவாக இறுதியில் பாரத லக்ஷ்மனையும் சோலங்க ஆராச்சியையும் கொலைசெய்து விடுவதற்கு வியூகம் வகுக்கப்பட்டிருந்ததாகவும் இரகசியப் பொலிஸாருக்கு கடந்த மார்ச் மாதத்தில் தகவல் கிடைத்திருந்தது.

இது தொடர்பில் பரிசோதனைகளும் நடைபெற்று வந்தன. இவ்விரு தரப்பாருக்கும் இடையில் அடிக்கடி அரசியல் மோதல்நிலைமைகள் ஏற்பட்டு வந்ததோடு கடந்த 8ஆம் திகதி தேர்தல் தினத்தன்று குறித்த மோதல், கொலைக்களத்தில் முடிந்தது.

### சூடுபிடித்த தேர்தல் பிரசாரம்

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொடிகாவத்தை முல்லேரியா பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட பிரசன்ன சோலங்க ஆராச்சிக்கு பாரத லக்ஷ்மன் துணையாக நின்று தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்.

இப்பிரதேச சபைக்கு துமிந்த சில்வாவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தனது ஆதரவாளர்களை களமிறக்கியிருந்தார். இவர்கள் தம் அரசியல் அதிகாரம் முழுவதையும் பயன்படுத்தியிருந்தமையினை காணமுடிந்தது.

இரு தரப்பாரும் அரசியல் மேடைகளில் சூடான தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தனர். கடந்த 4ஆம் திகதி இரவு கொடிகாவத்தையில் துமிந்த சில்வாவின் தலைமையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் இரவு 12 மணியையும் தாண்டி நீடித்திருந்தது. இரவு 12 மணியின் பின்னர் இவ்விடத்திற்கு வந்த பாரத லக்ஷ்மன், தேர்தல் பிரசாரக் கூட்டம் நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த காலவேளை முடிவுற்றுள்ள நிலையில் இன்னும் தொடர்ந்து நடாத்துவதற்கு இடம் தரமுடியாது எனக்கூறி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இப்படி

**‘துமிந்தவுடன் வந்த ஒருவர் பாரத சேரின் காலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தினார். அதன்பின் அவர் கீழே விழுந்தார். அத்தோடு ‘சூடு’ என்பதாக ஒரு சத்தம் கேட்டது. அவ்வேளையில் துமிந்த சில்வாவின் பாதுகாப்பு அதிகாரி தனது கையிலிருந்த ரி-56 ரக துப்பாக்கியால் பாரத சேரின் தலையில் சுட்டார்’**



யாக கொலன்னாவை அரசியல் களம் சூடான வாதங்களுக்கு மத்தியில் இடம்பெற்று வந்தது.

தேர்தல் தினத்தன்று கொலன்னவைப் பிரதேசத்துக்கு கடுமையான பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருந்தன. கொலன்னாவை பிரதேசத்திற்கு பொறுப்பாக இருந்த பிரதி இரகசிய பொலிஸ் அதிகாரியான ஜயந்த குணதிலகவின் ஆலோசனையின்படி மோதல் இடம்பெறலாம் என்று ஊகிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஷேட பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டன.

தேர்தல் தினத்தன்று பகல் வேளையில் எவ்வித மோதல் சம்பவமும் அங்கு பதியப்பட்டிருக்கவில்லை. நுகேகொடை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அப்பிரதேசத்துக்கு அதிகபட்சமான பொலிஸ் குழுக்களை நியமித்து வாக்குச் சாவடிகளை கண்காணிக்கும் பணிகளில் ஈடுபடுத்தியிருந்தார். இந்நிலையில் தேர்தல் தினத்தன்று நுகேகொடை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு அவசர அழைப்பொன்று வந்திருந்தது. பிரசன்ன சோலங்க ஆராச்சியின் மனைவியான மது, ராகுல வித்தியாலய வாக்குச் சாவடியில் வைத்து துமிந்த சில்வாவின் ஆட்களால் தாக்கப்படுவதாக அவ்வழைப்பின் மூலம் தெரியவந்தது.

இவ்வழைப்பு கிடைக்கின்ற வேளையில் அவ்வதிகாரி மாதின்னாகொட வாக்குச் சாவடியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தார். துமிந்த சில்வாவுடன் வந்திருந்த ஆதரவாளர்கள் மற்றும் பாதாள கோஷ்டியினர் வாக்குச் சாவடியில் வைத்து சோலங்க ஆராச்சியின் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள்மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். இத்தாக்குதலின்போது பாதுகாப்புக்காக அருகிலிருந்த அனுர ஸ்டோர்ஸ் கடையை நோக்கி இவர்கள் ஓடிச்சென்றிருந்தனர். அவ்விடத்தில் கலகக்காரர்களாக நடமாடிய காடையர்கள் குறித்த கடையின் இரு ஊழியர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

இச் சம்பவம் நிகழ்ந்த வேளையில் அவ்வாக்குச் சாவடியின் முன்னிலையில் பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திய ஓரிரு பொலிஸ் அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தாக்குதலுக்குட்பட்டிருந்த பெண்கள் குறித்த எஸ்.டி.
பாதுகாப்புத் தேடி வந்திருந்தா
ருந்த பாதாளத் தலைவன் ஒ
படைவீரனின் நெஞ்சில் துப்
அவரைத் தடுத்திருந்தான்.

இவ்வேளையில் பிரசன்ன
உட்பட அவரது ஆதரவாளர்க
வெல பிரதேசத்திலேயே
லக்ஷ்மன், மொரகஹ சந்தியி
சம்பவம் கேள்விப்பட்டதும்
வித்தியாலயத்தை நோக்கி
வந்து கொண்டிருந்தனர்.

தாக்குதல் பற்றி அறிந்த
ஆராச்சி கொடிகாவத்தை
திலிருந்து வந்து கொண்டிருந்தா
சில்வா உட்பட அவரது பரி
டானைப் பிரதேசத்தை நோக்கி
டிருந்தனர். இவ்வேளையில்
தன்னுடைய ஆட்பரிவாரங்களு
வீதியூடாக முன்நோக்கி வந்து

பாரத லக்ஷ்மனின் ஜீப் வ
பாதுகாப்புக்காக நியமிக்கப்ப
பொலிஸ் அதிகாரிகள் மற்றும்
இருந்தனர். அந்த ஜீப் வண்டிக்
டிபெண்டர் வண்டிகளும்
தொடரணியாக வந்துகொண்
வாக்குச் சாவடியினூடாக அ
தை நோக்கிச் சென்று கொண்
துமிந்த சில்வாவின் வாகனத்
நாயக்க நூலகத்திற்கு அருகா
சந்தித்தது.

துமிந்த சில்வா பயணித்

## படுகொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# கோஷ்டியினரின்
# டித்த துப்பாக்கிகள்

எஸ்.டி.எப். அதிகாரிகளிடம்
இருந்தாலும் ஆயுதம் ஏந்தியி
வன் ஒருவன் எஸ்.டி.எப்.
ல் துப்பாக்கியை வைத்து
ன்.

பிரசன்ன சோலங்க ஆராச்சி
ளாளர்கள் நாகஹவில, வெலி
யே இருந்தனர். பாரத
சந்தியில் இருந்தார். இந்தச்
ட்டதும் இருவரும் ராகுல
நாக்கி ஆதரவாளர்களுடன்
ர்.

அறிந்த பிரசன்ன சோலங்க
தை வெலிவெல பிரதேசத்
டிருந்தார். அப்போது துமிந்த
து பரிவாரங்கள் ஹிம்புட்
நோக்கி பயணித்துக் கொண்
ளயில் பாரத லக்ஷ்மனும்
ரங்களுடன் ஹிம்புட்டானை
வந்துகொண்டிருந்தார்.

ஜீப் வண்டிக்குள் அவரது
மிக்கப்பட்டிருந்த இரண்டு
மற்றும் நெருங்கிய ஒருவரும்
வண்டிக்கு பின்னால் இரண்டு
ளும் இரண்டு கார்களும்
கொண்டிருந்தன. வல்பொல
ாக அங்கொடை பிரதேசத்
கொண்டிருந்த இவர்களுக்கு
ாகனத் தொடரணி பண்டார
அருகாமையில் நேருக்கு நேர்

யணித்த லேண்ட் குரூஸர்

வாகனம் திடீரென பாரத லக்ஷ்மனின் மோட்டார் வண்டியை இடைமறித்தது. மற்றுமொரு டிபெண்டர் வண்டி மற்றைய புறத்தில் வழி மறித்தது. அவ்வேளையில் வாகனத்திற்குள்ளேயே இருந்த பாரத லக்ஷ்மனை நோக்கி துமிந்த சில்வா வந்தார். 'நீ என்ன அரசியல் செய்து கொண்டிருக்கிறாய்' என்று பாரத சேர் துமிந்தவிடம் கேட்டபோது அவர், சேருக்கு கண்டபடி திட்டி கழுத்தில் வலப்புறமாக ஒரு அடி அடித்தார். அப்போது பாரத சேர் கீழே விழுந்தார்.



அவ்வேளையில் பாரத சேரின் பாதுகாப்பு அதிகாரிகள் ஓடிவந்தார்கள். இது நான் உருவாக்கிய கிராமம் எனக் கூறிக்கொண்டு பாரத சேர் முன்னோக்கிச் சென்றபோது தெமட்டகொட சமிந்த, சேரின் கழுத்தைப்பிடிக்க முயற்சித்தார். அவ்வேளையில் சேரின் பாதுகாப்புக்காக வந்திருந்த சஞ்ஜீவ (கராட்டி சஞ்ஜீவ) ஒரு சிலருக்கு அடித்தார். அதற்கிடையில் துமிந்தவுடன் வந்த ஒருவர் சேரின் காலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தினார். அதன் பின் அவர் கீழே விழுந்தார். அத்தோடு 'சுடு' என்பதாக ஒரு சத்தம் கேட்டது. அவ்வேளையில் துமிந்த சில்

# லையில் துலங்கும் மர்மங்கள்



வாவின் பாதுகாப்பு அதிகாரி தனது கையிலிருந்த டி-56 ரக துப்பாக்கியால் பாரத சேரின் தலையில் சுட்டார்.' இது சம்பவத்தின் போது அருகிலிருந்த ஒருவர் இரகசிய பொலிஸுக்குத் தெரிவித்த தகவல்.

ஒரு சில வினாடிக்குள் இருபக்கத்திலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் பரிமாறப்பட்டன. பாரத லக்ஷ்மன் கீழே விழுந்தபோது துமிந்த சில்வாவும் தலையில் பட்ட துப்பாக்கிச்சூட்டில் கீழே விழுந்தார். துமிந்த சில்வாவின் ஆதரவாளர்கள் நடாத்திய துவக்குச்சூட்டில் பாரத லக்ஷ்மன் உட்பட 5 பேர் காயங்களுக்கு உட்பட்டனர். பாரத லக்ஷ்மனும் அவருடைய மெய்ப்பாதுகாப்பாளரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

அவரது பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கியும் கடத்திச் செல்லப்பட்டிருந்தது. பாரத லக்ஷ்மனின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளான காமினி மற்றும் கணிய எண்ணெய் கூட்டுத்தாபன அதிகாரியான தமித்த ஜயதிலக்க போன்றவர்களைத் தவிர வெல்லம்பிடிய பொலிஸ் நிலையத்திலிருந்து பாதுகாப்புக்காக பாரதவுக்கு வழங்கப்பட்டிருந்த இரு பொலிஸ் அதிகாரிகள் தப்பிச் சென்றிருந்தனர். இத்தாக்குதல் இடம்பெற்று முடிந்ததும் துமிந்த சில்வாவின் ஆதரவாளர்கள் துமிந்தவை டிபெண்டர் வண்டியில் ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அத்தோடு பாரதலக்ஷ்மனின் ஆதரவாளர்கள் அவரை அதற்கருகிலிருந்த ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றிருந்தனர். வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டாலும் பாரதலக்ஷ்மன் உட்பட இருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டிருந்தனர்.

குறித்த சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபருக்கு தகவல் சென்றது. உடனடியாக முல்லேரியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அழைப்பை ஏற்படுத்தி சம்பவ இடத்திற்குச் செல்லுமாறு பணித்தார். ஐ.டி.எச். வைத்தியசாலைக்குள் பாரதலக்ஷ்மனின் ஆதரவாளர்கள் கலக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அங்கிருந்த பொலிஸ் கெப் வண்டியொன்றும் அவர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. வைத்தியசாலைக்குள் இரண்டு பொலிஸ் அதிகாரிகளை வெளியே வரவிடாமல் தடுத்துக் கொண்டுமிருந்தனர்.

அத்தோடு துமிந்த சில்வாவின் கட்சி அலுவலகம் உடைத்து நொறுக்கப்பட்டது. இராணுவப்படையும் பொலிஸ் படையும் அவ்விடம் கொண்டுவரப்பட்டு நிலைமைகள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. தாக்குதல் நடாத்தி விட்டு தப்பிச் சென்ற துமிந்த சில்வாவின் ஆதரவாளர்கள் பயணித்த டிபெண்டர் வண்டியொன்று பொலிஸ் பொறுப்பதிகாரியொருவரான நெவில் சில்வாவின் வாகனத்தை மோதிச் சென்றது. இதனால் அவர்கள் மோதிய ஜீப் வண்டியை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு தப்பிச் சென்றனர். அவ்வண்டியும் தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் இரகசியப் பொலிஸாருக்கு கூறியிருந்தார். சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு 500 மீற்றர் தூரத்தில் ஏற்கனவே இரகசிய பொலிஸ் படையொன்று நியமிக்கப்பட்டிருந்ததால் பரிசோதனைகளை மேற்கொள்ள இலகுவாக இருந்தது.

இந்தத் தாக்குதலை நடாத்த வந்திருந்தவர்களுள் சுமுது, சுத்தா, ரேல்பாரே சஞ்ஜீவ, அங்கொட சசங்க, தாபரே, நுவன், சுரங்க, போன்ற பாதாளக்கோஷ்டியினர் உட்பட இன்னும் சில பாதாள தலைவர்களும் வந்திருந்ததாக இரகசிய பொலிஸ் பரிசோதனைகளில் புலனாகியது. இவர்களுக்கு மத்தியில் பாதாள தலைவன் கராட்டி தம்மிக இருந்ததாகவும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இவர்கள் இத்தாக்குதலுக்கு முன்னர் ஊறுகொடவத்த பிரதேசத்தில் பிளக்லேபிள் வகையிலான பத்து விஸ்கி போத்தல்களை அருந்திவிட்டு வந்திருந்தார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



பாரத லக்ஷ்மன்மீது துப்பாக்கிச் சூடு நடாத்தியவர்கள் பரிசோதனைகளின் போது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் துமிந்த சில்வாமீது சூடு நடாத்தியவர் பற்றிய விபரம் இன்னும் உறுதியாகவில்லை என்பதாகவும் இதனால் பரிசோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்ட ரி-56 ரக இரு துப்பாக்கிகள், 12 பிஸ்டோல்கள், இரு ரிவோல்வர்கள் புலன்விசாரணைக் கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இரகசியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இத்தாக்குதல்களுக்கு மத்தியில் தெமட்டகொட கரபின்சா ருவன் மற்றும் கரபின்சா சமிந்த போன்ற அண்ணன் தம்பி இருவரும் இருந்ததாகவும் இரகசிய பொலிஸ் பரிசோதனைகளில் புலனாகியது.

இவ்வாயுத குழுக்களுக்கு மத்தியில் இருந்து தாக்குதல்களை வழிநடாத்தியவர் ருவன் என்பவர் என இரகசிய பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அத்தோடு பரிசோதனைகளின் போது குறித்த மோதல் சம்பவத்துக்கு பயன்படுத்தியதாக சந்தே



கிக்கப்படுகின்ற 17 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 10ஆம் திகதியாகிய வேளையில் துப்பாக்கிகளோடு சேர்த்து துமிந்த சில்வாவின் தனிப்பட்ட பாதுகாவலர்களாக சந்தன, மஞ்சுல, மாலக மற்றும் அமில போன்றோரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

பாரத லக்ஷ்மனின் கொலையில் பிரதான சந்தேக நபராக கூறப்படுகின்ற தெமட்டகொட சமிந்த இந்தியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டான். பாரத லக்ஷ்மன் கொல்லப்பட்ட தினத்தன்று இரவு வேளையிலேயே தெமட்டகொட சமிந்த, சப்ராஸ் எனும் முஸ்லிம் பெயரில் மாறுவேடம் பூண்டு திருட்டுத்தனமாக இந்தியாவுக்கு தப்பித்துச் சென்ற வேளையில் கடந்த 13ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரகசிய பொலிஸ் பரிசோதனைக்கு பொறுப்பாக இருக்கும் உதவிப் பொலிஸ் அதிகாரி எச்.சமுத்ர ஜீவ குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த காலத்தில் 2004 ஆம் ஆண்டில் தெமட்டகொட சமிந்தவை கைதுசெய்திருந்தார். அப்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைக் குற்றப்பத்திரிகைகளின் படி சமிந்தவின் அடையாள அட்டை இலக்கம் கண்டெடுக்கப்பட்டு சமிந்தவின் கடவுச்சீட்டு இலக்கமும் தேடிப்பிடிக்கப்பட்டு விமானநிலைய அதிகாரிகளின் மூலம் அவர் சென்னை சென்றிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டது.

இவரது வீஸா காலம் கடந்திருந்தமையால் இந்திய விமான நிலைய அதிகாரிகளினால் இவர் திருப்பியனுப்பப்பட இருந்த வேளையில் பொலிஸ் விஷேட புலனாய்வுப்பிரிவினரால் கடந்த 13ஆம் திகதி அதிகாலையில் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

தெமட்டகொட சமிந்த இலங்கை அழைத்து வரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது பாரத லக்ஷ்மன் கொல்லப்பட்ட இடத்தில் துவக்குச்சூடு நடாத்தியிருந்ததனை ஒப்புக்கொண்டிருந்தாராம். தாக்குதலுக்காகப் பயன்படுத்தியிருந்த மற்றுமொரு ரி-56 ரக துப்பாக்கியொன்றினையும் ரிவோல்வர் ஒன்றினையும் பொலிஸ் விஷேட படையணியிடம் ஒப்படைத்திருந்தார்.

இதன்பின்னர் மேலதிக விசாரணைக்காக சமிந்த இரகசியப்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். ஏனைய சந்தேக நபர்களை கைது செய்யும் படலமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு 50 சந்தேக நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


நன்றி : ரிவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Online Video Editing

எம்மிடம் உள்ள சில வீடியோ கோப்புகளை எடிட் செய்வதற்காக பெரிய தொகை கொடுத்து மென்பொருள்களை வாங்க முடியாது. அதற்கு ஒன்லைன் மூலம் ஒரு எளிய வழிமுறை இருக்கின்றது. கீழுள்ள தளத்திற்குச் சென்று நம் வீடியோக்களை இனி இலவசமாக எடிட் செய்யலாம்.

இணையத்தள முகவரி : http://videotoolbox.com





இத்தளத்திற்குச் சென்று நமக்கென்று ஒரு இலவசப் பயனாளர் கணக்கு உருவாக்கிக் கொண்டு உள்நுழையலாம். வீடியோவை ஓடியோவாக மாற்ற, ஏற்கனவே இருக்கும் வீடியோவிற்கு ஓடியோ மாற்ற, வீடியோவில் தேவையான பகுதியை வெட்டிச் சேர்க்க, வீடியோ வீடியோவிற்கு வோட்டர்மார்க்கிங் (Water Marking) சேர்க்க, வெப்கமரா மூலம் எடுக்கப்படும் வீடியோக்களை எடிட் செய்து விரும்பிய Formatக்கு மாற்ற என இப்படி வீடியோ எடிட்டிங் மென்பொருள் செய்யும் அத்தனை சேவைகளையும் நாம் இத்தளத்தின் மூலம் செய்யலாம். 600 MB வரை உள்ள கோப்புகளை நாம் பயன்படுத்தலாம். எல்லா சேவைகளையும் இலவசமாகவே இத்தளம் கொடுக்கிறது. யூடியூப்உம் வீடியோ கோப்புகளை எடிட் செய்யும் சேவையை கொடுக்கிறது. யூடியூப்ஐ விட இதில் சேவைகளை பயன்படுத்துவது எளிதாக இருக்கிறது.

# கணிதம் கற்றுத்தரும் Google Earth

கணிதப் பாடம் என்றால் அது கடினம் என்று ஒரு பொதுவான அபிப்பிராயம் உள்ளது. பரீட்சைகளில்கூட கணிதப் பாடத்தில்தான் அதிகளவு மாணவர்கள் கோட்டை விடுகின்றனர். அதன் அடிப்படையை தெரிந்து வைத்துக் கொண்டால் நிச்சயமாக கணிதம் கடினமில்லை. இப்போது சாதாரண அடிப்படை கணித கேள்விகளுக்குக்கூட Google Earth தெளிவாக அதுவும் வீடியோவுடன் பதில் சொல்கிறது. கணிதம் பற்றி அடிப்படை அறிவு இல்லாதவர்கூட இதன் மூலம் நன்மையடையலாம்.

இணையத்தள முகவரி : http://realworldmath.org/Real_World_Math/RealWorldMath.org.html





நாம் எப்படி முழுமையாகப் பயன்படுத்தவேண்டும் என்பதே இத்தளத்திற்குச் சென்ற பின்தான் தெரிகிறது என்று சொல்லும் அளவிற்கு, Google Earth வழங்கும் அத்தனை விதமான சேவைகளையும் துல்லியமாக பட்டியலிடுகிறது. கணிதம் என்றால் கசக்கும் மாணவர்களுக்கு கணிதத்தின் மேல் ஒரு தனி விருப்பம் வரும். Google Earth அதுவும் முப்பரிமாணத்தில் அல்ஜீப்ரா முதல் அனைத்து விதமான கணித அடிப்படையும் தெளிவாக சொல்லி புரிய வைக்கிறது. இத்தளத்திற்குச் சென்றால் இங்கு ஆரம்பம் முதல் அத்தனை பாடங்களும் தனித்தனியாக கொடுக்கப்பட்டுள்ளன. இதில் நமக்கு எது வேண்டுமோ அதை சொடுக்கி எளிதாக Google Earth இல் பயன்படுத்தலாம். இதைப் பயன்படுத்துவதற்கு Google Earth மென்பொருள் நம் கணனியில் நிறுவியிருக்க வேண்டும். கண்டிப்பாக இது அனைவருக்கும் நன்மையளிக்கும். குறிப்பாக வானியல் ஆராய்ச்சி மற்றும் கணித ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கும் கணிதம் பற்றி விரிவாக தெரிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த பயனளிக்கும்.

# Graphic Diagram

செயல் திட்டங்கள் ஒவ்வொரு நிலையிலும் எப்படி செயல்படும் என்பதை படங்களின் வாயிலாக வெளிக் கொண்டு வருவதுதான் முழுமையான திட்டமாக இருக்கும். அப்படி முழுமையான செயல் திட்டம் உருவாக்குவதற்கு Graphic Diagram எளிதாக வரைவதற்கு வசதியாக ஒரு தளம் உள்ளது.

இணையத்தள முகவரி : http://live.yworks.com/graphity




இத்தளத்திற்குச் சென்று இடது பக்கம் இருப்பதில் நம்முடைய செயல் திட்டத்திற்கு எந்த வடிவம் சரியாக இருக்குமோ அந்த வடிவத்தை முதலில் தேர்ந்தெடுத்து அதில் இருக்கும் பலவிதமான வடிவங்களில் நமக்கு எந்த வடிவம் வேண்டுமோ அதைத் தேர்ந்தெடுத்து வலது பக்கம் இருக்கும் இடத்தில் சேர்த்து நேர்த்தியான செயல்திட்டம் ஒன்றை உருவாக்கலாம். எங்கு எப்படி இணைப்புக் கொடுக்கவேண்டும் என்பதில் தொடங்கி அனைத்துவிதமான வடிவங்களையும் நாம் சொடுக்கி நமக்கு தகுந்தாற்போல் மாற்றி அமைக்கலாம். எல்லா வடிவங்களையும் சேர்த்து உருவாக்கிய பின் நம் செயல் திட்டத்தை PNG கோப்பாக மாற்றி சேமிக்கலாம். கண்டிப்பாக அவசரமாக செயல் திட்டம் உருவாக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கும், செயல்திட்டம் உருவாக்க மென்பொருள் இல்லை என்று எண்ணுபவர்களுக்கும் இது உதவும்.

# வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க உதவுகின்ற இணையத்தளம்

பார்க்கும்போது ஒரேமாதிரி இருந்தாலும் ஏதேனும் இரண்டு பொருட்களுக்கிடையில் வித்தியாசம் இருக்கும். சிலநேரங்களில் இரண்டு பொருட்களுக்கிடையிலுள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடிக்கும் வேலையும் எமக்கு இருக்கலாம். இதற்கு உதவ ஒரு தளம் உள்ளது. ஒவ்வொரு பொருட்களின் தனித்தன்மையை வைத்து அதற்கு இணையான இரண்டு பொருட்கள் மற்றும் சேவைகளின் வேற்றுமையை அழகாக பட்டியலிட்டு காட்டுகிறது இந்தத் தளம்.

இணையத்தள முகவரி : http://www.differencebetween.net




ஒரே மாதிரி உருவ அமைப்பு அல்லது ஒரே மாதிரி சேவைகள் செய்யக் கூடிய எந்த இரண்டு பொருட்களுக்கும் என்ன வித்தியாசம் என்று நாம் இத்தளத்திற்குச் சென்று எளிதாக அறியலாம். சாதாரண நீருக்கும் சுடு தண்ணீருக்கும் என்ன வித்தியாசம் என்பதில் தொடங்கி கணனியில் உள்ள பொருட்கள் வரை, ஒரே மாதிரி உள்ள இரண்டு பொருட்களுக்கு என்ன வித்தியாசம் என்பதை தெளிவாக விளக்குகிறது. ஒரேமாதிரி உள்ள பல தரப்பட்ட பொருட்களின் பயன்கள் மற்றும் நன்மை தீமை என பல விதமான குறிப்புகளை இத்தளம் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகுக்கலை நிலையம் போன ஆசிரியை பிணமாக மீட்பு

CRIME REPORT


ஸ்ரீநி

அன்று சனிக்கிழமை. விடு முறை என்பதால் சற்று நேரம் கழித்து எழுந்த ஸ்ரீநி வழமை போன்று அன்றைய வேலை களை ஆரம்பித்தார். ஆனால் அன்றைய நாளின் சூரிய அஸ்தமனம் வரை தான் உயிரோடுஇருக்கமாட்டேன்என்று அவர் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி, தலைமுடியை வெட்டி முகத்தையும் அழகுபடுத்திக் கொண்டு அப்படியே கரண்ட் பில்லையும் கட்டிவிட்டு வரலாம் என்று புறப்பட்ட ஸ்ரீநி, பத்து வயதான தனது அன்பு மகளையும் உடன் வரு மாறு கூப்பிட்டார். 'என்னால் முடியாது அம்மா.... நீங்க போய்ட்டு வாங்க' என்று கூறிய மகள் வேலைக்காரியுடன் வீட்டில் இருந்துவிட்டாள். தனது அம்மாவுடன்பேசும் கடைசி வார்த்தைகள் இவைதான் என்பதை அந்த பிஞ்சு உள்ளம் அப்போது அறிந்திருக்காது.

ஆங்கில ஆசிரியராக பணிபுரியும் ஸ்ரீநிவாசனா அமரதுங்க நீர்கொழும்பு கொச்சிக்கடை பிரதேசத்தில்வசித்துவந்தார். பொறியியலாளரான இவரது கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். வருடத்திற்கு இரண்டு தடவைகள் மாத்திரமே அவர் இலங்கை வந்து செல்வார். ஸ்ரீநியும் தன் பாடசாலை விடுமுறை நாட்களில் தன் மகளையும் அழைத்துக்கொண்டு கணவர் பணிபுரியும் நாட்டுக்குச் சென்று வருவது வழமை.

அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்த ஸ்ரீநி அதிகமாக வெளியில் எங்கும் போவதில்லை. வார இறுதி நாட்களில் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கும், ஏதாவது கட்டணங்கள் செலுத்த இருந்தால் அவற்றையும் கட்டிவிட்டு வருவதற்காகவும் வீட்டில் இருந்து வெளியே செல்வார். அன்றும் அப்படித் தான் சென்றார்.

வழமையாக வெளியில் சென்று உடனே திரும்பிவிடும் ஸ்ரீநி அன்று வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லை. ஸ்ரீநியும் மகளும் எப்போதும் ஒன்றாகத் தான் சாப்பிடுவார்கள். அன்றும் தன் தாய் வரும்வரை சாப்பிடாமல் காத்திருந்த மகள் மதிய நேரம் கடந்தும் தன் தாய் வராமை கண்டு பதறினாள். பின் தாயின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பெடுத்தும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. பதற்றமடைந்த ஸ்ரீநியின் மகள் தன் தாத்தா பாட்டியிடம் சென்று விடயத்தைக் கூறினாள்.

உடனே ஸ்ரீநியின் தந்தை, ஸ்ரீநி வழமையாக முடிவெட்டச் செல்லும் சலூனுக்குச் சென்று பார்த்தார். ஆனால் அன்றைய தினம் ஸ்ரீநி அங்கு வரவில்லையென கூறியதைத் தொடர்ந்து ஸ்ரீநியின் தந்தையும் குழம்பிப் போனார். மாலை வரை ஸ்ரீநியைத் தேடிய ஸ்ரீநியின் தந்தை பின் இரவு 8 மணியளவில் கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

மறுநாள் காலை 7 மணியளவில், ஒரு வீதியோரத்தில் உள்ள புதருக்குள் சடலமொன்று கிடப்பதாக வத்தளை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது. விரைந்து சென்று பார்த்த பொலிஸார் அதிர்ச்சியடைந்தனர். அங்கு சுருண்ட நிலையில் ஒரு பெண்ணின் சடலம் கிடந்தது. விடயத்தைக் கேள்விப்பட்ட பிரதேச வாசிகளும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அவ்வாறு வந்தவர்களில் ஒருவர் மூலம் இறந்து கிடப்பது ஸ்ரீநி என்று தகவல் கிடைத்தது. உடனே வத்தளை பொலிஸார் கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்திற்கும் ஸ்ரீநியின் உறவினருக்கும் தகவல் கொடுத்தனர்.


புதருக்குள் இருந்த ஸ்ரீநியின் உடலை பொலிஸார் மீட்கும் போது

ஆனால் ஸ்ரீநியின் மரணம் தொடர்பாக பொலிஸாருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அவரது உடம்பில் காயங்கள்கூட இருக்கவில்லை. எனவே ஸ்ரீநியின் கொலைக்கான மர்மத்தைக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் திண்டாடினர்.

எனினும் அவர்கள் முயற்சியைக் கைவிடவில்லை. ஸ்ரீநி இறந்த தினத்தன்று அணிந்திருந்த நகைகள், கைப்பை, தொலைபேசி போன்றன அவரது சடலத்தை மீட்கும்போது கிடைக்கவில்லை. எனவே பொலிஸார் தொடர்ந்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். ஸ்ரீநியின் தொலைபேசி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால் பொலிஸார் தம் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து அழைப்பெடுத்த வண்ணமிருந்தனர். அதற்கான பலனும் ஒருநாள் கிடைத்தது. ஒருநாள் ஸ்ரீநியின் தொலைபேசியில் ஒரு பெண் குரல். உஷாரடைந்த பொலிஸார் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர்.

அதனடிப்படையில் நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள சலூன் ஒன்றின் உரிமையாளரான பெண் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அவர் வாயே திறக்கவில்லை. பின் குறித்த பெண்ணின் கணவர் எல்லா உண்மைகளையும் கூறிவிட்டார். அவர் கூறிய தகவலின்படி ஸ்ரீநி வீட்டைவிட்டு வெளியேறிய அன்று அதாவது செப்டெம்பர் 24 ஆம் திகதி நேரே சலூனுக்குச் சென்றிருக்கிறார். தனக்கு முக அழகு சிகிச்சை செய்யவேண்டுமென கேட்டுக்கொண்டதற்கிணங்க சந்தேக நபரான பெண் சிகிச்சையை ஆரம்பித்திருக்கிறார்.

'நான் ஒரு வகைக் கிறீமை அவரின் முகத்துக்குப் போட்டு 10 நிமிடங்கள் வரை இருக்கச் சொன்னேன்.. சிறிது நேரத்தில் தனது முகம் அரிப்பதாக அவர் சொன்னார். நான் மருந்து கொடுத்த போது தேவையில்லை சிறிது நேரத்தில் இது விட்டுப் போய்விடும் என்று அவராகவே சொன்னார். சிறிது நேரத்தில் மயக்கம் வருவது போல் உள்ளதாக அவர் கூற நான் வைத்தியசாலைக்கு செல்வோமா என்று கேட்டேன். அவர் வேண்டாம் என்று கூறி அப்படியே சாய்ந்திருந்தார். சற்று நேரத்தில் இன்னொரு பெண்ணும் அழகு சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். இவரது முகத்துக்குப் போட்ட கிறீம் காயட்டும் என்று நான் அந்தப் பெண்ணை இன்னொரு அறைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்தேன். சிறிது நேரத்தின் பின் மீண்டும் வந்து பார்த்தபோது அவரது கண்கள் மேலே போய் வாய் ஒருபக்கம் கோணி இருந்தது' என்று நடந்தவற்றை சந்தேக நபர் கூறினார்.

கலவரமடைந்த சந்தேக நபர் செய்வதறியாது உடனே தனது கணவருக்கு விடயத்தை அறிவித்துள்ளார். அப்போது கணவன் மஹரகமைப் பிரதேசத்தில் இருந்துள்ளார். உடனே வீட்டுக்கு வந்த கணவர் சம்பவம் தொடர்பாக பொலிஸுக்கு அறிவிக்கலாம் என்ற போதும் சந்தேக நபர் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இறந்த ஸ்ரீநியின் உடலை இரவாகும் வரை சலூனின் உள்ளேயே வைத்திருந்துவிட்டு இரவாகியதும் ஒரு பெரிய பெட்டியில் போட்டுள்ளார்கள். ஸ்ரீநியின் உடம்பிலிருந்த சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான நகைகள், கைப்பையிலிருந்த 20,000 ரூபா பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை எடுத்துள்ளார்கள்.

பின் தங்களுக்கு நெருக்கமான ஒருவரின் வாகனத்தை வரவழைத்து பெட்டியில் வைத்திருந்த ஸ்ரீநியின் உடலை வத்தளைப் பகுதியிலுள்ள பாழடைந்த வீதியோரத்திலிருந்த புதருக்குள் போட்டுள்ளார்கள். தற்போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார்கள்.

◀ பஹறுமுன அஸாம் ▶

அழகுக்கலை என்று சலூனை நாடும் இளம் பெண்களுக்கு இது ஒரு நல்ல படிப்பினை. இயற்கையான பச்சைக் காய்கறிகள், பழங்கள் முதலியவற்றைக் கொண்டு வீட்டிலேயே அழகு சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். அவை ஒரு நாளும் எமக்கு தீங்கு விளைவிக்கப் போவதில்லை. ஆனால் இவ்வாறான அழகு சிகிச்சை நிலையங்களை நாடும் போது மிகவும் அவதானம் தேவை. அழகு சேர்க்கும் கிறீம் என்று அவர்கள் முகத்துக்கு எதையோ தடவிவிடுவார்கள். அவை என்ன ரகம், காலாவதி திகதி என்ன, எந்த நாட்டு உற்பத்தி என்பவை பற்றி நாம் கேட்பதுமில்லை. பார்ப்பதுமில்லை. இவை பற்றி அதிக அவதானம் தேவை. தேவையேற்படின் தமக்கு மிகவும் நெருங்கிய பழக்கமானவர்களிடம் மட்டுமே அழகு சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். அது மட்டுமின்றி சிகிச்சை நிலையம் சட்ட ரீதியான அங்கீகாரம் அத்தோடு இவ்வாறான வேலைகளுக்கு தனியே செல்லாமல் துணைக்கு யாரையும் அழைத்துச் செல்வதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்போது என்பதைத் தவிர காலம் என்று ஒன்றில்லை. இங்கு என்பதைத் தவிர இடம் வேறில்லை..'




# தத்துவ விசாரம்

ஆம் எல்லாமே இங்கு இப்போதே நடைபெறுகின்றன. 'இங்கு'ம் 'இப்போது'ம் 'அது'வாகி நிற்கிறது. ஆனால், எல்லாமே இப்போதே இங்கே நடந்தால், நாம் அவற்றை ஒன்றொன்றாக வேறுபடுத்தி அனுபவித்து அந்த அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வது எப்படி? எனவே காலத்தை உருவாக்கினோம். அருவமாகிய காலத்துக்கு உருவம் கொடுக்க வெளியை அல்லது இடத்தை உருவாக்கினோம். எல்லாமே ஒன்றாக இப்போதே நடந்தாலும், அவை வெவ்வேறு காலப் பரிமாணங்களில் வெவ்வேறு இடங்களில் நடைபெறுவதாக நாம் அறியும் இந்த மாயையை உருவாக்கினோம்.

இதனால்தான் எண்ணங்கள் சில காலத்திற்குப் பின்னரே உண்மையான அனுபவமாகிறது. எனக்குக் கார் ஒன்று வேண்டும் என்று நான் கேட்கின்ற பிரார்த்தனை, உடனே செயற்படுவதில்லை. அது உண்மையாக நடப்பதற்கு நாட்கள், அல்லது வாரங்கள் அல்லது சில வருடங்கள் ஆகலாம். ஏனெனில், எண்ணங்கள் காலம் வெளி என்கின்ற மாயைக்குள்ளே தொழிற்படும் வஸ்துவாகும். அது எங்களுக்குத் தேவை. ஏனென்றால் எங்களுக்கு நடப்பவையெல்லாம் எங்களால் நடக்கவில்லை, அது யாரோவால்தான் நடக்கிறது என்று எங்களை நம்ப வைப்பதற்கான ஒரு யுக்தி இதுவாகும். அப்போதுதானே அதில் சுழன்று துன்பப்பட்டு அல்லது சந்தோசப்பட்டு இப்படியாக வாழ்க்கையை நாம் அனுபவிக்கலாம். எல்லாம் எங்களால்தான் நடக்கிறது என்று தெரிந்து கொண்டால் துன்பம் வரும்போது அழுதும், சந்தோஷ காரியம் நடக்கும்போது சிரித்தும் இருப்போமா? இந்த மாயையை விட்டகன்றால், உதாரணமாக இந்த உடலை விட்டு நீங்கினால், நாம் நினைப்பதை உடனேயே செயற்படுத்தக்கூடிய நிலைமைக்கு மீண்டு வருவோம்.

ஆனால், நாம் நினைப்பதை உடனேயே செயற்படுத்தும் முகமாக இந்த மாயைக்குள்ளிருந்து மீள்வதற்கு உடலை விட்டுப் போவதைத் தவிர இன்னுமொரு வழி உண்டு. அதுதான் உணர்வுகளுக்குள் ஆழ்வதாகும். நாம் எதை வேண்டுகின்றோமோ அதுவாக ஆகும் உணர்வினைப் பெற்றவுடன் அது இப்போதே பிரசன்னமாகின்றது. கார் வேண்டுமென்றால், அந்தக் கார் இப்போதே இங்கே



கிடைத்ததாக உணரும் நிலைதான் அது. உங்கள் காரைக்கொண்டு வந்து விடுவதற்கு கராஜை ஏற்பாடு செய்து அதனை நீங்கள் ஓட்டுவதாக கற்பனை செய்தவுடனேயே அது உங்களுக்குக் கிடைக்கின்றது. இதனால்தான் எண்ணங்களற்ற உணர்வு நிலையில் நாம் சஞ்சரிப்பது ஆன்மீக வாழ்க்கையின் அதியுயர்ந்த நிலையாகும். இதற்காகவே தியான முறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எமது எண்ணங்களைக் குறைத்து உணர்வுநிலையில் சஞ்சரிப்பதற்கு எங்களைத் தயார் செய்கின்றது.

ஒரே சமயத்தில் காலம் வெளி என்கின்ற மாயைக்குள் இருந்தும் இல்லாமல் நாம் இருக்கும் நிலையை விளங்குவதற்கு ஒரு பாறையை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். ஒரு பெரிய பாறை, அது வருடக்கணக்காக அசையாமல் இருக்கின்றதை நாம் பார்க்கின்றோம். ஆனால், அது உண்மையில் அசையாமல்தான் இருக்கின்றதா? இல்லை. அதனுள்ளே இருக்கும் மில்லியன் கணக்கிலான அணுக்களின் புரோட்டோன்களும் இலத்திரன்களும் சதா அசைந்தோடிக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கிடையே காணப்படும் வெளியும் திரவ நிலைகளும் வெளியே காணப்படும் அடர்த்தியான கடினமான பாறையின் இயல்புக்கு நேரெதிரான இயல்பாகின்றது. இங்கு எது மாயை? அசையாமல் அடர்த்தியாகவும் கனமாகவும் இருக்கும் பாறையா? அல்லது அதற்குள்ளே இருக்கும் வெளியில் ஆயிரக்கணக்கான மைல் வேகத்தில் சதா அசைந்து கொண்டிருக்கும் அதன் அணுக்களா? எது உண்மை?

உலகு எல்லாமே சேர்ந்து அத்வைதமாகி அசையாது நிற்கும் கடவுள், தனக்குள் அசையும் கோடானகோடி அணுக்களையும் வாயுக்களையும் நட்சத்திரங்களையும் கோள்களையும் உயிரினங்களையும் கூடக் கொண்டிருக்கிறாரே. அது போலத்தான் இதுவும். இங்கும் இப்போதுமாக இருக்கின்ற பரம்பொருள் வடிவில் இருப்பதனாலோ என்னவோ ஆலயங்கள் பலவும் பாறையின் மீது அதனைக்கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

◄ ரிஷி பத்தினி ►

நூல் : முகைவிடும் மொட்டுக்கள்.
ஆசிரியர் : ரஸ்லான் ராசிக்
வெளியீடு : இலங்கை தமிழ் ஓசை வானொலி
தொடர்புகளுக்கு : 0778321116







கவிதைத்துறையைப் பொறுத்தவரையில் இன்று அதிகமானோர் கால் பதிக்கின்றனர். அடிக்கடி புத்தக வெளியீடுகளும் சர்வசாதாரணமாகிவிட்டது. பல புதியவர்களால் இலக்கியத்துறைக்கு ஈர்க்கப்படுகின்றனர். அதே போல அதிகமானோர் விரைவாக இத்துறையிலிருந்து காணாமற் போய்விடுவதும் உண்டு.

அக்கரைப்பற்றில் இளம் வயதிலேயே தனது மூன்றாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ள மாவனெல்லை ரஸ்லான் ராசிக்கை பாராட்டியாக வேண்டும்.

'நிறைகள் அனைத்தும் இறைவனைச் சாரும். குறைகள் இருப்பின் என்னைச் சாரும். விமர்சனங்களை முழு மனதால் ஏற்பேன்' என்று கூறியுள்ள இவரின் வரிகளில் இருந்து அவரிடம் உள்ள தன்னடக்கம் வெளிக் காட்டப்படுகிறது.

இவருடைய கவிதைகளை வாசிக்கும் போது அதிகமான கவிதைகள் இஸ்லாமிய வரையறைக்குள் அமைந்திருப்பதைக் காணலாம். சமூகத்துக்கு நான் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இக் கவிதைத் தொகுப்பை வெளியிடுவதாக முன்னுரையில் குறிப்பிட்டிருந்தாலும் அஷ்ரஃப் போல் கவிஞர்கள் கண்ணில் தட்டுப்படாமை கவலைக்குரியதாகும்.


இருந்தும் வரதட்சணை, ஒரு ஆத்மா ஓய்கிறது, அரசியல்வாதிகள், விலைபோகும் ஆன்மா, இலங்கை மன்றமே போன்ற கவிதைகள் 'ஓய்வு அமைதி' எண்ணத்தை பிரதிபலிக்கின்றன.

மூன்றாவது கவிதைத் தொகுதியை வெளியிடும் ஒருவரிடம் இருக்க வேண்டிய முதிர்ச்சி இவரின் கவிதைகளில் சற்றுக் குறைவாக உள்ளது. அதிகமான எழுத்துப் பிழைகள் இருப்பதும் கவலைக்குரியதாகும். கவிதைகளை மேலும் செம்மைப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

நூலின் வடிவமைப்பும் அட்டைப் படமும் மெய்சிலிர்க்க வைக்கின்றது. புகழ் பெற்ற எழுத்தாளர்களை நாடிச் சென்று அட்டைப் படக் குறிப்பைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையில் இருந்து வேறுபட்டு, தனது தாயிடம் இருந்து பின்னட்டைக் குறிப்பைப் பெற்றுப் பிரசுரித்துள்ளமை பாராட்டத்தக்கது.

எது எப்படியோ ஓரிரு கவிதைத் தொகுதிகளைத் தந்து விட்டு ஓய்ந்து கொள்ளும் கவிஞர்கள் மத்தியில் நம்பிக்கையோடு தனது மூன்றாவது கவிதைத் தொகுப்பையும் தந்துள்ள ரஸ்லான் ராசிக்கின் இலக்கியப் பயணம் தொடர வாழ்த்துக்கள்.

-அ.தாவுஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'எம் கலைஞர்களை நாம் மதித்தால்தானே மற்றவர்களும் மதிப்பார்கள்'

## கீபோர்ட் கலைஞர் ஸ்ரீகுகன் கணேசசுந்தரம்

ஓர் இசைக்குழுவில் பிரதானமான இடத்தை வகிப்பது கீபோட்தான். சிலநேரம் பாடுபவர்கள் சுருதியை கூட்டியோ குறைத்தோ பாடினால்கூட அதற்கேற்றவாறு கீபோர்ட் இசையை மாற்றும்போது வித்தியாசம் பெரியளவில் தெரியாது. இப்படிப்பட்ட கருவியை இசைப்பது அவ்வளவு இலகுவானதல்ல.

இன்று இலங்கையில் விரல் விட்டு எண்ணக்கூடியளவு கீபோர்ட் வாத்தியக் கலைஞர்கள்தான் இருக்கின்றனர். அவர்களில் ஒருவர்தான் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் வசித்துவரும் ஸ்ரீகுகன். இவர் 20 வருடங்களாக சப்தஸ்வரா இசைக்குழுவை நடாத்திவருகிறார். இதுவரை 250க்கும் அதிகமான பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். வெறுமனே இசையமைப்பு என்று மட்டும் நின்றுவிடாது சிறுகதை மற்றும் வானொலி நாடகங்களையும் எழுதி வருகிறார். வேலை தவிர்ந்த நேரங்களில் இசை வகுப்புக்களையும் நடாத்தி வருகிறார். கீபோர்டும் கையுமாக இருந்த அவரை இருக்கிறமின் விருந்தினர் பக்கத்திற்காக சந்தித்தோம்.

**இசையார்வம் ஏற்பட்டது பற்றிக் கேட்டோம்.**

'சிறுவயதில் இருந்தே இசை ஆர்வம் உடையவனாக இருந்தேன். எனது தந்தையரான கணேஷசுந்தரம் ஒரு சங்கீதக் கலைஞர். எனது அம்மாவின் அப்பா பல இசைக்கருவிகளையும் வாசிக்கும் பல்துறைக் கலைஞர். யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குச்சென்று இசை வகுப்புக்களை நடத்தியதோடு இசை வாசிப்புக்களிலும் ஈடுபட்டார். என் தந்தை இசைப்பாடல்கள் பாடி கதாப்பிரசங்கம் செய்பவர். நல்லைமுத லாவது குருமணியின் பிரதம சீடன். பல வெளிநாடுகளுக்கும் சென்று கதாப்பிரசங்கங்கள் செய்துள்ளார். இவர் பாரம்பரிய வில்லிசைக் கலைஞரும்கூட. என்னுடைய மாமா நீண்ட வருடங்களாக அருணா இசைக்குழுவை நடாத்தி வருகின்றார்.

**சந்திப்பும் படங்களும் : கலியுகன்**

எனது அண்ணன் கண்ணதாசன் பிரபல மிருதங்கக் கலைஞர். தம்பியும் சிறந்த கீபோட் கலைஞர். அப்பா வீட்டில் பாடும்போது நான் அவருக்கு ஹார்மோனியம் இசை வாசித்து இராகங்களைக் கற்றுக்கொண்டேன். நாங்கள் இசைத்துறையில் சாதிக்கவேண்டும் என்பதே எங்கள் அப்பாவின் கனவாகவும் இருந்தது' என்றவர் அதை அடைந்த மகிழ்ச்சி தற்போது இருப்பதாக கூறினார். அத்தோடு தனக்கு 13 வயதாக இருந்தபோது பாடசாலை நிகழ்வொன்றில் கீபோட் வாசித்ததை தன்னால் மறக்கவே முடியாது என்று குறிப்பிட்டார்.

**நம்மில் பெரும்பாலானவர்கள் இந்திய இசையையும் இந்திய இசைக்கலைஞர்களையுமே நாடுபவர்களாக இருக்கிறார்கள். இங்குள்ள கலைஞர்களுக்கு முக்கியத்துவம்கொடுக்கப்படுவதில்லைஎன்றகருத்து நிலவுகிறது. இது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

'இசைக்காகவே தங்களை அர்ப்பணித்தவர்கள் இங்கும் இருக்கிறார்கள். ஏன் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இசையின்மூலம் சாதிக்கும்எம்நாட்டுக்கலைஞர்கள் இன்றைய சூழலில் உள்ளார்கள்தானே. ஆனால், இந்தியாவிலிருந்து எதையும் வாங்கலாம் என்ற நிலை இங்குள்ள கலைஞர்களின் திறமைகளை மழுங்கடிக்கின்றது. நினைத்தவுடன் இந்தியக் கலைஞர்களை அழைத்துவந்து பாட்டுப்பாட வைத்துவிடுவார்கள். அவர்களுக்கு இசை வாசிக்கும் நம்நாட்டுக் கலைஞர்கள் அந்த மேடைகளில்கூட பெரிதாக மதிக்கப்படுவதில்லை. எமது கலைஞர்களை நாமே மலினப்படுத்தும் நிலை காணப்படுகின்றது. இந்நிலை மாற வேண்டும். எம் கலைஞர்களை நாம் மதித்தால்தானே மற்றவர்களும் மதிப்பார்கள்' என்று கூறி வருந்தினார்.



**தன்வீட்டிலேயே இசைப்பதிவு கலையகம் ஒன்றை உருவாக்கியுள்ள ஸ்ரீகுகனிடம் பாடல்களுக்கு இசையமைக்கும்போது ஏற்படும் அனுபவங்கள் பற்றிக் கேட்டேன்.**

'வீட்டிலே இந்த வசதி இருப்பதால் எனக்கு இலகுவாக இருக்கின்றது. இங்கு வைத்துத்தான் குரல்பதிவு மற்றும் இசைப்பதிவு வேலைகளைச் செய்கின்றோம். இந்திய பாடகர்களை வைத்துப் பாடவேண்டும் என கேட்கும்போது அவர்களின் குரல்களை பதிவுசெய்து பெற்று இங்கு இசையமைப்பும் செய்கின்றோம். எம் நாட்டு கலைஞர்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து பாடவைக்கின்றோம்' என்றவர் ஆழிப்பேரலை நினைவாக வெளியிட்ட தொகுப்பிலிருந்து ஒரு பாடலை எமக்காய் ஒலிக்கச்செய்து காட்டினார்.

**பாடல்களுக்கும் குறும்படங்களுக்கும் இசையமைப்பதில் என்ன வித்தியாசத்தை உணர்கிறீர்கள்?**

'பாடல்களுக்கு இசைய்மைக்கும் அனுபவமும் குறும்படங்களுக்கு இசையமைக்கும் அனுபவமும் வித்தியாசமானதுதான். பாடல்களுக்கு இசையமைக்கும்போது ஆரம்ப இசையே ஒரு சம்பவத்தைக் கூற வேண்டும். பாடலின் புலத்தை, பல்லவியில் வரப்போகும் விடயத்தை இசையின் மூலம் காட்ட வேண்டும். பாடலின் கருத்தை பிரதிபலிப்பதாக பாடல் இசை அமையவேண்டும். பாடலின் தன்மைக்கு ஏற்றவாறு வாத்தியங்களைக் கையாள வேண்டும். ஆனால் குறும்படங்களுக்கு இசையமைக்கும்போது எமது இசை கதை சொல்லவேண்டும்'

**இசை வகுப்புக்கள் நடத்துகின்றீர்கள். இங்குள்ளவர்கள் எந்தளவு அதில் நாட்டம் செலுத்துகின்றனர்?**

'பல மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றுவருகின்றார்கள். நாம்கற்றவற்றையும்அறிந்தவற்றையும்பிறருக்குசொல்லிக் கொடுப்பதன் மூலம்தான் கலைகளை அழியவிடாது பாதுகாக்கலாம். என்னிடம் இசைபயின்று வெளிநாடு சென்ற மாணவர்கள் தொலைபேசியில் உரையாடும்போது தாம் வெளிநாடுகளில் இசைக்குழுக்கள் நடத்துவதாகவும் வேறு பல இசை முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாகவும் குறிப்பிடுவார்கள். அவற்றைக் கேட்கும்போது பெருமையாக இருக்கும்.

எனினும் இங்குள்ளவர்களில் பலர் இசையில் முழுநேரமாக ஈடுபடுவதில்லை. இசையை பகுதி நேரமாகக் கற்று பகுதிநேர பணியாகவே இசைக்கின்றார்கள். முழுமையாக ஈடுபாடு செலுத்தினால் நாம் இசைத்துறையில் பாரிய சாதனைகளை படைக்க முடியும். இந்தியாவில் பாருங்கள் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் பங்குபற்றும் மகனுக்காக ஒரு தாய் தனது ஆசிரியர் தொழிலையே இராஜினாமா செய்துவிட்டு மகனுடன் நின்று இசைக்காய் உழைத்துள்ளார். இந்த அர்ப்பணிப்பு ஒவ்வொரு இசைக்கலைஞர்களுக்குள் இருக்க வேண்டும்' என்றார்.

**விருந்தினர் பக்கம்**

நமது நாட்டு இசைக்கலைஞர்கள் முழுமையாக இசைத்துறையில் நாட்டம் செலுத்தாமைக்கு காரணம் இல்லாம வில்லை. எமது நாட்டில் அதற்கான வாய்ப்புகள் குறைவு. எமது நாட்டுக் கலைஞர்களை வைத்து நன்றாக வேலைவாங்கிவிட்டு அவர்களுக்கு கொடுப்பது ஆயிரம் இரண்டாயிரம்தான். இதே வெளிநாட்டு கலைஞரென்றால் இலட்ச ரூபாய் கொடுத்தும் இறக்குமதி செய்வார்கள்.

அவ்வளவு ஏன் ஒரு இசை மேடையில் எம் நாட்டு கலைஞர் என்னதான் திறமையாக தன் ஆற்றலை வெளிப்படுத்தினாலும் வெளிநாட்டு கலைஞர்களுக்கு உள்ள வரவேற்பு கிடைப்பதில்லை. ஒரே மேடையில் நம் நாட்டு கலைஞரும் வெளிநாட்டு கலைஞரும் இருந்தால் அங்கு நம்நாட்டு கலைஞருக்கு அவ்வளவாக மதிப்பு கொடுப்பதில்லை. நம்நாட்டு கலைஞர்களும் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன. தேடிப்படிக்க வேண்டும். எல்லா இசை நுணுக்கங்களையும் கற்று இசையமைக்க வேண்டும்.

> ''இங்குள்ளவர்களில் பலர் இசையில் முழுநேரமாக ஈடுபடுவதில்லை. இசையை பகுதிநேரமாகக் கற்று பகுதிநேர பணியாகவே இசைக்கின்றார்கள்''

காரணம் அண்மையில் யாழில் நடந்த ஒரு இசை நிகழ்ச்சியில் எம்நாட்டு கலைஞர்கள் இசையில் கோட்டைவிட்டு விட்டார்கள். ஏன் கொழும்பில்கூட எத்தனையோ நிகழ்ச்சிகளில் இந்தத் தவறு நடந்ததுண்டு. பல நிகழ்ச்சிகளில் கரோக்கி எனப்படும் இசைமட்டுமுள்ள இறுவட்டை ஒலிக்கவிடுவார்கள். இந்நிலை மாறவேண்டும். நம்நாட்டு கலைஞர்களும் வெளிநாட்டுக் கலைஞர்களுக்கு நிகராக இசையில் சாதனை படைக்கவேண்டும். எம்மவர்களும் நமது இசைக்கலைஞர்களை மதிக்கும் மனப்பான்மையை வளர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டு நண்பர்கள் பாரில் உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.
சே...! இந்த பெண்டாடிகளை அடக்கவே முடியாதுபோல. நீ எப்புடிடா?
நேற்று என்ர பெண்டாட்டிய முழங்காலில நடக்க வைச்சன். தெரியுமா?
ஆ... ஆ... பிறகு?
பிறகென்ன....
'மரியாதையா, ஆம்பிள மாதிரி கட்டிலுக்கு கீழ இருந்து வெளிய வந்து சண்டபோடு எண்டாள்...!'



ஒருவர் ரயில் நிலைய அதிகாரி பதவிக்கான இன்டர்வியூவில் கலந்து கொண்டார். 2 ரயில்கள் அதிவேகமாக எதிரெதிரே ஒரே பிளாட்பாரத்தில் வருவதை அறிந்தால் நீங்கள் முதலில் என்ன செய்வீர்கள் என்று அதிகாரி கேட்க, அதற்கு அவர் 'நான் முதலில் எனது தம்பிக்கு தகவல் தெரிவிப்பேன்' என்று சொன்னார்.

ஏன் தம்பிக்கு தகவல் தெரிவிப்பீர்கள் என்று அதிகாரி கேட்டார். அதற்கு அந்த மனிதர் சொன்னார், 'அவன் இதுவரை ஒரு ரயில் விபத்தைக் கூட நேரில் பார்த்ததேயில்லை' அதுதான்.



வேலை முடிந்து வீட்டுக்கு நேரம் கழித்துச்சென்ற போடியார் தன்னுடைய மனைவியிடம், 'இண்டைக்கு நைட் என்ர நண்பன் சின்னத்தம்பிய வீட்டுக்கு சாப்பிட கூப்பிட்டிருக்கிறன்' என்றார். மனைவி அவசரமாக, 'என்ன விளையாடுறீங்களா? வீடு ஒரே குப்பையாக் கிடக்குது, நான் இன்னும் ஷொப்பிங் ஒண்டும் செய்யேல்ல. ஸ்பெஷலா ஒண்டும் வாங்கேல்ல. அதில்லாம நைட் ஸ்பெஷல் டிஷ் எதுவும் சமைக்கிற ஐடியா எதுவும் எனக்கு இல்ல, இதெல்லாம் தெரியாம எதுக்கு கூப்பிட்டீங்க...?'
'இதெல்லாம் தெரியும் அதனால தான் கூப்பிட்டன்'
'தெரிஞ்சும் எதுக்கு கூப்பிட்டீங்க?'
'இல்ல... அவன் கல்யாணம் பண்ண ஆசைப்பட்டான் அதான்...'





'ஏன்டா.. உங்கட அப்பா எப்ப பாத்தாலும் உன்னைத் திட்டிக் கொண்டு இருக்கிறார்'
'ஹ...ஹ்ஹ....ஹா.... சிங்கத்தைக் கொஞ்ச முடியாதுல்ல.. அதுதான்'



மூன்று நண்பர்கள் இறந்து மேல் உலகம் சென்றார்கள். அங்கு நீதி தேவன் முதல்நபரை அழைத்து, 'உனக்கு தண்டனையாக தீயில் வெந்து எரிந்த பெண்ணை திருமணம்செய்' என்றார். இந்த நபர் ஏன் என்று கேட்டதற்கு, நீ சிறுவயதில் பறவை ஒன்றை கல்லால் அடித்துக் கொன்றாய் அதனால்தான் என்றார். அதேபோன்று இரண்டாவது நபருக்கும் ஒரு தண்டனை விதித்து அதே காரணத்தைக் கூறினார். மூன்றாவது நபருக்கு மிகவும் அழகான பெண்ணை பரிசளித்தார். இருவரும் ஏன் என்று கேட்டதற்கு நீதிதேவன் இப்படி பதிலளித்தார். 'அந்தப்பெண் சிறுவயதில் ஒரு பறவையை கல்லால் அடித்துக் கொன்றாள்' என்றார்.

சிலோன் சின்னத்தம்பிக்கு அப்போது 25 வயது. ஒரு நாள் அவசரமா பார்மசிக்குப் போனாராம்.
'இந்த மாதிரி... அதாவது...'
'அட ஒண்ணுமில்லடாப்பா, தயங்காம சொல்லு...'
'அது... நானும் ஒரு பெட்டையும் காதலிக்கிறம்'
'நல்ல விஷயம்'
'இல்ல வாற ஞாயிற்றுக்கிழமை என்னை அவ வீட்டுக்கு கூப்பிட்டுருக்கிறா'
'ஓ!!! கலக்கு...'
'அதாவது... அவங்கட வீட்டில எல்லாரும் பார்ட்டிக்கு போயிடுவாங்களாம்'
பார்மஸிகாரர் குறும்பா,'ஹேய் அப்பிடியா...?'
'இல்ல... எனக்கு இதுதான் முதல் தடவ எனக்க...!'
'ஓ அதுதான் உன்ர பிரச்சினையா...?' எண்டு கேட்டு விட்டு ஆரம்பத்திலயிருந்து சகலத்தையும் சொல்லிக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து அட்வைஸ் பண்ணி அனுப்பியிருக்கிறார்.
சின்னத்தம்பியும் அந்தப் பெட்டை வீட்டுக்கு போனார். எல்லோருடனும் நன்றாக பேசினார். அவங்கட அம்மா, 'சரி தம்பி... நாங்க கோயிலுக்கு போய்ட்டு வாறம். நீங்கள் பேசிக் கொண்டு இருங்கோ, சின்ன வயசுப் பெடியங்களுக்கு இந்த மாதிரி விஷயங்கள் பிடிக்கிறதில்ல' எண்டாங்க.
சின்னத்தம்பி அவசரமா 'இல்லை... நானும் வாறன்' என்டார்.
அந்தப் பெட்டை பதட்டமா ஆனா அவன் காதில் கிசுகிசுப்பா,'டேய் என்னடா சொல்ற...? நீ இவ்வளவு கடவுள் பக்தி உள்ளவனெண்டு என்னட்ட சொல்லவேயில்லையே'
சின்னத் தம்பி உடனே சொன்னாராம், 'உங்கட அப்பா பார்மஸிகாரர் எண்டு நீ மட்டும் சொன்னியா?'







✱ Distributors
யாழ்ப்பானம், வவுனியா பிரதேசங்களுக்கான விநியோகஸ்தர்கள் தேவை.
- வங்கி உத்தரவாதம்.
- களஞ்சியசாலை உதவி.
- விநியோக வசதியுள்ளவர்கள்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
Central Industries PLC
312, நாவல வீதி, நாவல, இராஜகிரிய.
தொ.பேசி : 0113580017, 5303000

✱ தேயிலைக் தோட்டத்துக்கு வேலையாட்கள் தேவை. பதுளை மாவட்டத்தில் இயங்கிவரும் தேயிலைத் தோட்டம் ஒன்றுக்கு அனுபவமுள்ள கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு...
ஏ-225இ, த.பெ.இல. 160, கொழும்பு.

✱ உப கட்டிட ஒப்பந்தக்காரர் தேவை. பாசிக்குடாவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள புதிய ஹோட்டல் நிர்மாணத் தளத்துக்கு உப கட்டிட ஒப்பந்தக்காரர்கள் தேவை.
தொடர்புகளுக்கு...
சீயம் கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிடட், 201/1, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 05. 011-513327/8

✱ பிராந்திய விற்பனை முகவர்கள் நூடில்ஸ், பப்படம், சோயா, அரிசி மா, tipi tipi போன்ற பொருட்களை நாடு பூராகவும் விநியோகம் செய்வதற்காக விநியோகஸ்தர்கள் தேவை.
Rajarata Lanka (PVT) Ltd,
99, HIjra Garden, warakamuva, Matale.

✱ Marketing Executive
ஒரு வருட அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.
ஏ.எல். தேர்ச்சியடைந்த 18-26 வயதுக்கிடைப்பட்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
Pettah Computers
102/22 Mumthaz mahal, 1st Cross Street,
Colombo-11. 0777735516, 0773921115

✱ மேற்பார்வையாளர்கள் தேவை. நுகேகொடைப் பகுதியில் அமைந்துள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு மேற்பார்வையாளர்கள் தேவை. உணவு தங்குமிட வசதிகள் வழங்கப்படும். அனுபமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Auto Care International,
313, Jubilee Post, Kotte Road, Nugegoda.
Tel : 0773960174

✱ வரவேற்பாளர்கள் தேவை. கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் அமைந்துள்ள 2 ஹோட்டல்களுக்கு வரவேற்பாளர்கள் உடனடியாகத் தேவை. உணவு தங்குமிடவசதிகள் வழங்கப்படும்.
25 A, De Saram Road, Mountlaviniya,
Tel: 0112725032, 0112714236


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பதுங்கியிருந்த கடாபிமீது பாய்ந்து அமுக்கினேன்'

## பகீர் வாக்குமூலம்!

தண்ணீர் ஓடும் பெரிய குழாய் ஒன்றுக்குள் பதுங்கியிருந்த கடாபியை வெளியே இழுத்து வந்த ஒருவரது பேட்டி இது. தற்போது கடாபியின் மரணத்தை (அல்லது கொலையை) அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றிருக்கின்றன. சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இந்த பேட்டியைக் கையில் எடுத்துள்ளன.

குழாய்க்குள் பதுங்கியிருந்த கடாபியைக் கண்டுபிடித்த சிறிய கிளர்ச்சிக் குழுவில் தானும் ஒருவன் என்று இந்த நபர் தனது பேட்டியில் கூறியிருக்கிறார். அத்துடன் ஒம்ரான் ஷமான் என்று தனது பெயரையும் பேட்டியில் கூறியிருக்கிறார் 21 வயதான இவர்.

கடாபியின் மறைவிடத்தை முதலில் கண்டுபிடித்தவர்கள், மிசுர்டா நகரைச் சேர்ந்த ஒரு சிறிய கிளர்ச்சிக் குழுவினர்தான். சுர்ட் நகர முற்றுகையில் இவர்களும் மற்றைய கிளர்ச்சிக் குழுக்களுடன் இணைந்து நின்று யுத்தம் செய்துள்ளனர். முற்றுகையில் ஈடுபட்டுள்ள மற்றொரு படைப்பிரிவுக்கு உதவி செய்வதற்காக இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

தைக் கண்டோம். எனது சகா ஒருவர் உடனே ஓடிச்சென்று அந்த இருவரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இப்போது நாங்கள் நின்றிருந்த இடத்திலிருந்து நகர்ந்து வீதிக்கு வந்தபோது வேறு நான்கு பேர் மறைந்திருந்துவிட்டு ஓட முற்பட்டனர்.

எங்களைக் கண்டவுடன் அவர்கள் சரணடைந்தனர். ஒருவேளை நாங்கள் அவர்களையும் சுட்டுக் கொன்றுவிடுவோம் என்று அவர்கள் பயந்திருக்க வேண்டும். 'எங்களை ஒன்றும் செய்யாதீர்கள், கடாபி அதோ அந்த பைப்புக்குள் பதுங்கி இருக்கிறார். போய் அவரைப் பிடியுங்கள்' என்று சொன்னதே அவர்கள்தான். நான் அந்த பைப்புக்குள் எட்டிப் பார்த்தபோது, கடாபியின் புதர் போன்ற தலைமுடி தெரிந்தது.

உள்ளே இருப்பவர் கடாபி என்பதை அறிந்து கொண்டவுடன் நான் அவர்மீது பாய்ந்து ஆளை அமுக்கினேன். என்னுடன் வந்திருந்த மற்றைய இரு சகாக்களும் என்னைப் போலவே அவர்மீது பாய்ந்தார்கள். அவர் எங்களைத் தாக்கலாம் என்பதால்தான் அப்படிச் செய்தோம். ஆனால், யாரை



இவர்கள் சென்ற பாதையில், சற்று தொலைவில் நேட்டோ விமானக் குண்டுவீச்சு நடைபெற்றதை இவர்கள் கண்டனர். நேட்டோ விமானங்கள் குண்டுவீசிவிட்டுச் சென்றபின் இவர்கள் அந்த இடத்தைச் சென்றடைந்தனர். அதன்பின் என்ன நடந்தது?

இதோ, ஒம்ரான் ஷமான் வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவருக்கு கொடுத்த பேட்டியில் இருந்து ஒரு பகுதியைப் பாருங்கள்.

'நாங்கள் அந்த இடத்தை சென்றடைந்தபோது, சுமார் 15 பேர் இங்கும், அங்குமாக ஓடிக்கொண்டு இருந்தனர். இவர்களை நாங்கள் எங்கே நின்று பார்த்துக்கொண்டு இருந்தோம் தெரியுமா? கடாபி பதுங்கியிருந்த குழாய்க்கு மேலேதான் (படத்தில் பார்க்கவும்) நின்றிருந்தோம்.

அந்த இடத்தில் ஓடிக்கொண்டு இருந்தவர்கள் கடாபி ஆதரவாளர்கள் என்பதைக் கண்டுகொண்டோம். உடனடியாக அவர்களைக் கைது செய்தோம். ஒரு ஓரமாக இருவர் பதுங்கியிருந்த

யும் தாக்கும் நிலையில் அவர் இல்லை. அவரது தலையிலும் மார்பிலும் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

நான் முதல் தடவையாக அவரைப் பார்த்தபோது, அவர் முழுமையாக உயிருடன் இருந்தார். அவரால் நடக்க முடிந்தது. பேசமுடிந்தது. அவர் என்னிடம் 'என்ன நடக்கின்றது இங்கே?' என்று கேட்டார். அநேகமாக அவர் பேசிய கடைசி வார்த்தை அதுதான் என்று நினைக்கின்றேன்' என்றார்.

இந்தப் பேட்டி, லிபிய தற்கால அரசு சொல்வதுபோல கடாபி துப்பாக்கிச் சண்டையின்போது ஏற்பட்ட எதிரும் புதிருமான சூட்டில் கொல்லப்படவில்லை என்பதைக் காட்டுகின்றது. அவர் போராளிகளின் கைகளில் அகப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். இது போர்க்குற்றம்' என்கின்றது சர்வதேச மனித உரிமை அமைப்பு இருந்து பாருங்கள், இந்தவிவகாரம் நிச்சயமாக மிகவிரைவில் அமுக்கப்பட்டுவிடும்.

# விசாரணையின் பேரில் சங்கிலி அபகரிப்பு

படைகள் நிலைகொண்டுள்ள கிளிநொச்சி பல்லவராயன் கட்டுப் பகுதியில் இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தம்மை அடையாளம் காட்டிய குழுவொன்று கடந்த வாரம் சனிக்கிழமை மாலை 7 மணியளவில் வீடொன்றில் புகுந்து நகைகளை கொள்ளையிட்டுச் சென் றுள்ளது.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு பேர் தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டு 'வீட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள்

அடையாளம் காட்டிக்கொண்டு வீடொன்றில் புகுந்த குழுவினர் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றிருப்பதுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் முயற்சியின் இலட்சணமா இது என்று வன்னி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது இவ்வாறிருக்க 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர் பூநகரி பிரதேசத்தில் தன்னுடைய நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளச் சென்ற விவசாயி ஒருவர் இதற்காக தனது வயற்காணியை



இருக்கிறார்களா' எனக்கேட்டு உள்ளே சென்றுள்ளனர். இதன்பின்னர் அவர்களை விசாரிக்க வேண்டும் என்று கேட்டு அச்சுறுத்தி அந்த வீட்டுப் பெண் அணிந்திருந்த இரண்டு பவுண் சங்கிலி மற்றும் இரண்டு கைத்தொலைபேசிகள் என்பவற்றை பறித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக முழங்காவில் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளதாம்.

இக் கொள்ளைச்சம்பவம் இடம் பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான் புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவென ஐந்து விசேட புலனாய்வுப் பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டிருந்தன. புலிகளின் செயற்பாடுகளை ஒடுக்கும் நோக்கில் இராணுவப் படையின் கீழ் இவை செயற்படுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வன்னியில் நடைபெற்ற ஒரு படைத் தலைமையக அங்குரார்ப்பண நிகழ்வில் தெரிவித்திருந்தார். நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காமல் இருப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இறுதிக்கட்ட போரின்போது வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற புலி உறுப்பினர்களும், வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களில் சில பிரிவினரும் இணைந்து மீண்டும் பயங்கரவாதத்தை தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அதனைத் தடுக்கும் நோக்கிலே இவ் ஐந்து விசேட புலனாய்வுப்பிரிவுகள் உருவாக்கப்பட்டதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்திருந்த நிலையில் தம்மை புலனாய்வுப்பிரிவினர் என

பண்படுத்தியபோது அதனுள் மண் அணையொன்று காணப்பட்டுள்ளது. விவசாயி குறித்த மண் அணையை துப்பரவு செய்தபோது, இராணுவத்தினர் பயன்படுத்தும் தலைக்கவசத்துடன் சடல எச்சங்கள் வெளிக்கிளம்பின. எனவே இது தொடர்பில் குறித்த விவசாயி உடனடியாக அப்பகுதி கிராம சேவகருக்கு முறைப்பாடு செய்துள்ளார். தொடர்ந்து கிராமசேவகர் இது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து சடல எச்சங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன. பூநகரி பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த காலப்பகுதியில் ஏற்பட்ட மோதல்களின்போது கொல்லப்பட்டவரின் சடலமாக இது இருக்கலாம் என கருதப்படுகின்றது.

## தவறுக்கு வருந்துகிறோம்

26.09.2011 அன்று வெளியான 'இருக்கிறம்' வார இதழில் 07ஆம் பக்கத்தில் பிரசுரமான 'நாசமாய்ப் போன சமுதாயமும் சீரழிந்து போன நீதித்துறையும்' என்ற கட்டுரையில், 'வவுனியாவில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில்' என்பதற்கு பதிலாக 'கல்வி வலயக் காரியாலயத்தில்' என்று தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. இதனால் ஏற்பட்ட சிரமத்துக்காக வருந்துகிறோம்.

noolaham.org | aavanaham.org

22

# திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!

மரகதத் தீவின்
இரகசிய ஒற்றன்
'நெடுமாறன் 999'
உளவறியும்

# கறுப்பு செப்டெம்பர் அழகி



## ஆ...! நீயா கறுப்பு செப்டெம்பர் அழகி..? என்னையே ஏமாற்றிவிட்டாயே துரோகி!

லைலாவிற்கு ஆத்திரம் வந்துவிட்டது. ''முன்னால் போடா'' என்று கத்தியபடியே மேலே பாய்ந்த லைலா,

நெடுமாறனை எட்டி உதைத்தாள். முன்னால் வீசுப்பட்டுப் போன நெடுமாறன், எதிரில் இருந்த ஒரு தூணில் மோதி கீழே விழுந்தார். அவர் கையில் இருந்த இயந்திரத் துப்பாக்கி அப்பால் சென்று விழுந்தது.

ஆனால்,

அவர் தலையில் இருந்த தொப்பி மட்டும் அசையாமல் அப்படியே இருந்தது.

'ம்.. எழுந்து நட!' என்று சிங்கத்தைப் போல் கர்ஜித்தாள் லைலா.

அவளைப் பார்த்தபடியே எழுந்து நின்ற நெடுமாறன் முன்னால் நடந்தார்.

கொஞ்ச தூரம் வந்ததும் எதிரில் இருந்த அறையைக் காட்டி 'அந்த அறைக்குப் போ' என்றாள் லைலா.

அவள் காட்டிய அந்த அறைக்குள் நுழைந்தார் நெடுமாறன்.

உள்ளே,

சர்மிளா,

நிம்மி,

மதுபாலா! மூன்று பெண்களும் அமர்ந்திருந்தார்கள். எதிரில் இருந்த நாற்காலிகளில்,

இரண்டு பேர் கட்டப்பட்ட நிலையில் இருந்தார்கள்.



அதில், ஒன்று ஆண். மற்றது பெண்.

ஆண்,டொக்டர் சுதாராஜாக இருக்கலாம். ஆனால்,

அருகில் இருக்கும் மற்ற பெண் யார்?

நெடுமாறனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

டொக்டரின் மகள் நிம்மியையும் சர்மிளாவையும் அங்கே பார்த்ததும் நெடுமாறன் வியப்படைந்தார்.

'பொஸ்.. இவன் நமது அங்கத்தவர்கள் மூவரையும் தீர்த்துக் கட்டிவிட்டான்' என்று அடித்தொண்டையால் அலறினாள் லைலா.

அவள் 'பொஸ்' என்று அழைத்ததில் இருந்து,

கறுப்பு செப்டெம்பர் அழகியும் உள்ளே இருக்கிறாள் என்பதை நெடுமாறன் புரிந்து கொண்டார்.

இந்த மூவரில் யார் கறுப்பு செப்டெம்பர் அழகி?

நிம்மியா?

மதுபாலாவா?

சர்மிளாவா?

'என்ன நெடுமாறன் அப்படிப் பார்க்கிறாய். கறுப்பு செப்டெம்பர் அழகியைத் தேடுகிறாயா? இதோ பார்த்துக் கொள். நான்தான் நீ தேடும் அந்தத் தலைவி!' என்று சொல்லியபடியே எழுந்து நெடுமாறனின் அருகில் வந்தாள் நிம்மி.

'நீயா! நீ டொக்டர் சுதாராஜின் மகள் என்றல்லவா சொன்னாய்?' என்று வியப்புடன் கேட்டார் நெடுமாறன்.

'உன்னை ஏமாற்றுவதற்காகத்தான் அந்த நாடகம். இதோ இங்கே கட்டப் பட்டுக் கிடக்கிறாளே இவள்தான் டொக்டரின் மகள் நிம்மி. இந்த சர்மிளாவும் நமது இயக்கத்தைச் சேர்ந்தவள்தான்' என்று சொல்லியபடியே மேசை மீதிருந்த துப்பாக்கியைக் கையில் எடுத்தாள்.

'அப்படியா?' என்று கேட்டபடியே, தலையில் இருந்த தொப்பியைக் கழற்றி கையில் எடுத்தார் நெடுமாறன்.

'ஆமாம் நெடுமாறன். எத்தனையோ வழிகளில் உன்னைத் தீர்த்துக் கட்டத் திட்டம் தீட்டினோம். ஆனால்,

நீ நம்மிடமிருந்து தப்பிக் கொண்டே வந்தாய். ஆனால் இன்று உனது இறுதி அத்தியாயத்திற்கு வந்து விட்டாய். ஆனால்' என்று சொல்லியபடியே இயந்திரத் துப்பாக்கி ஒன்றை எடுத்துக் கொண்டு முன்னால் வந்தாள் சர்மிளா.

'நமது துப்பாக்கிக் குண்டுகளுக்கு நல்ல விருந்து கிடைத்திருக்கிறது' என்று சொல்லியபடியே முன்னால் வந்த மதுபாலா, நெடுமாறனின் நாடியைத் தடவி விட்டு அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டாள்.

'ராஸ்கல், நீ என்னையே ஏமாற்றி விட்டாய் இல்லையா?' என்று கேட்டு விட்டு மீண்டும் ஓர் அறையை விட்டு அப்பால் சென்றாள்.

கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்ட நெடுமாறன் அறையைச் சுற்றிப் பார்த்தார்.

இப்போது,

அவரைச் சுற்றிலும் நான்கு துப்பாக்கிகள் குறி பார்த்துக் கொண்டிருந்தன.

'நெடுமாறா உன் கதை முடியப்போகும் இந்த நேரத்தில் நீ வணங்கும் உன் இஷ்ட தேவதையை நினைத்துக் கொள்' என்று சொல்லியபடியே இயந்திரத் துப்பாக்கியை மேலே தூக்கினாள் நிம்மி என்ற தலைவி.

'ஆமாம் நெடுமாறன் இரண்டு பேர்களைக் கவனிக்கக்கூடிய விதத்தில் உனது தொப்பியை வைத்துக் கொண்டு 'நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்' என்ற பாடலை நினைவு கூர்ந்து கொள்!' என்று சொன்னபடியே முன்னால் பாய்ந்த சர்மிளா, லைலாவின் பக்கம் திருப்பிப் பிடித்தாள்

அதே நேரம்,

நெடுமாறனின் தொப்பிக்குள் பல ஓட்டைகள் விழுந்தன.

லைலா, நிம்மி,

மதுபாலா மூவரும் சுருண்டு விழுந்து இறந்தார்கள். தொப்பிக்குள் இருந்த துப்பாக்கியை எடுத்து பொக்கெட்டுக்குள் வைத்துக் கொண்ட நெடுமாறன்,

சர்மிளாவை வியப்புடன் பார்த்தபடியே 'நீ நமது இயக்கத்தைச் சேர்ந்தவள் என்பதை ஏன் முன்பே சொல்லவில்லை' என்று கேட்டார்.

'இறுதிவரை சொல்லக்கூடாது என்பது நமது தலைவர் எமகாதகனின் கட்டளை. அவர் திட்டப்படிதான் நான் இவர்களின் கூட்டத்தில் சேர்ந்தேன். உங்கள் தொப்பிக்குள் துப்பாக்கி இருக்குமென்று நான் எதிர்பார்த்தேன். அதனால்தான் உங்களுக்குப் பின்னாலிருந்த லைலாவை மட்டும் நான் கவனித்துக் கொண்டேன். இந்த கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தினர் மிகவும் கொடியவர்கள் நெடுமாறன். உங்களைக் கொலை செய்வதற்கு எப்படியெல்லாம் திட்டம் தீட்டினார்கள் தெரியுமா. நான்தான் அவர்களின் திட்டங்களை மாற்றி வேறு திட்டங்களை போட்டுக் கொடுத்தேன்' என்று சொல்லியபடியே வந்த சர்மிளா,

டொக்டரையும் அவரது மகளையும் கட்டவிழ்த்து விட்டார்.

'உங்களுக்கு நன்றிகள்!' என்று இருவரும் கரம் கூப்பியபடியே சொன்னார்கள்.

'டொக்டர் நீங்கள் இங்கு வந்ததால் உங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு எங்களை மன்னிக்க வேண்டும்' என்றார் நெடுமாறன்.

'பரவாயில்லை. டேக்கிட் ஈஸி' என்றார் டொக்டர் சுதாராஜ்.

கப்பலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த அணு ஆயுதங்களை மீட்டுவிட்டு,

அவர்கள் வெளியேறும்போது வெகு நேரமாகி விட்டது.

எமகாதகனைச் சந்தித்த நெடுமாறன், நடந்ததை எல்லாம் விபரமாகச் சொன்னார்.

'நன்றி நெடுமாறன், உங்களைப் போன்ற ஓர் ஒற்றன் எங்கள் இயக்கத்தில் இருப்பதற்கு இந்த நாடு புண்ணியம் செய்திருக்க வேண்டும். உங்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதற்குத்தான் சர்மிளாவை அனுப்பி வைத்தேன். நான் எதிர்பார்த்தது போலவே அவள் உங்களுக்கு உதவி செய்திருக்கிறாள்'

'ஆமாம் சேர். அந்த நேரத்தில் அவள் அங்கு இல்லையென்றால் நான் தப்புவது கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்திருக்கும். இந்த வழக்கும் முடிந்து விட்டது. எனக்கு ஒரு வாரம் லீவு வேண்டும்' என்று எமகாதகனின் முகத்தைப் பார்த்தபடியே சொன்னார் நெடுமாறன்.

'ஏன் இப்போ லீவு?'

'நான் திருமலைக்குப் போகிறேன், மல்லிகாவையும் அழைத்துக் கொண்டு'

'அதுதான் நடக்காது' என்று சொல்லியபடியே ஒரு சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார் எமகாதகன்..

**ஜனரஞ்சக எழுத்தாளர்**
**மொழிவாணன்**

'ஏன் சேர் மீண்டும் எவனாவது வந்து தொலைந்து விட்டானா?' என்று சலிப்புடன் கேட்டார் நெடுமாறன்.

'ஆமாம் நெடுமாறன். மாஃபியா என்ற ஓர் இயக்கத்தினர் இப்போது இங்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்கள். பயங்கரமான பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டு நமது நாட்டிற்குள் நுழைந்துள்ளார்கள். இவர்கள் இங்கு வந்ததும் டொக்டர் பால்ராஜ் என்பவரை கடத்திச் சென்றுள்ளார்கள். அவர் அணுக்கதிர்களைக் கொண்டு புதுவிதமான கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இந்தக் கருவியின் ஒளி பட்டவுடன் மனிதனோ மிருகமோ அந்த இடத்திலேயே சாம்பலாகி விடும்'

'இதில் நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்?'

'டொக்டர் பால்ராஜைக் காப்பாற்ற வேண்டும். இந்தக் கூட்டத்தின் தலைவனின் பெயர் கருத்தேள் மனிதனாம். உங்கள் அடுத்த வேட்டை கருத்தேள் மனிதன். நாளை காலையிலிருந்து நீங்கள் வேட்டையில் இறங்கவேண்டும்'

'ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினார் நெடுமாறன்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Battleship Potemkin

# போர்க்கப்பல் பொதம்கின்-1925




உலக திரைப்பட ரசிகர்கள், திரை விமர்சகர்கள், திரைத்துறை பயிற்சியாளர்கள் முதலான திரைத்துறை அறிவுஜீவிகள் முதல் பாட்டாளி வர்க்கம், புரட்சிகர வர்க்கம் வரை அனைவரையும் கலை எழுச்சியுடன் இன்றும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் இந்த 'போர்க்கப்பல் பொதம்கின்' (Battel ship Potemkin) என்ற ரஷ்ய சினிமாவின் வயது 85.

திரை மேதை செர்கி ஐசன்ஸ்டைனால் இயக்கப்பட்ட இந்த படத்தின் கரு, ரஷ்யாவில் 1905ஆம் ஆண்டு ஜார் மன்னனுக்கு எதிராக நடந்த பொதம்கின் கப்பல் தொழிலாளர்களின் கலகத்தைப் பற்றியது. பேட்டில்ஷிப் பொதம்கின் கப்பலின் அதன் மாலுமிகளால் ஆரம்பிக்கப்படும் கலகம் பின்பு ஒடேசா துறைமுகத்தில் தீவாக பரவி படை எதிர்ப்புகளுக்கு பின் மக்கள் எழுச்சியாக மாறுகிறது.

வடிவம், உள்ளடக்கம் என இரண்டிலும் கனகச்சிதமான படைப்பான இந்தப் படம், 1925ஆம் ஆண்டு சோவியத் யூனியனில், ரஷ்ய புரட்சியை நினைவு கூரவும் அதன் எழுச்சியை ஆவணப்படுத்தவும் உலக மக்களுக்கு தெரியப்படுத்தவும் நடந்த குறிப்பிடத்தக்க முயற்சி. படம் வந்ததின் ரஷ்ய பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி இன்னமும் உலகெங்கும் புகழ்பெற்றது. சோவியத் அரசாலே அறிவிக்கப்பட்ட பெருங்கொடையான இந்த படத்தின் கதை என்ன?

பேட்டில்ஷிப் பொதம்கின் என்னும் கப்பலின் மாலுமிகள் சொர்பனம் மாலுமிகள் கடுமையான பணிகளோடும் வேலையின் உணவும் கொடுக்கப்பட்டு கொடுமைப்படுத்தப் படுகிறார்கள். ஒரு நாள் புழுக்கள் நிறைந்திருக்கும் இறைச்சியை சமையல் அறையில் தொங்கத் தெரிகிறார்கள். கண்ணாடியைத் தெரிந்து தெளிவாகப் புழுக்களை கண்டுகொண்டாலும் அதிகாரி 'இது மாமிசம். புழுக் கள் இல்லை, அதுதான் சமைக்கப்படும்' என்கிறான். இதனால் ஆத்திரமடையும் மாலுமிகள் சாப்பிட மறுத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

உண்ணாவிரதம் போராட்டமாக மாறுகிறது. நடுக் கப்பலில் பிரச்சனைகள், விவாதங்கள் என போராட்டம் சூடு பிடிக்கிறது. ஒரு கட்டத்தில் அதிகாரிகளுக்கெதிரான பெரும் கலகமாக வெடிக்கிறது. கப்பலில் சாப்பிட மறுக்க வேலை செய்ய மறுக்க, கொழுத்த அதிகாரிகளோ துப்பாக்கி முனையில் அவர்களை நிறுத்துகிறார்கள். பணியாளர் எதிர்த்து நிற்கும் கலகக்காரர்களின் தலைவன் சுட்டுக்கொல்லப்படுகிறான். ஆனால் கலகம் தொடர்கிறது. அதிகாரிகள் கொல்லப்படுகிறார்கள். கப்பலில் இருந்து வீசியெறியப்படுகிறார்கள். கப்பல் ஒடேசா துறைமுகம் வருகிறது.


சுடப்பட்ட தலைவனின் பிணம் துறைமுகத்தில் அனாதையாக கிடக்கிறது. மறுபுறமோ இந்தச் செய்தி காட்டுத் தீயைப் போல பரவுகிறது. மக்கள் கூடுகிறார்கள். கலகத்தின் விளைவாக இறந்த தங்கள் தோழனுக்கு இறுதி மரியாதை செலுத்த சாரைசாரையாக வருகிறார்கள். அதிகார வர்க்கத்தின் கொடுமைகளுக்கு எதிராக அணி திரளுகிறார்கள். மக்கள் எழுச்சியடைகிறார்கள்.

ஒடேசா படிக்கட்டுகளில் மிக சாதாரணமாக பொழுதை கழிக்கும் எண்ணற்ற மக்கள் கூட்டத்தின் மீது ஜார் இராணுவம் எந்தவித அறிவிப்புமில்லாமல் தாக்குதலை தொடுக்கிறது. மக்கள் சிதறி ஓடுகிறார்கள். குழந்

## ரஷ்யத் திரைப்படம்

தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரைக் கொன்று வெறியாட்டம் ஆடுகிறது ஜாரின் இராணுவம்.

பொதம்கின் கப்பலை கலகக்காரர்கள் கைப்பற்றி கடலில் செலுத்துகிறார்கள். அதைத் தடுக்க அரசுப் படையும் இன்னொரு போர்க்கப்பல் இவர்களை நெருங்கி சரணடையச் சொல்லுகிறது. மீறினால் பொதம்கின் தாக்கப்படலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டு தாக்குதல் தொடுக்க தயாராகிறது. எந்த நேரத்திலும் கப்பல், எதிர்க் கப்பலால் அழிக்கப்படலாம் என்ற சூழலில் பொதம்கின் மாலுமிகள் துணிவுடன் எதிர்கொண்டு



◀ நிலவன் ▶

நிற்க, சுட வேண்டிய பீரங்கிகள் தாழ்ந்து பொதம்கினுக்கு வழிவிடுகின்றது. தங்களின் தோழர்களின் ஆதரவால் எழுச்சியடைந்த பொதம்கினின் தோழர்கள், சுதந்திரமாக கடலில் செல்கிறார்கள். கலகம் வெற்றியடைகிறது.

படத்தின் இந்த தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியை இயல்பாக பார்வையாளர்களுக்கு புதிய வடிவத்தில் தான் முதல் வெற்றி. சுதாரணத்திற்கு சுடப்பட்டு ஒடேசா துறைமுகத்தில் அநாதை பிணம்போல கலகக்கார தலைவனின் பிணம் கிடத்தப்பட்டிருக்க, இறுதி மரியாதை செலுத்த வரும் ஒடேசா மக்களின் அனுதாபம் பேரெழுச்சியாக மாறும் காட்சியைப் பாருங்கள்.

முதலில் செய்தி சிலருக்குத் தெரியும், பின்பு அது பலருக்கு, என தீயாய் பரவும். மக்கள் கூட ஆரம்பிப்பார்கள். உடனடியாக பல கம்யூனிஸ்ட்டுகள் பிரசாரம் செய்வார்கள். மக்களிடையே அரசியல்படுத்தப்படும், அதற்கான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படும். முதலில் துக்கத்துடன் தன் தோழனை காக்கச் சிவக்கும் கைகள் கட்டப்படும். பின்பு தொடர் அரசியல்படுத்தல்களின் விளைவு விரல்கள் மடக்கி முஷ்டிகள் உயரும். 'போராடுவோம்' என மக்கள் எழுச்சியடைவார்கள். இந்தக் காட்சி, மக்கள் திரள் பற்றிய அரசியலை போதிக்கும் அதே நேரம் ஒரு திரைப்பட வடிவம் என்ற முறையிலும் மிக நேர்த்தியான காட்சிகளைக் கொண்டிருக்கும்.

அமைதியாக கூடும் மக்கள் மீதான எதிர்பாராத தாக்குதல், அந்தத் தாக்குதல் ஏற்படுத்தும் போக்குகள், ஜார் இராணுவத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட வெறி என அந்த



நச்சுச் சூழல் திரையில் வரவேண்டுமென்பது மாத்திரம் இல்லை. அதை பார்க்கும் மக்களிடம் அனுதாபத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதும் இலக்கல்ல. அதைப் பார்க்கும் மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே புரட்சிகர இயக்குநரின் இலக்கு. அந்த இலக்கும் உள்ளடக்கமும் தொடர்ச்சியாக மாறும் காட்சிகளையும், பெரும் மக்களின் சிதறலையும் அவர்களை கொல்லும் இராணுவத்தின் கோரமுகத்தையும் சிதறி ஓடும் மக்களில் மடியும் குழந்தைகள் என அந்த கோரமான காட்சியின் வீரியம், அதைத் தொடர்ந்து இனி போராடுவது தவிர வழி என ஒரு தாய் தன் இறந்த குழந்தையை எடுத்துக் கொண்டு தனி ஒருவராக அந்த இராணுவத்தை எதிர்த்து முன்னோக்கி நகருவதும் சிலிர்க்க வைக்கும் காட்சி. அதை வார்த்தைகளால் விவரிக்கிறதை விட பார்த்து அனுபவிக்க வேண்டும்.


பொதம்கின் கப்பலை நோக்கி இன்னொரு இராணுவக் கப்பல் பீரங்கிகளை உயர்த்தி குறிபார்க்க, என்ன நடக்குமோ என்று வெறித்துப் பார்க்கும் கப்பல் மாலுமிகளின் நிலையையும், அந்த நேரத்திலும் எழுச்சியுடன் சரணடையாத வீரத்தையும் பார்க்கும் பார்வையாளர்கள் 'சுட்டுத்தே' என துப்பாக்கியை மீறி திரையை நோக்கி முனைப்பு கொள்வதுதான் இந்த படத்தின் சிறப்புத் தன்மை.

பல கோடிகள் செலவில் முன்னேறிய நுணுக்கங்களுடன் இலாபம் மட்டும் நோக்கம் என எடுக்கப்பட்ட பாட்டாளிக் முதல் எத்தனையோ படங்களை ஒப்பிடும் போது வசதிகள் குறைவான நிலையில் எடுத்த ஒரு படம் வெல்கிறது என்றால், அது காலந்தோறும் வரும் மக்கள் எழுச்சியின் சாட்சி. மக்கள் இருக்கும் வரை மக்கள் எழுச்சி மறைவதில்லை. மக்கள் எழுச்சி இருக்கும்வரை இந்தக் கலைப்படைப்புகள் மறையாது.

இனி போர்க்கப்பல் பொதெம்கினை பாருங்கள், எழுச்சி கொள்ளுங்கள். இத்திரைப்படத்தை யூ-டியூபில் சென்று 'டவுன்லோட்' செய்தும் பார்க்கலாம். பார்க்க...

http://www.youtube.com/watch?v=Bh2SuJrEjwM&feature=player_embedded#!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படியும் நடக்கிறது

## சமுதாயத்தின் மறுபக்கம்



### மனைவியை விற்றுப் பிழைத்த கணவன்

பிலியந்தலை மாகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான கணவர், விபச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த அவரது 19 வயதான மனைவி மற்றும் 33 வயதான இன்னொரு பெண் ஆகியோரை நுகேகொட பொலிஸார் கைது செய்துள்ளனர். தனது மனைவி உட்பட மேலும் ஒரு பெண்ணையும் தான் விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாக கணவர் பொலிஸ் விசாரணைகளில் தெரிவித்திருக்கிறாராம். இவர்கள் இருவரும் மடபாத்தை, இரத்மலானை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### வடைக்குள் வண்டு வந்தது எப்படி?

யாழ் பொது நூலகத்தில் கடந்தவாரம் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் கலந்து சிறப்பித்த மாநகரசபை உறுப்பினர் ஒருவருக்கு கொடுத்த வடைக்குள் வண்டு காணப்பட்டதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதாம். யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கடையில் இருந்து பெற்ற வடைக்குள்ளேயே இந்த வண்டு காணப்பட்டதாம். மேற்படி உறுப்பினர் [illegible] தன்னுடன் பணிபுரியும் சக பெண்பணியாளர் மீது அங்கசேஷ்டை செய்ததாக [illegible] தெய்வம் நின்றறுக்கும் என்பது இதுதானோ.

### யாழ்ப்பாணத்து மாம்பழத்துக்கு மவுசு

கடந்தவாரம் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்த அமெரிக்க காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் எங்கே வாங்கலாம் என்று அரச அதிபரிடம் கேட்டனராம். அத்துடன் நெல்லிரசம் எங்கே பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர்கள் கேட்டனராம். மாவட்ட செயலகத்தினர் திருநெல்வேலிச் சந்தைக்கு அவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு மாம்பழம் மற்றும் நெல்லிரசம் என்பனவற்றை வாங்கிக் கொடுத்து வழி அனுப்பி வைத்தனராம்.

### செய்யும் தொழிலே தெய்வமல்லவா?

இரணைமடுச் சந்திப் பகுதியிலுள்ள தேவாலயம் ஒன்றின் பின்னால் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை ஆஹா ஓஹோ என்று நடைபெறுகின்றதாம். குறிப்பிட்ட பிரதேசத்தில் வீட்டு வேலைகளுக்கு கூலி வேலைக்காக வருபவர்கள் நன்றாக குடித்துவிட்டு வருவதால் வேலைகளில் தாமதமும் வீண் பணவிரயமும் ஏற்படுவதாகவும் இதனால் வீட்டுக்காரர்கள் அதிருப்தியடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வேலைக்கு வரும் போதே குடித்துவிட்டு வருவதால் தம்மால் வேலைகளுக்கு வேறு கூலியாட்களை தேடிப்போகவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

### நிரந்தர வீடுகளின்றி அவதி

நெடுங்கேணி மதியாமடு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்கள் நிரந்தர வீடுகளின்றி அவதிப்படுகின்றனர். அரசசார்பற்ற நிறுவனமொன்று கட்டிக் கொடுத்த தற்காலிக கொட்டகைகள் கூட வாழுவதற்கு வசதியற்ற நிலையில் இருப்பதாகவும், நிவாரணங்களும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தாம் என்னசெய்வது, தமக்கு யாராவது உதவ முன்வருவார்களா என்று இப்பகுதி மக்கள் தினமும் அரச அலுவலக வாசல்களில் காத்துக் கிடக்கின்றனர். தற்பொழுது மழை பெய்து வருவதால் பல சிரமங்களை இப்பகுதி மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

### பகிடிவதையால் செவிப்பறை கிழிந்தது.

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் புதுமுக மாணவனொருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதையின் போது சிரேஷ்ட மாணவர்களால் இவர் துன்புறுத்தப்பட்டதாகவும் இதன்பொழுது அவர்கள் விட்ட அறையில் செவிப்பறை கிழிந்து 14ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பகிடிவதை செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையிலும் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### கடத்தப்படும் வன்னி நிலத்தின் மரவளம்

முல்லைத்தீவு பிரதேசத்தின் பெறுமதியான மரங்கள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டுவருகின்றன. நெடுங்கேணிபாதையூடாக [illegible] ஏற்றிக்கொண்டு தினமும் பெருந்தொகையான பாரவூர்திகள் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வன்னிக் காடுகளிலுள்ள பெறுமதிமிக்க மரங்கள் அரசின் செல்வாக்குடைய சிலரால் வெட்டப்பட்டு தென்பகுதிகளில் விற்பனைக்காக ஏற்றிச் செல்லப்படுகின்றன. இது பற்றி அதிகாரத்திலுள்ளவர்கள் கைகட்டி வேடிக்கை பார்ப்பதாகவும் எவரும் இவ்விடயத்தில் அக்கறையெடுப்பதாகத் தெரியவில்லையெனவும் இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

### சாமி வாகனங்களையும் விட்டு வைக்கிறார்களில்லை

குடாநாட்டுக் கோயில்களின் விக்கிரகங்களைத் திருடியவர்கள், திருடப்பட்ட கடவுள்கள் எழுந்தருளுவதற்கு வாகனங்களையும் திருடிச்சென்றுள்ளனராம். குடாநாட்டு இந்துக் கோவில்களில் நடைபெறும் திருட்டுக்களை தடுத்து நிறுத்துவதற்காக நாகவிகாரையில் கலந்துரையாடலொன்று கடந்தவாரம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர், படையினரின் ஆதரவுடனேயே கோவில் பொருட்கள் திருடப்படுகின்றன என்றும் சாதாரணமாக மறைத்துச் செல்ல முடியாத பெரிய கோவில் தெய்வங்களின் வாகனங்களைக் கூட இரவு வேளைகளில் படையினரைத் தாண்டி எவ்வாறு எடுத்துச் செல்ல முடிந்தது எனவும் சந்தேகம் தெரிவித்துள்ளார். நல்லவேளை கோயில் கட்டடங்களையாவது விட்டு வைத்திருக்கின்றார்களே.



# ஊடக மயக்கம்

### அரச வானொலிகளில் கலை வட்டங்கள்

அரசாங்க வானொலிகள் குறிப்பிட்ட ஒரு வட்டத்துக்குள்ளேயே இயங்குகின்றன. அதாவது ஒருசில நேயர்கள் மட்டுமே மாறிமாறி பாடல்களை கேட்கின்றனர். அவர்கள் ஒரு நண்பருக்கு பாடல் கேட்டால் அந்த நண்பர் அவருக்கு மாறி பாடல் கேட்பார். இவ்வாறு ஒரு குழுவே மாறிமாறி பாடல் கேட்கின்றது. இதனால் ஒரு நேயரின் பெயர் பல தடவைகள் உச்சரிக்கப்படுகின்றது. [illegible]

இதனை கேட்கின்ற சாதாரண நேயர்களுக்கு கடுப்புத்தான் வருகின்றது. இவர்களுக்காகத்தான் வானொலி நடாத்தப்படுகின்றதா என்று எண்ணத் தோன்றுகிறது. ஏன் அரச வானொலிகள் இவ்வாறு [illegible] புரியவில்லை.

[illegible]

### இணைய வானொலிகளின் அதிகரிப்பு

[illegible]

### வயிறு குலுங்க வைக்கும் 'ஹெராட் 7'

[illegible]

- [illegible]

ஊடக மயக்கம் பகுதி இருக்கிறம் இதழில் இடம்பெறும். இச் ஊடகங்களில் நீங்கள் கேட்ட பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்புங்கள். [illegible]

"ஊடக மயக்கம்", "இருக்கிறம்"
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
மின்னஞ்சல்: irukiram@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதம்

உங்கள் இருக்கிறம் பத்திரிகையில் 'ஆசிரியர் தலையங்கம்' தொடங்கி 'மிஸ்டர் குறோ', 'உறவின் கதை', 'இப்படியும் நடக்கிறது', 'நேர்முகம்', 'நேரடி ரிப்போர்ட்', 'அதிரடி ரிப்போர்ட்', 'தொடர்', 'தொழிநுட்பத் தகவல்கள்', 'ஜோக்ஸ்' என எல்லாமே சிறப்பாக இருக்கின்றன. ஒரே ஒரு கவலை. மிகவும் விறுவிறுப்பாக போய்க்கொண்டிருக்கும் 'கறுப்பு செப்டெம்பர் அழகி' முடியப்போகின்றதே. முடிவை எதிர்பார்த்து இப்போதே அடுத்த இதழுக்கு ஓர்டர் செய்துவிட்டேன்.

**மயில்வாகனம் ரதிதரன், பூந்தோட்டம், வவுனியா**




24.10.2011 இதழ் பார்த்தேன். உண்ணாவிரதம் இருந்த தலைவர்களுக்கு ஊர்சுற்றியில் நல்ல உபதேசம் வழங்கப் பட்டிருக்கிறது. பலாலி ஆசிரியர் கலாசாலை பற்றிய 'நேரடி ரிப்போர்ட்' பல விடயங்களைத் தந்திருந்தது. ஆளாளுக்கு குற்றம் சுமத்தி கடைசியில் நடந்தது என்ன? அவ் ஆசிரிய மாணவர்களின் வகுப்புகள்தான் வீணாகின. கல்விச் சமூகத் திற்குள்ளும் அரசியல் புகுந்துவிடக்கூடாதென்பதுதான் என் போன்ற எல்லோரதும் அவா.

**வாணி விக்னேஸ்வரன், நெல்லியடி, யாழ்ப்பாணம்**

கடந்தவார 'இருக்கிறம்' இதழ் பார்த்தேன். பலாலி ஆசிரியர் கலாசாலையில் உண்மையில் என்ன நடந்ததென்பதை விரிவாக தந்திருந்தீர்கள். அரச அதிபரின் பதில் பலரையும் தெளிவுபடுத்தியிருக்கும் என நினைக்கிறேன். 'இருக்கிறம்' வாராவாரம் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பரோ சூப்பர்.

**கலாரதன், பருத்தித்துறை, யாழ்ப்பாணம்**

இருக்கிறமின் அபிமான வாசகர்களில் நானும் ஒருவன். மனித வாழ்வின் மர்மங்கள் தெரியாமல் வாழும் ஒவ் வொருவரும் தவறாமல் வாசிக்க வேண்டிய ஒன்றுதான் 'தத்துவ விசாரம்' விடைதேடும் பல கேள்விகளுக்கு பதில் இங்குகிடைக்கின்றது. பல உண்மைகளை உணர வைக்கின்றது. காலத்துக்கு அவசியமான இப்பகுதியை தொடர்ந்து தருவதற்கு எனது நன்றிகள்.

**கமலநாதன், கல்லடி,
உப்போடை மட்டக்களப்பு**

24.10.2011 வெறிவந்த 'இருக்கிறம்' வார இதழ் பார்க்கக் கிடைத்தது. பல நல்ல விடயங்களை கூறியிருந்தீர்கள். தமிழர் பூர்வீகமாக வாழ்ந்துவந்த பிரதேசத்தில் தமிழர்களுக்கு இடமில்லாத நிலையை உணர்த்தி நின்றது 'உண்மையின் பதிவு'. விலங்குகளே இல்லாத இடத்தில் சரணாலயங்கள் எதற்கு? இன்னும் கொஞ்ச காலத்தில் மக்களே இல்லாத இடத்தில் வீடுகளைக் கட்டினாலும் சந்தேகப்படுவதற் கொன்றுமில்லை. எல்லா விடயங்களும் தரமாக இருக்கின்றன. 'க்ரைம்' பக்கத்தைப் பார்த்து வெட்கித் தலைகுனிந்தேன். இப்படிச் சென்றால் நாம் என்று முன்னேறுவது.

**யோ. கோபிநாத், கொக்குவில் மேற்கு**

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பழைய...

அதற்கேற்ற முறையில் ஒவ்வொரு ஆக்கிரமிப்புப் போராட்டத்திற்கும் வெவ் வேறு இணையத்தளங்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

இவற்றைத் தவிர, பேஸ்புக், டிவிட்டர் என்று ஏராளமான சமூக வலைப் பின்னல்களுக்கூடாக மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பில் இருக்கின்றனர். இதன் பயனாக, போராட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் எங்கும் மீறாமல் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன. இக்கூட்டுப் போராட்டமானது 'ஒன்றாக ஆக்கிரமி' (Occupy Together) என்னும் போராட்டமாக மிளிர்ந்திருக்கிறது. ஜனநாயகத்துக்கும் சமத்துவத்துக்குமாகப் போராடும் இந்த இயக்கம் அந்த நோக்கங்களின் பண்பாட்டினை செயற்பாடுகளாகத் தம்மகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதில் இந்தப் போராட்டங்கள் தீவிரம் காட்டியிருக்கின்றன. திரும்ப எங்கள் தலைவர்களின் நடவடிக்கைகளை இதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்கள் எவ்வளவு தூரம் கொள்கைப் பற்றுடன் இயங்கியிருக்கிறார்கள் என்று அனுமானிக்கலாம்.

மூன்றாவதாக யுக்திகளின் பிரயோகமாகும். அன்று தொடக்கம் இன்று வரை சும்மா உண்ணாவிரதம்தானா? இதைத்தவிர செய்வதற்கு ஒன்றுமில்லையா? பழங் காலத்தைச் சேர்ந்த ஓரிருவர் மட்டும் ஈடுபட்டால் இப்படித்தான் நடக்கும். வோல்ட் ஸ்ட்ரீட் இயக்கத்திலோ தினந்தினம் ஏற்பாட்டுக் குழுவினர் சந்தித்து புதுப்புது யுக்திகளைக் கண்டு பிடிப்பர்.

ஒவ்வொரு நாளும் சுதந்திர சதுக்கத்திலிருந்து வெளியேறி வோல்ட் ஸ்ட்ரீட்டுக்குப்போய் வீதி நாடகங்களிலும் வேறு கலை நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டு விட்டுத் திரும்புவர். சில சமயங்களில் பல்தேசிய வங்கிகளில்போய் அங்கு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் தமது கணக்குகளை மூடும் சடங்குகளும் கூட்டாக நடைபெறும். இப்படி மக்கள் செய்யும்போது வங்கியாளர்கள் படும் அவஸ்தையையும் பயத்தையும் காணவேண்டுமே.

அடுத்து, பொலிஸ் கைது செய்தால் என்ன செய்யவேண்டும் என்கின்ற துண்டுப் பிரசுரங்கள் ஆயிரக்கணக்கில் விநியோகிக்கப்படுகின்றன. மிகவும் நகைச் சுவையாய் எழுதப்பட்டிருக்கும் அத்துண்டில் சட்டத்தரணிகளது தொலைபேசி எண்களும், என்ன செய்யவேண்டும் என்கின்ற விபரங்களும் அடங்கும். கடைசியில், சிறைச்சாலை அனுபவம் அவலந்தான் ஆனால் அதிலிருந்து வெளியே வருபவர்களைத் திரும்ப இங்கு எதிர்பார்த்து நிற்போம் என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கும்.

கடந்த ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி நியூயோர்க்கின் புரூக்லின் பாலத்தினடியில் 700 பேர்கள் கைதானார்கள். பல இடங்களில் மக்கள் மைக் வசதிகள் இல்லாமல் நின்று கொண்டிருப்பார்கள். அங்கு யாராவது சனத்திரளில் பேச எழுந்தால் அவர் ஒவ்வொரு வசனத்தைச் சொல்லச் சொல்ல அவரைச் சுற்றிக் குழுமி யிருக்கும் மக்கள் தாங்கள் அவ்வசனத்தை ஒன்றாகப் பலமாகச் சொல்லுவதன் மூலம் தூர இருக்கும் மக்களுக்கும் கேட்கக் கூடியதாகச் செய்வார்களாம்.

இந்தளவு நடவடிக்கைகளினால் அங்குள்ள வெகுசன ஊடகங்களினது மொழியும் மாற்றம் கண்டுள்ளது. என்ன நகைச் சுவை நிகழ்ச்சியானாலும், அரசியல் மேடைப் பேச்சானாலும் எல்லோருமே வோல் ஸ்ட்ரீட் இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடத் தவறுவதில்லை. இதனால் சகல மக்களினதும் சிந்தைகளில் இது நிரம்ப அவர்களின் ஆதரவினைப் பெற்றுவிட்டது.

இவையெல்லாம் வாசித்துச் சுவைக்க வல்ல நாம் ஒவ்வொருவரும் நடவடிக்கையில் இறங்குவதற்கான அமெரிக்க மக்களின் வழிகாட்டல்களாகும். இதனைச் செயற்படுத்துவதற்கு அதற்குரிய புதிய சந்ததிச் சிந்தனையாளர்கள் தேவை. அப்படியானவர்களை ஒன்றிணைத்துக்கொண்டு நாமும் உலக மக்களுடன் கைகோர்க்கப் புறப்படலாம்.

## நிறைவேற்றப்படாத ஆசைகள்

கொட்டும் அருவியிலும்
குளிர்ந்த தென்றலிலும்
பச்சை வயல்களிலும்
பனி செய்யும் பூமியிலும்
காலாற நான் நடந்தால்
கவலையெதுவும் தெரியாதே

எனக்கும் சிறகுகள் இருந்தால்
வானில் பறந்திடுவேன்
சூரியனைச் சுட்டெரிப்பேன்
சந்திரனில் தலை குளிப்பேன்
விண்மீன்களுடன் தேநீர்
அருந்துவேன்
சந்தோசக் களிப்பில்
நான் சிறகுகளை
வெட்டிக்கொள்வேன்

கல்லறைக்குள் என் சிதை
அடக்கப்பட்டபோது
உடைத்தெழுந்து ஓடிவந்து
இவ் உலகை நான் ரசிப்பேன்
ஆவியாய் என்னால்
இயன்ற மட்டும்
எம் உறவைக் காத்திடுவேன்

அப்படியே இத்தனையும்
கேட்டுவிட்டு என் மனசு
ஆசைகள் எதுவுமற்ற
தூய பெட்டகம் என்பேன்
எனக்குத் தெரியும்
இவையனைத்தும்
ஏட்டினிலே மட்டும்தான்

**- யாழினி. யோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா NEWS FEED

★ இன்று வவுனியா மாவட்டத்தில் உள்ள அரசாங்க நிறுவனங்களும் பொது மக்களுமாக நிலத்தடி நீரின் ஆபத்தினை அறிந்தும், அதனால் ஏற்படும் பிரச்சினை சிக்கலை தவிர்க்கும் முகமாக தினமும் 29000க்கும் மேற்பட்ட போத்தல் குடி தண்ணீரை தினமும் பெருஞ் செலவில் பயன்படுத்துகின்றனர்.


★ மாதாந்தம் 8 இலட்சத்து 70 ஆயிரம் (870,000) குடிதண்ணீர் போத்தலுக்கான செலவுகளை மேற்கொள்கின்றனர். (பல மில்லியன் ரூபா) இதனால் வவுனியா மாவட்ட மக்கள் தினமும் குடி தண்ணீருக்காக பெருமளவு நிதியை ஏக்கர் மேட்டுக் காணி வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

★ உறுதிப்பத்திரம் உடையவர்களுக்கு சந்தை விலைக்கு ஏற்ப தேசிய நீர் வழங்கல் சபை இழப்பு நிதி வழங்கும்.

★ அத்துடன் இன்னும் 7 மேலதிக நன்மைகளையும் வழங்கத் தயாராக உள்ளனர்.

★ ஒரு நாளைக்கு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அதாவது வவுனியா, வவுனியா தெற்கு, வவுனியா கிழக்கு பிரதேசம் உள்ளிட்ட 21 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 60 ஆயிரத்து 294 மக்கள் குடிதண்ணீருக்காக அல்லல்படுகின்றனர் என்ற விடயம் மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

★ இத்தேவை 2016இல் 63 ஆயிரத்து



# வவுனியாவில் பேராற்று குடிதண்ணீர் திட்டம் ஏன்?

வீணாக செலவிடுகின்றனர்.

★ இந்நிதியும் வவுனியா மாவட்டத்திற்குள் சுழல்வதில்லை, ஏனைய வெளிமாவட்டத்திற்கே செல்வதாக வவுனியா மக்கள் தமது கவலையை வெளியிட்ட வண்ணம் உள்ளனர்.

★ ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) தனது கடன் திட்டத்தின் ஊடாக 3 ஆயிரத்து 568 மில்லியன் ரூபாவை பேராற்று (பறங்கியாறு) திட்டத்தை முன்வைத்து அதன் ஊடாக வவுனியா மாவட்ட மக்களுக்காக நன்னீர் குடிதண்ணீர் வழங்கலை விரைந்து செயற்படுத்த முன்னிறுத்துகின்றது.

802 மக்களின் தேவையாகவும், 2020 இல் 71 ஆயிரத்து 863 மக்களின் தேவையாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

★ எனவே பேராற்றினை வழிமறித்து வவுனியா மக்களின் குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட்டு வறுமை குறைக்கப்பட வேண்டும் (Powerly Ale-viation) என்பது அனைத்து தரப்பினரின் ஏகோபித்த ஒருமித்த குரலாகும்.

★ ஏனெனில், ஒரு நாளைக்கு வவுனியா மக்கள் 29 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிதண்ணீர் போத்தல் தேவையை



★ இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னிறுத்துவதற்கான சாத்திய வள அறிக்கை 2008இல் முடிவடைந்துள்ளது.

★ இதன்போது பேராற்று திட்டத்துக்கான அணைக்கட்டை (DAM AXIS) முன்னிறுத்தும்போது அதனுடன் சம்பந்தப்பட்ட 50 விவசாயிகளின் பிரச்சினையை முழுமையாக உள்வாங்கி அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மாற்றுக் காணிகளை வழங்கி உதவுமாறு அமைச்சர் தினேஷ் குணவர்தன கேட்டுள்ளார்.

★ அத்துடன் விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கும்போது

★ காணியை இழந்த சகலருக்கும் மாற்றுக்காணி அதேதரத்தில் வழங்கப்படும்.

★ மேட்டுக்காணிக்கு-மேட்டுக்காணியும், வயல் காணிக்கு-வயல் காணியும் வழங்கப்படும்.

★ இழக்கப்படும் காணியில் கிணறு, வீடு போன்ற கட்டடங்கள் இருக்குமாயின் அதற்கான இழப்பீட்டு நிதி வழங்கப்படுவதுடன், மேலதிகமாக 1/2

பூர்த்தி செய்வதற்காக 15 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவை வீணாக செலவு செய்து வருகின்றனர்.

★ இந்நிதிப் பயன்பாடு உடன் குறைக்கப்பட்டு விவசாயிகளின் தேவைகளும் நிறைவேறுகின்ற அதே நேரம் குடிதண்ணீர் பேராறு ஊடாக கிடைக்க அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி ஆசிய அபிவிருத்தி வங்கியின் முழுநிதிப் பயன்பாட்டை அடையவேண்டும் என்பதே வவுனியா மக்களின் நோக்கமும் இலக்கும் ஆகும்.

★ எனவே இதுவரை காலமும் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி அதனால் அனேகருக்கு தினமும் ஏற்படும் சிறுநீரகக்கல் மற்றும் ஏனைய நீரினால் ஏற்படும் நோய்கள் குறைக்கப்படும் வாய்ப்பு ஏற்படும்.

★ அத்துடன் சுத்தமான- சுகாதாரமான குடிதண்ணீர், நிலத்தை நீடித்த வாழ்வாதாரத்திற்கு பேராறு ஒன்றே முழுமையான தீர்வை வவுனியா மக்களுக்கு கொடுக்கவுள்ளது.

# இவர்களுக்கு விமோசனம் எப்போது?


★ வவுனியா, செட்டிகுளம், காந்தி நகரைச் சேர்ந்த கட்டையன் யோகேஸ்வரன் என்பவர் கடந்த 01.07.2009 அன்று சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு 15.01.2010 அன்று விடுவிக்கப்பட்டவர். இவரை மீண்டும் 18.01.2010 அன்று கைதுசெய்து வவுனியா சிறையில் அடைத்துள்ளனர். இவருக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

★ பொன்னம்பலம் சிவகுமார் என்பவர் மன்னார் முருங்கன் தம்பனைக் குளத்தைச் சேர்ந்தவர். இவர் கடந்த 02.03.2007 முதல் எவ்வித வழக்கு விசாரணையுமின்றி சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

★ மரியதாஸ் நேவில் டெல்றொக்சன் என்பவர் யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்தவர். இவர் 17.10.2009 அன்று வவுனியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

★ மட்டக்களப்பு, பண்டைக்குடாவெளி, காரைக்காட்டுப் பகுதியிலுள்ள வேப்பவெட்டுவானைச் சேர்ந்த ரங்கசாமி நந்தகுமார் கடந்த 20.09.2009 முதல் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார்.

★ இவர்களைப் போன்றே வவுனியா சிறைச்சாலையில் 48 கைதிகள் இருக்கின்றனர்.



தற்போதுவரை வவுனியா மெனிக்பாம் முகாமில் மட்டும் 1687 குடும்பங்களைச் சேர்ந்த ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலைஞர் மடம் மற்றும் புதுக்குடியிருப்பின் சில பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இப்பகுதிகளில் மீள் குடியமர்வுக்கு தடை விதித்துள்ள அரசு அப்பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயமாக்கவும் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்த வன்னி மக்களது இடைத்தங்கல் முகாம்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டுவிட்டன. கடைசியாக மூடப்பட்ட கொடிகாமம் இராமாவில் முகாமிலிருந்த எஞ்சிய வன்னி மக்கள் அனைவரும் கோம்பாவில் முகாமிற்கே அனுப்பப்பட்டிருந்தனர்.

வவுனியா பூவரசங்குளத்திற்கும் இரணை இலுப்பைக்குளத்திற்கும் இடையில் உள்ள இடங்களில் ஒன்று வேலங்குளமாகும். காட்டுப் பகுதியான வேலங்குளத்தில் இராணுவத்தின் பாரிய படைமுகாம் அமைக்கப்பட்டு அப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பகுதியாகும். வேலங்குளம், சின்னத்தம்பனை மற்றும் மடுக்குளம் ஆகிய பிரதேசங்களில் இவ்வருட ஆரம்பத்தில் இராணுவத்தினரால் காடுகள் அழிக்கப்பட்டது தொடர்பில் ஏற்கனவே செய்திகள் வெளிவந்திருந்தன.

வன்னியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச நிறுவனங்களால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படாது. மேற்படி தேவைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இவ்விடயத்தினை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று தடுத்து நிறுத்த அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பூவரசங்குளம் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org